ஏ.என்.கொஸிஜின்

# 1976-1980 சோ.சோ.கு.ஒ. தேசியப் பொருளாதார வளர்ச்சிக்கான வழிகாட்டிகள்

XXV வது சோ.க.க. காங்கிரஸ்

மாஸ்கோ 1976

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ. என். கொஸிஜின்

# 1976-1980 சோ. சோ. கு. ஒ. பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படைத் திசைவழிகள்

1976 மார்ச் 1

இலங்கையிலுள்ள சோவியத் ஸ்தானிகராலய
தகவல் பகுதியின் வெளியீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகதி, அச்சகம்
91/15, கொட்டா ரோட்
கொழும்பு—8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏ. என். கொஸிஜின்

சோ. சோ. கு. ஒ. அமைச்சரவைத் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோ. க. க.வின் 25வது காங்கிரஸில் 1976 மார்ச் 1ந் திகதி சமர்ப்பித்த அறிக்கை.

பிரதிநிதித் தோழர்களே,

சோ. க. க. மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் லியோனிட் பிரெஷ்னேவ் காங்கிரசுக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் முன்வைக்கப்பட்ட பணிப்புகளாலும் பணிகளாலும் கட்சியின் பன்முக வேலைகளிலும் வழிநடத்தப்படுவது என்று எமது காங்கிரஸ் மிகுந்த உற்சாகத்துடனும் பூரண ஒருமைப்பாட்டுடனும் இன்று தீர்மானித்தது.

இன்றைய கட்டத்தில் கட்சியினது பொருளாதார, சமூக கொள்கைகளின் அடிப்படையான, அவசரமான பிரச்னைகளை அறிக்கை முழுமையாக ஆய்வு செய்துள்ளதாலும் சோ. க. க. வின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையின் பிரதான திசைவழிகளை வரையறுத்தளித்துள்ளதாலும் சோவியத் சமுதாயத்தினது வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள இந்த முடிவு கட்சியை முழுமையான ஒரு மார்க்ஸிய - லெனினிய திட்டத்தால் ஆயுதபாணியாக்கியுள்ளது. இக் கட்சித் தஸ்தாவேஜு கம்யூனிஸ நிர்மாணத்தின் தத்துவத்திற்கும் நடைமுறைக்கும் மாபெரும் பங்களிப்பைச் செய்கிறது.

"*1976 — 1980ல் சோ. சோ. கு. ஒ. பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படைத் திசை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகள்'' எனும் நகல் அறிக்கையை சோ. க. க. மத்தியக் கமிட்டி காங்கிரசுக்குச் சமர்ப்பித்துள்ளது. கட்சியின் பொருளாதார - சமூகக் கொள்கைக்கு அமைய எமது நாட்டில் கம்யூனிஸத்தின் பொருளாயத - தொழில் நுட்ப அடித்தளத்தை மேலும் நிர்மாணிப்பதற்கான முழுமையான வேலைத் திட்டத்தை நகல் அறிக்கை முன்வைத்துள்ளது.

கடந்த காங்கிரசுக்குப் பின்னுள்ள ஐந்தாண்டுகள் சோ. க. க. வின் 24 வது காங்கிரஸ் வகுத்தளித்த அரசியல் மார்க்கம் விஞ்ஞான அடிப்படையைக் கொண்டது என்பதையும் பெரிதும் வலுவானது என்பதையும் முழுமையாக ஊர்ஜிதம் செய்துள்ளது. தேசியப் பொருளாதாரத்தில் புதிய பெரும் வெற்றிகள் ஈட்டப்பட்டுள்ளன. கம்யூனிஸ பிரக்ஞை மட்டம் உயர்ந்துள்ளது. அத்துடன் உழைக்கும் மக்களின் உற்பத்தி, சமூக நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. சோஷலிஸ ராஜ்யம் மேலும் வலுப்பட்டுள்ளது. எமது பல தேசிய இனத் தாயகத்தினது மக்களின் சகோதர ஒத்துழைப்பு மேலும் வளர்க்கப்பட்டுள்ளது. கட்சியினதும் மக்களினதும் ஐக்கியம் தகர்க்கப்பட முடியாததாகும்.

சர்வதேச விவகாரங்களில், சோஷலிஸ சமாஜத்தைச் சேர்ந்த நாடுகளுடனான பன்முக உறவுகளும் ஒத்துழைப்பும் விரிவடைந்துள்ளது குறித்தும் இவற்றின் ஒருமைப்பாடும் ஐக்கியமும் வலுப்பட்டுள்ளது குறித்தும் சோவியத் மக்கள் ஆழமான அகமகிழ்வு அடைகிறார்கள். சோவியத் யூனியனுக்கும் பல்கேரியா, ஹங்கேரி, ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு, கியூபா, மொங்கோலியா, போலந்து, ருமேனியா, செக்கோஸ்லவாக்கியா உட்பட வார்ஸோ ஒப்பந்த, பரஸ்பர பொருளாதார உதவி கவுன்சில் நாடுகளுக்குமிடையிலும் சோவியத் யூனியனுக்கும் யுகோஸ்லாவிய சோஷலிஸ சமஷ்டிக் குடியரசுக்கும், வியத்நாம் ஜனநாயகக் குடியரசுக்கும், கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையிலும் நட்புறவுப் பிணைப்புகள் மேலும் வளர்ந்து வலுப்பட்டுள்ளன.

எமது கட்சியின் 24 வது காங்கிரஸ் அங்கீகரித்த சமாதானத் திட்டத்தின் அடிப்படைப் பணிப்புகள் நடைமுறைப் படுத்தப்பட்டமை எமது நாட்டுக்கும், அனைத்துலக மக்களுக்கும் பிரமாண்டமான முக்கியத்துவம் வாய்ந்ததாகும். உலக சோஷலிஸத்தினது நிலைபாடுகள் மேலும் வலுப்பட்டமையும், சர்வதேச நிலையில் ஏற்பட்ட பாரிய ஆக்கபூர்வமான மாற்றங்களும் சோவியத் யூனியனுக்கும் மற்றைய சமூக அமைப்புச் சேர்ந்த பல நாடுகளுக்கு மிடையிலான உறவுகள் விருத்தி யடைந்தமையும் சோவியத் யூனியனது முனைப்பான, சமாதான பூர்வமான, வர்க்கக் குணும்சமுள்ள லெனினிய அயல்நாட்டுக் கொள்கையின் பெறுபேறுகளாகும். சோவியத் யூனியனதும், சோஷலிஸ சமாஜத்தைச் சேர்ந்த ஏனைய நாடுகளினதும், மற்றைய அனைத்து சமாதானத்தை நேசிக்கும் நாடுகளினதும் முயற்சிகளின் பயனாக உலக நெருக்கடி தளர்வது மேலும் ஆழமாகியுள்ளது.

கடந்த சில ஆண்டுகளின் வெற்றிகளும் சாதனைகளும் எமது சமுதாயத்தின் வாழ்வில் கட்சியினது தலைமைப் பாத்திரம் அதிகரிப்பதிலிருந்தும் அதன் சர்வதேச மதிப்பு உயர்வதிலிருந்தும் பிரிக்கப்பட முடியாதவையாகும்.

காங்கிரஸ் முடிவுகள், சோ. க. க. மத்தியக் கமிட்டியின் அறிக்கை மீதான பிரதிநிதிகளின் உரைகள் விமர்சிக்கப்படும் காலப்பகுதியில் மத்தியக் கமிட்டியினதும், அதன் அரசியல் குழுவினதும் நடவடிக்கைகள் பற்றிய உயர்வமான மதிப்பீட்டைத் தெரிவித்தன. எதிர்காலத்திற்காக கட்சி வகுத்துள்ள மார்க்கத்திற்குப் பேச்சாளர்கள் தமது பூரண அங்கீகாரத்தைத் தெரிவித்தனர். முழுக் கட்சியினதும் கருத்திற்குக் குரல் கொடுத்த காங்கிரஸ் பிரதிநிதிகள் நமது காலத்தின் மாபெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் தலைவரும், சோ. க. க. மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளருமான லியோனிட் இலியச் பிரெஷ்னெவ் தலைமையிலான மத்தியக் கமிட்டியும் அதன் அரசியல் குழுவும் மார்க்ஸிய - லெனினிய வெளிச்சத்தில் சோ. க. க. வினது உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையை செயல்படுத்துவதில் பேருற்சாகத்தையும், நோக்க ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்தியுள்ளது என்பதை ஏகமனதாகத்தெரிவித்தனர்.

இதன் இன்னொரு ருஜு காங்கிரசின் ஆலோசனைக்குச் சமர்ப்பிக்கப்படும் ''1976 - 1980இல் பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படைத் திசைவழிகள்'' என்ற மத்தியக் கமிட்டியின் நகலிலிருந்து கிடைக்கப் பெறுகிறது. இது கட்சி ஸ்தாபனங்களிலும், உழைக்கும் மக்களின்கூட்டங்களிலும், பத்திரிகைகளிலும் மிகப் பரவலாக விவாதிக்கப்பட்டது. இது எமது பொருளாதார-சமூகக் கொள்கையும், எமது நாட்டின் தேசியப்பொருளாதார வளர்ச்சிக்கான சாத்தியப்பாடுகள் வழிகளும் பற்றிய உண்மையிலேயே தேசிய வியாபகமான விவாதமாகும். எமது சோஷலிஸ சமுதாயம் தனது பலத்தை மக்களின் பிரக்ஞையிலிருந்தே பெறுகிறது. விளடிமீர் இலியச் லெனின் கூறியதைப் போல இவர்களே ''அனைத்தும் பற்றி அபிப்பிராயத்தை உருவாக்கக் கூடியவர்கள், அனைத்தையும் பிரக்ஞையுடன் செய்யக் கூடியவர்கள்'' (தொகுப்பு நூல்கள், பா 26. ப. 256) 'அடிப்படைத் திசை அமைவுகள்' என்ற நகல் மீதான விவாதத்தின் போது லெனினின் இக்கருத்து முழு வலிமையுடன் வெளிப்பாடு பெற்றது. இந்த விவாதத்தின் போது கம்யூனிஸ நிர்மாணம் சம்பந்தப்பட்ட மிகச் சிக்கலான, ஜீவாதாரமான பல பிரச்னைகளில் தமது கருத்துக்களை அவர்கள் தெரிவித்தனர். கட்சியினதும் மக்களினதும் பொதுப் பொறுப்புகள் குறித்து, எமக்கு முன்னுள்ள கடமைகள் பற்றிய திண்மையான விளப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தை அடிப்படையாகக் கொண்ட, பொறுப்புக ளின் வெற்றிபாலான மிகுந்த அக்கறையை அவர் கள் வெளிப்படுத்தினார்கள். இது சோஷலிஸ ஜன நாயகத்தின் காத்திரத் தன்மையை, பூர்ஷ்வா ஜனநாயகத்திலும் பார்க்க அதன் அடிப்படை மேம் பாடுகளுள் ஒன்றை தத்ரூபமாகவும் ஏற்கத்தகத் தக்க வகையிலும் எடுத்துக் காட்டியுள்ளது. இத் தகையதொரு விவாதம் முதலாளித்துவ உலகின் எந்த ஒருநாட்டிலும் முற்றாகவே சாத்தியமற்றதா கும். பூர்ஷ்வா ஜனநாயகத்தின் மட்டுப்படுத்தப் பட்ட குணவியல்பும், சமுதாயம் முழுமையையும் ஐக்கியப்படுத்தக்கூடிய அரசியல், சமூக-பொருளா தார நோக்கமின்மையும் இதற்கான காரணமாகும்.

''அடிப்படைத் திசை வழிகள்'' எனும் நகல் பற்றிய விவாதம் எல்லா இடங்களிலும் - தொழி லகங்கள், நிர்மாணத்தலங்கள், கூட்டுப்பண்ணை கள், அரசாங்கப் பண்ணைகள் ஆகியவற்றின் முன் னர் எழும் பிரச்னைகளுடன் நெருக்கமாக இணைந் துள்ளது. உற்பத்தியை அமைப்பதிலும், உற்பத்தி வசதிகளை விருத்தி செய்வதிலும் உள்ள குறை பாடுகளை நீக்குவதில் அமைச்சுக்களும், திணைக் களங்களும், மற்றும் பொருளாதார ஏஜன்ஸிகளும் கூடுதல் கவனம் செலுத்துவதன் அவசியம் விவாதிக் கப்பட்ட பிரச்னைகளுள் முக்கிய இடத்தைப் பெற் றது. நவீன எந்திரங்களையும், உபகரணங்களையும், கருவிகளையும் துரித கதியில் விருத்தி செய்வதன், குறிப்பாக பண்ணை எந்திரங்களை விருத்தி செய்வ தன் அவசியம் வலுவாக வலியுறுத்தப்பட்டது.

விவசாயத்தை விருத்தி செய்வதற்கான ஆலோசனைகளுள் உழைப்பு உற்பத்தியை உயர்த்து வது, தாவர மிருக உற்பத்தியை அதிகரிப்பது, தெரி வுடன் சம்பந்தப்பட்ட விஞ்ஞான நிலையங்களினதும் விவசாய நிறுவனங்களினதும் வேலையை விருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வது, வன்கலப் பொருட்கள், கனிஜ உரங்கள், மற்றும் விவசாயத்திற்காக ஒதுக்கப்பட்ட வளங்களை திறமையுடன் பயன்படுத்துவது ஆகியவற்றிற்குக் கூடுதல் அழுத்தம் கொடுக்கப்பட்டது.

பொருட்களின், குறிப்பாக பாவனைப் பொருட்களின் தரத்தை உயர்த்துவது, இவற்றின் வகையருக்களை விரிவுபடுத்துவது ஆகியன பற்றிய பல ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. திட்டமிடல், மூலதன நிர்மாண அமைப்புப் பணிகள், பொருள்—தொழில் நுட்ப விநியோகம் ஆகியவற்றின் தனித்தனி அம்சங்கள் பற்றியும் விமர்சனக் குறிப்புகள் தெரிவிக்கப்பட்டன.

''அடிப்படைத் திசை வழிகள்'' எனும் நகல் மீதான விவாதத்தின் போது தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகளும் கருத்துக்களும் தஸ்தாவேஜு இறுதிவடிவத்தைப் பெறும்போது — ஐந்தாண்டுத் திட்டம் விரிவாக வரையறுக்கப்படும் போது கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்படும். இவை கட்சியினதும் அரசாங்கத்தினதும், பொருளாதார - திட்டமிடல் ஏஜன்ஸிகளினதும், அனைத்து அமைச்சுக்களினதும், திணைக்களங்களினதும் நடைமுறைச் செயல்பாடுகளின் போது கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கான எமது கட்சியின் புதிய திட்ட தஸ்தாவேஜை சோவியத் மக்கள் இதயபூர்வமாக அங்கீகரித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# I

## சோ. சோ. கு. ஒ. பொருளாதார அபிவிருத்தியின் பெறுபேறுகள்.

கடந்த ஐந்தாண்டுகளில் எமது நாட்டினது பொருளாதார அபிவிருத்தியின் பிரதான பெறுபேறுகள் என்ன? தோழர் லியோனிட் இலியச் பிரேஷ்னேவ் கூறியது போல ''சோவியத் மக்களின் அர்ப்பணிப்புள்ள உழைப்பும், கட்சியின் வழிநடத்தல், அமைப்பு நடவடிக்கைகளும் பொருளாதாரத்தின் உறுதியான வளர்ச்சியை உத்தரவாதப் படுத்தின. அந்த ஐந்தாண்டுத் திட்டத்தின் சமூக - பொருளாதார இலக்குகள் சாதிக்கப்பட்டன.''

மக்கள் சேம நலன் உயர்ந்துள்ளது. சோஷலிஸ உற்பத்தி அதிக வேகத்தில் வளர்ந்து வருகிறது. விஞ்ஞான - தொழில்நுட்ப முன்னேற்றம் விரைவடைந்துள்ளது. தமது பொருளாதாரத்தையும் கலாசாரத்தையும் வளர்ப்பதிலும், எமது தாயகத்தின் பொருளாதார வலிமை கட்டியெழுப்புவதிலும் அனைத்து யூனியன் குடியரசுகளும் மாபெரும் வெற்றிகளை ஈட்டியுள்ளன. நாட்டின் தற்காப்புச் சக்தி தேவையான மட்டத்தில் பேணப்பட்டுள்ளது.

கம்யூனிஸத்தின் பொருளாயத, தொழில் நுட்ப அடித்தளத்தை நிர்மாணிப்பதில் சோவியத் சமுதாயம் பெரிதும் முன்னேறியுள்ளது. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் நாட்டின் பொருளாதார உள்வளம் கணிசமாக வளர்ந்துள்ளது. இது கடந்த 10 ஆண்டுகளில் ஏறத்தாழ இரட்டிப்பாகியுள்ளது.

சோவியத் ஒன்றியத்தினது ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் பிரதான பொருளாதார அபிவிருத்திக்குறியீடுகளை எட்டாவது, ஏழவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தவையோடு ஒப்பு நோக்கிப் பார்க்கையில் இது வெளிப்படையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 9வது ஐந்தாண்டுத் திட்ட காலம் (ஐந்தாண்டுகால மொத்தம் 1965ல் '000மில்லியன் (10 லட்சம்) ரூபிள்களில். | | 9வது ஐந்தாண்டுத் திட்ட 5வருட மொத்தம்–மொத்த சதவீதத்தில் | |
|---|---|---|---|
| | | 7வது ஐந்தாண்டுத் திட்ட காலம் 1961—1965 | 8வது ஐந்தாண்டுத் திட்ட காலம் 1966—1970 |
| தேசிய வருவாய், நுகரப்பட்டதும் திரட்டப்பட்டதும் | 1563 | 186 | 134 |
| | 2308* | 218 | 145 |
| | 455 | 137 | 113 |
| தொழிலுற்பத்தி விவசாய உற்பத்தி மூலதன முதலீடு | 501 | 203 | 142 |
| அடிப்படை செல்வாதாரங்கள் இயங்க ஆரம்பம் | 468 | 202 | 144 |
| | 933 | 206 | 140 |
| சில்லறை விற்பனை | | | |
| சமூக பயனீட்டு நிதிகளிலிருந்து மக்களுக்கு வழங்கப்பட்ட மான்யங்களும் பண உதவிகளும் (நடப்பு விலைகளில்) | 392 | 225 | 143 |
| மக்களின் பண வருவாய் (நடப்பு விலைகளில்) | 1178 | 213 | 142 |

* 1967 ஜூலை 1ந் திகதியவிலைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லியோனிட் இலியச் பிரெஷ்னேவ் சமர்ப்பித்த மத்தியக் கமிட்டியின் அறிக்கை எமது தொழிலாளி வர்க்கமும், கூட்டுப் பண்ணை விவசாயிகளும், ஆய்வறிவாளர்களும் ஈட்டிய பிரமாதமான உழைப்பு வெற்றிகள் பற்றி பேருற்சாகத்துடனும் அன்புடனும் பேசியதுடன், இந்தக் கட்சிக் காங்கிரசின் இதயபூர்வமான நன்றியை அனைத்துப் பிரதிநிதிகளினதும் அங்கீகாரத்துடன் தெரிவித்தது. சோஷலிஸத் தாயகத்தின் சுபீட்சத்திற்காக கட்சியின் தலைமையின் கீழ் மக்கள் ஈட்டியுள்ள உழைப்புச் சாதனைகள் ஐந்தாண்டுத் திட்ட காலத்தினது பேறுபேறுகள் அனைத்தினதும், மாபெரும் அரசியல் வெற்றியைக் குறிக்கும் எமது பொருளாதார சாதனைகள் வெற்றிகள் அனைத்தினதும் மகோன்னதமான, மகத்தான, மணிமகுடம் போன்ற பெறுபேறாகும்.

நாட்டினது பொருளாதார வளர்ச்சியின் பெறுபேறுகளை அதன் தேசிய வருவாயும் வெகுஜன நுகர்வு வளமும், வளர்ந்துவரும் தேசிய செல்வமும் முழுமையாக குணுதிசயப்படுத்துகின்றன. 9 வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தேசிய வருவாய் எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தினதிலும் பார்க்க 34 சதவீதம் கூடுதலாகும். இந்த மொத்தத்தில் 75 சதவீவம் பயனீட்டு நிதிக்கும் மிகுதி திரட்டு நிதிக்கும் சென்றன. நடப்பு, பயனீட்டு நிதியும் வீடமைப்புக்கும், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள், கலாசார கல்வி விளையாட்டு வசதிகளுக்கான நிர்மாணத்திற்கும், மியுனிஸிப்பல் - மக்களுக்கான நாளாந்த சேவைகளினை அமைப்பதற்காகவும் மக்களின் சேம நலனை உயர்த்த நேரடியாகச் செலவிடப்படும் தேசிய வருவாயில் 80 சத வீதம் செலவிடப்பட்டது. பயனீட்டுக்குச் செல்லும் தேசிய வருவாயின் பங்கு முந்திய ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் அளவிலும் பார்க்க அதிகமாகும்.

சோ. க. க. 25 வது காங்கிரஸ் வகுத்தளித்த சமூக திட்டத்தின் பிரதான பெறுபேறுகளை விவரிக்க அனுமதி தாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மக்கள் அனைவரினதும் சேம நலனை உயர்த்துவதும், குறிப்பாக குறைந்த வருவாயுள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் கூடுதல் கவனம் செலுத்துவதும் பிரதானபணியாக இருந்தது. இதன் பிரகாரம் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் கணிசமான உயர்வு ஈட்டப்பட்டது. கடந்த ஐந்தாண்டுகளில் தொழிலக - அலுவலகத் தொழிலாளர்களின் சராசரி மாதச் சம்பளம் 20 சதவீதமாக அதிகரித்து 146 ரூபிள்களை அடைந்தது. இது சமூக நிதியிலிருந்து வழங்கப்படும் கொடுப்பனவுகள் அனுகூலங்களுடன் சேர்க்கப்படும்போது மாதத்திற்கு 198 ரூபிள்களாகும். நாட்டுப் புறங்களில் உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. இந்த ஐந்தாண்டுகளில் கூட்டுப்பண்ணை விவசாயிகளின் உழைப்புக்கான ஊதியம் 25 சதவீதமாக உயர்ந்தது.

கடந்த ஐந்தாண்டு காலப் பகுதியில் நாடு முழுவதிலும் பொருள் உற்பத்தியிலீடுபட்டுள்ள நடுத்தர ஊதியம் பெறும் தொழிலக - அலுவலகத் தொழிலாளர்களினதும், அதேபோல உற்பத்தித் துறையிலீடுபடாத சில வகைத் தொழிலாளர்களினதும் சம்பளமும் ஊதியமும் உயர்த்தப்பட்டன. தொழிலக - அலுவலகத் தொழிலாளர்களினதும், கூட்டுப்பண்ணை விவசாயிகளினதும், ராணுவ வீரர்களினதும் வயோதிபகால இளைப்பாற்றுச் சம்பளமும், உயர் கல்லூரிகளினதும், விசேஷ நடுநிலைப் பாடசாலைகளினதும், தொழில்நுட்பக் கல்லூரிகளினதும் புலமைப் பரிசில்களும் அதிகரிக்கப்பட்டன. மற்றும் பல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

தோழர்களே, ஒவ்வொரு 15 ஆண்டுகளுக்கொரு தடவை எமது நாட்டில் நபர் விகித உண்மை வருவாய் ஏறத்தாழ இருமடங்காக அதிகரித்துள்ளது. வேறு வார்த்தையில் ஒரு மனிதனின் வாழ்வுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் சோஷலிஸ சமுதாயம் நுகர்வின் குணும்ச ரீதியில் உயர்ந்த பல கட்டங்களுக்குச் சென்றுள்ளது.

1971 - 1975 இல் சில்லறை வர்த்தகம் 36 சத வீதமாக அதிகரித்தது. அதே நேரத்தில் அடிப்படை உணவு, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் சில்லறை அரசாங்க விலை நிலையானதாக இருந்தது. இறைச்சி, இறைச்சி உற்பத்திகள், முட்டை, மற்றும் பொருட்களின் விற்பனை துரித கதியில் அதிகரித்தது. வீட்டுத் தளபாடங்கள், தொலை காட்சி - வானொலிப் பெட்டிகள், தையல், சலவை எந்திரங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், கைக்கடிகாரங்கள், மற்றும் கூடுதல் காலம் பாவிக்கக்கூடிய பொருட்களின் விற்பனை பாரியளவில் இருந்தது. சுமார் 10 லட்சம் கார்கள் மக்களுக்கு விற்கப்பட்டன. இது 1970 ஆம் ஆண்டிலும் பார்க்க ஏழு மடங்கு கூடுதலாகும்.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் தீவிரமான, பிரமாண்டமான வீட்டு நிர்மாணத்தின் தொடர்ச்சியான நான்காவது ஐந்தாண்டுத் திட்டமாகும். 1971 முதல் 1974 வரைமெத்தம் 5440 லட்சம் சதுர மீட்டர் விஸ்தீரணமுள்ள தட்டுமனைகளும் தனி வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டன. இது 560 லட்சம் பிரஜைகளின் குடியிருப்பு நிலைமைகளை விருத்தி செய்யவும், ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற அடிப்படையில் புதிய வீட்டுப் பகிர்வு முறைக்குச் செல்லவும் உதவியது. மொத்தத்தில் கடந்த நான்கு ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 200 கோடி சதுர மீட்டர் குடியிருப்புகள் நிர்மாணிக்கப்பட்டன. இது வரலாற்றிலேயே நேர் நிகரற்றதாகும்.

அத்துடன் எமது சமூக திட்டம் உழைப்பு - வாழ்க்கை நிலைமைகள், கல்வி, வைத்திய சேவைகள், சூழல் பாதுகாப்பு ஆகியவற்றை விருத்தி செய்வதற்கான பன்முக நடவடிக்கைகளுக்கு வழி சமைக்கிறது. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் பிரதானமான சாதனைகளுள் ஒன்று தேச வியாபகமான நடுநிலைக் கல்விக்கான மாற்றம் மொத்தத்தில் நிறைவு செய்யப்பட்டமையாகும்.

பொருள் உற்பத்தியின் உயர் அதிகரிப்பு வேகமும் தர குறியீடுகளின் விருத்தியும் சமூகத் திட்டம் அமுல்படுத்தப்படுவதை உத்தரவாதம் செய்தன. அதாவது தேசிய வருவாய் அதிகரிப்பில் உழைப்பு உற்பத்தியின் பாத்திரம் உயர்ந்தது, விஞ்ஞான - தொழில் நுட்ப முன்னேற்றம் மேலும் தீவிரமடைந்தது, சமூக உற்பத்திக் கட்டமைவு மேலும் விருத்தியடைந்தது.

1970 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1975 இல் தொழிலுற்பத்தி 43 சதவீதமாக உயர்ந்தது. இது கட்சியின் 24 வது காங்கிரசின் பணிப்புகளுக்கு அமைந்ததாகும்.

கன எந்திரத் தொழில்துறையில் ஐந்தாண்டுத் திட்ட இலக்குகள் தாண்டிச் செல்லப்பட்டுள்ளன. பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் ஆரம்பத்தில் எமது நாட்டுக்கு எரிபொருள், மூலப் பொருட்கள், அடிப்படை நிர்மாணப் பொருட்கள் ஆகியன வழங்கப்படுகின்றன. 1975 இல் நாடு 4910 லட்சம் தொன்கள் எண்ணெயையும், 28900 கோடி கியூபிக் மீட்டர்கள் எரிவாய்வையும், 7010 லட்சம் தொன்கள் நிலக்கரியையும், 103800 கோடி கிலோவாட் மின்வலுவையும் உற்பத்தி செய்தது. எரிபொருள், வலு அடித்தளத்தின் துரிதமான வளர்ச்சி தேசியப் பொருளாதாரத்தின் தேவைகள் நிறைவேற்றப்படுவதையும், வெளிநாடுகளுக்கு எரி பொருட்களை வழங்குவதற்காகச் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் நிறைவு செய்யப்படுவதையும் உத்தரவாதப்படுத்தியது. 1975 இல் 1410 லட்சம் தொன்கள் உருக்கு உருக்கப்பட்டது. நாம் 900 லட்சம் தொன்கள் கனிஜ உரத்தையும், 1220 லட்சம் தொன்கள் சிமெந்தையும் உற்பத்தி செய்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த ஐந்தாண்டுகளில் கனரக எந்திரவியல் தொழில் துறையின் உற்பத்தி 73 சதவீதமாக அதிகரித்தது. இது உற்பத்தி மேலும் எந்திரமயமாக்கப்படுவதையும், தன்னியக்க மயமாக்கப்படுவதையும், உற்பத்தியின் தொழில் நுட்பத் தரம் உயர்த்தப்படுவதையும் சாத்தியமாக்கியது. எந்திர கருவிகள், உலைக்களங்கள், அழுத்தி உபகரணங்கள், தன்னியக்க உற்பத்தி வரிசைகள் ஆகியவற்றின் உற்பத்தி கணிசமானளவு அதிகரித்தது. கார்களின் உற்பத்தி இரண்டு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தது. பண்ணை எந்திரங்களின் உற்பத்தி 78 சதவீதமாகவும், உபகரணங்களினதும் தன்னியக்கச் சாதனங்களினதும் உற்பத்தி 90 சதவீதமாகவும் கம்பியூட்டர்களின் உற்பத்தி 330 சதவீதமாகவும் உயர்ந்தது.

கடந்த ஐந்தாண்டுகளில் மென்தொழில், உணவுத் தொழில் துறையில் சுமார் இரண்டாயிரம் தொழிலகங்கள் நிர்மாணிக்கப்பட்டன. எமது தொழில்துறை பலவகைப் பாவனைப் பொருட்களை பாரிய அளவில் உற்பத்தி செய்கிறது. பாவனைப் பொருட்களின் உற்பத்தி 37 சதவீதமாக உயர்ந்தது. கலாசார, நாளாந்தப் பாவனை, வீட்டு உபகரணங்கள் ஆகியவற்றின் உற்பத்தி 60 சதவீதமாக அதிகரித்தது.

விவசாய வளர்ச்சிக்கான கட்சியின் நீண்ட கால முழுமையான திட்டம் கடந்த ஐந்தாண்டுகளில் உறுதியாக நிறைவேற்றப்பட்டது. அதன் பொருளாயத, தொழில்நுட்ப அடித்தளம் விரிவாக்கப்பட்டுள்ளது. பாரியளவு நில அபிவிருத்தி முன்னேற்றம் அடைந்து வருகிறது. விவசாய உற்பத்தியில் நிபுணத்துவம் ஆழமாகி வருகிறது. இந்த நோக்கங்களுக்காக 13100 கோடி ரூபிள்கள், அதாவது பொருளாதாரத்தின் மொத்த முதலீட்டில் கால்வாசி ஒதுக்கப்பட்டது. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் நாட்டுப்புறங்கள் 17 லட்சம் ட்ராக்டர்களையும், 449 ஆயிரம் தானிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவடை எந்திரங்களையும், 1102 ஆயிரம் ட்ரக்கு களையும், பெரியளவு மற்றும் உபகரணங்களையும் பெற்றன. இவை அனைத்தும், அத்துடன் விவசாயத் தொழிலாளர்களின் அர்ப்பணிப்பான உழைப்பும் கடந்த ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மிகப் பாதக மான சீதோஷ்ண நிலைமைகளிலும் விவசாயத்தின் சராசரி வருடாந்த உற்பத்தி அதிகரிப்பை எட்டா வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சாதித்த மட்டத்திலும் பார்க்க 13 சதவீதமாக உயர்த்த வகை செய்தன. வருடாந்த சராசரி தானிய உற் பத்தி 140 லட்சம்தொன்களாலும், சுத்தம்செய்யப் படாதபருத்திஉற்பத்தி26சதவீதத்தாலும்அதிகரித் தன. என்ருலும் மொத்தத்தில் பண்ணை உற்பத்தி கள் ஐந்தாண்டுத் திட்ட இலக்குகளை அடையவில்லை. இது உணவு - மென் தொழில்களின் வளர்ச்சி வேகத்தை பாதிக்காதிருக்கவில்லை.

எமது விவசாயத்தின் இன்றைய நிலைமையைக் குணம்சப்படுத்தும் பிரதான கூறு எமது கட்சி 10 ஆண்டுகளுக்கு முன் திட்டமிட்ட நெடுந்தூரம் செல்லக்கூடிய பொருளாதார மாற்றங்களின் தொடர்ச்சியான நிகழ்வாகும். நாட்டுப்புறத்தில் வாழ்வு முழுவதிலும் சோஷலிஸப் புனர் நிர்மாணம் செய்வதில் முக்கியமானது ''பொருளாயத அடித் தளத்தை உருவாக்குவதும், தொழில்நுட்ப உப கரங்ணகளை வழங்குவதும், ட்ராக்டர்களையும் மற் றும் பண்ணை எந்திரங்களையும் பாரியளவில் பயன் படுத்துவதும், பரந்தளவில் மின்மயப்படுத்துவ தும்'' (தொகுப்பு நூல்கள் பா. 32, ப. 217) என்று விளடிமீர் இலியச் லெனின் சுட்டிக் காட்டினர்.

இந்தத் தேவைகளின் வெளிச்சத்தில் எமது சோஷலிஸ நாட்டுப்புறத்தின் காட்சி என்ன? சில விபரங்களைத் தருகிறேன். இன்று எமது ஏறத்தாழ எல்லாக் கூட்டுப்பண்ணைகளும் அரசாங்கப் பண்ணை களும் மின்சாரமயமாக்கப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் அரசாங்கம் இயக்கும் மின்நிலையங் களிலிருந்தே மின்சாரத்தைப் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த வருடத்தில் நாட்டுப்புறம் 1965 ஆம் ஆண்டிலும் பார்க்க 250 சதவீதம் கூடுதல் மின்சாரத்தை உபயோகித்தது. இது யுத்தம் வெடித்த வேளையில் சோவியத் யூனியன் முழுவதும் பாவித்த மின்சாரத்திலும் பார்க்க 50 சதவீதம் அதிகமாகும். விவசாயத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ட்ராக்டர், அறுவடை எந்திர, ட்ரக் என்ஜின்கள் ஆகியவற்றின் மொத்த ஆற்றல் கடந்த 10 ஆண்டுகளில் 80 சதவீதமாக அதிகரித்தது. விவசாயத்தில் தொழிலாளர் வீத ஆற்றல் இரண்டு மடங்கிற்கும் மேலாக அதிகரித்தது.

நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை இனம் காண முடியாதளவுக்கு மாற்றமடைந்துள்ளது. இன்று 99 சதவீத கூட்டுப்பண்ணை வீடுகளிலும் அரசாங்கப் பண்ணைத் தொழிலாளர்களினதும் ஊழியர்களினதும் வீடுகளிலும் மின்சாரம் பாவிக்கப்படுகிறது. பல்லாயிரக்கணக்கான நாட்டுப்புற குடியிருப்பு மையங்கள் எரிவாய்வை பயன்படுத்துகின்றன. நாட்டுப்புற மக்களில் மிகப் பெரும்பான்மையானவர்கள் தொலைகாட்சிப் பெட்டிகளை பாவிக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். நாட்டுப்புறங்களில் உழைப்பவர்களுள் ஒவ்வொரு இரண்டாவது நபரும் உயர் கல்வி அல்லது பூர்த்தி செய்யப்படாத உயர் கல்வி அல்லது நடுநிலைக் கல்வி பெற்றவராவர். (யுத்தத்திற்கு முன்பு இது ஒவ்வொரு 16 பேர்களில் ஒருவரே). நாட்டுப்புற மக்களின் வருவாய் துரித வேகத்தில் அதிகரித்து வருகிறது. இவர்களது வாழ்க்கை நிலைமைகள் பல வழிகளிலும் நகரப்புற மக்களின் வாழ்க்கை நிலைமைகளை நெருங்கி வருகின்றன. வானொலிப் பெட்டிகள், தொலைகாட்சிப் பெட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள் போன்ற கலாசார, நாளாந்த பாவனைப் பொருட்களைப் பெருமளவில் நாட்டுப்புறம் இப்போது பெற்று வருகிறது.

நாட்டுப்புற வாழ்வில் ஏற்பட்டுள்ள அடிப்படை மாற்றங்களைப் புள்ளிவிபரங்களால் மட்டும் அளவிட முடியாது. பரிமாணத்திலும் சமூக தாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்திலும் இவை ஆழமான சமூக - பொருளாதார மாற்றங்களாகும். இவை சோஷலிஸ சமூக உற்பத்தியின் வளர்ச்சியில் குணும்ச ரீதியில் புதிய கட்டத்தைப் பிரதிபலிக்கின்றன. இதற்கான ஆரம்பம் லெனினின் கூட்டுறவுத் திட்டத்தில் தொடக்கி வைக்கப்பட்டது. விவசாய உற்பத்தியில் தீவிரமான தொழில் நுட்பப் புனர் நிர்மாணத்தைச் சாதிப்பதற்கான கட்சியின் ஆழமாகச் சிந்திக்கப்பட்ட விவசாயக் கொள்கையின் பெறுபேறே இந்த மாற்றங்கள். இவற்றின் தீவிரம் எதிர்வரும் காலத்தில் மேலும் அதிகரிக்கும்.

நாட்டினது உற்பத்தி உள்ளாற்றலின் பாரிய வளர்ச்சி 24 வது காங்கிரசினது பணிப்புகள் நிறைவேற்றப்பட்டமையின் மிகப் பிரதானமான விளைவுகளுள் ஒன்று எனக்கருதலாம். 9வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மூலதன நிர்மாணத்திற்கு 50000 கோடிக்கும் கூடுதலான ரூபிள்கள் முதலீடு செய்யப்பட்டன. இது விவசாயத்தில் 56 சதவீதம் உட்பட பொருளாதாரத்தின் நிலையான உற்பத்திச் செல்வாதாரத்தில் 43 சதவீத புனர் முதலீட்டைச் சாத்தியமாக்கியது. மொத்த நிலையான உற்பத்திச் செல்வாதாரம் 50 சதவீதமாக அதிகரித்தது.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றம் துரிதமடைந்தது, சமூக உற்பத்தித் திறன் வியாபிதமடைந்தது. எமது தொழில்துறை பெரியளவில் உற்பத்தி செய்யும் பல வகைப் புதியரக எந்திரங்களினதும் உபகரணங்களினதும், கருவிகளினதும் உற்பத்தி இரண்டு மடங்காக அதிகரித்தது. உழைப்பு உற்பத்தி 23 சதவீதமாக உயர்ந்துள்ளது. இதன் மூலம் 200 லட்சம் தொழிலாளர்களின் உழைப்பு மிச்சப்படுத்தப்பட்டது.

கட்சியினது 24 வது காங்கிரசின் பணிப்புகளுக்கு அமைய அனைத்து ரக போக்குவரத்து, தகவல் தொடர்பு சாதனங்களும் விருத்தி செய்யப்பட்டன. மக்களுக்கான இச் சேவைகள் அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டன. எல்லாரக பொருட்களினதும் போக்குவரத்து 36 சதவீதமாக அதிகரித்தது.

என்றாலும் கடந்த ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பல பிரச்னைகளுக்கு எம்மால் தீர்வுகாண முடியவில்லை. அத்துடன் தேசியப் பொருளாதாரத்திலுள்ள சில தடங்கல்களை நீக்கவும் முடியவில்லை. மூலதன நிர்மாணத்திற்கு இது குறிப்பாக பொருந்தும். சில தொழில் துறைகளில் செயல்படுத்தப்படுவதற்கான உற்பத்தி ஆற்றல் பொறுப்புகள் 60-80 சதவீதமே நிறைவேற்றப்பட்டன. அதே நேரத்தில் எண்ணிறந்த திட்டங்களில் முதலீடுகள் சிதறிப் போயுமுள்ளன. இதற்குக் காரணம் தொழில் வளர்ச்சி சம்பந்தப்பட்ட பிரச்னைகளை இயக்கத்திலுள்ள நிலையான செல்வாதாரங்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்கும் உற்பத்தியை துரிதப் படுத்தும் கொள்கையை உறுதியாகக் கடைப்பிடிப்பதற்கும் பதிலாக புதிய திட்டங்களில் முதலீடு செய்வதன் மூலம் தீர்க்க பல அமைச்சுக்களும் அரசாங்கத் திணைக்களும் முயலுவதாகும்.

பொருளாதாரப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதில் குறுகிய திணைக்கள அணுகுதல் முறை அடிக்கடி பின்பற்றப்படுகிறது. அவசியமான ஒருங்கிணைப்பு உத்தரவாதப்படுத்தப்படுவதில்லை. பொருளாதார நிர்வாகத்தின் பல துறைகளில் இன்னமும் சில குறைபாடுகள் உள்ளன.

விஞ்ஞான, தொழில் நுட்ப முன்னேற்றம் துரிதமடைந்த போதிலும் விஞ்ஞான, தொழில் நுட்ப சாதனைகள் உற்பத்தியில் இன்று பிரயோகிக் கப்படும் வேகம் குறித்து எமக்குத் திருப்தியில்லை. சில விஞ்ஞான நிலையங்கள் எதிர்பார்க்கப்படும் பயனைத் தருவதாக இல்லை.

வேலையிலுள்ள குறைபாடுகளின் விளைவாக தேசியப் பொருளாதாரம் பெரும் நஷ்டங்களுக்கு முகம் கொடுக்கிறது. பல கோடிக்கணக்கான பெறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியுள்ள பொருட்களைப் பெறத் தவறுகிறது. இதை ஒட்டி குறைபாடுகளை நீக்கவும் பொருளாதாரத்தில் ஆக்கபூர்வமான போக்குகளை ஸ்திரப் படுத்துவதற்கும் விருத்தி செய்வதற்குமான நடவடிக்கைகளுக்கு 'அடிப்படை திசை மார்க்கங்கள்' என்ற நகல் தஸ்தாவேஜில் கணிசமான கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளில் தொழில் வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளுடனான பொருளாதாரப் போட்டியில் சோவியத் யூனியன் பெரும் முன்னேற்றம் ஈட்டியுள்ளது. எமது தொழிலுற்பத்தி சராசரி 7.4 சதவீத வேகத்தில் வளர்ந்துள்ளது. ஆனால் அதே நேரத்தில் ஐக்கிய அமெரிக்காவிலும் பொதுச் சந்தை நாடுகளிலும் இந்த சராசரி வளர்ச்சி 1.2 சதவீதமே. இது ஒரு தற்காலிகமான போக்கல்ல. நீண்டகாலப் பகுதியிலும், 1950 முதல் 1975 வரை, அதாவது கடந்த 25 ஆண்டுகளில் சோவியத் யூனியனதும் சோஷலிஸ சமாஜத்தைச் சேர்ந்த ஏனைய நாடுகளினதும், ப.பொ.உ.க. நாடுகளினதும் வருடாந்த தொழிலுற்பத்தி வளர்ச்சி வேகம் தொழில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் வளர்ச்சி வேகத்திலும் பார்க்க 100 சதவீதத்திற்கும் கூடுதலாக — 4.6 சதவீதத்திற்கு எதிராக 9.6. சதவீதமாக இருந்துள்ளது.

இதன் விளைவாக ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கு முன்னமேயே நாம் மற்றெந்த நாட்டையும் விட கூடுதல் தேனிரும்பையும், இரும்பையும், மக்னீஷிய, குரோமிய தாதையும், நிலக்கரியையும், சுட்ட நிலக்கரியையும், சீமெந்தையும், டீஸல் - மின்சார றெயில் என்ஜின்களையும், பருத்தியையும், கம்பளியையும், சணல், மற்றும் சில வகைப்பொருட்களையும்உற்பத்தி செய்தோம். அதே நேரத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் உருக்கு, எண்ணெய், கனிஜ உரங்கள் ஆகியன இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1974 ஆம் ஆண்டின் பின் அரைவாசிப் பகுதியிலிருந்து முதலாளித்துவ உலகம் படுமோசமான பொருளாதார நெருக்கடியின் கோரப்பிடியில் தத்தளிக்கிறது. இது முதலாளித்துவ அமைப்பின் உள்ளார்ந்த வியாதியாகும். பொருளாதாரம் நீடித்து ராணுவ மயமாக்கப்பட்டிருப்பதும், ராணுவச் செலவுகள் அதிகரிப்பதும் பொருளாதார கட்டமைவின் நெருக்கடியான கடுமையான பணவீக்கமும், நாணய-நிதி அமைப்புச் சீர்குலைவும், எரிபொருள் நெருக்கடியும், முதலாளித்துவ நாணயத்திலான அவநம்பிக்கையும் ஆகிய இவை நெருக்கடியை மேலும் மூர்த்தண்யப்படுத்தியுள்ளன. முதலாளித்துவ நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் ஆக உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. தனது உரிமைகளுக்காக தொழிலாள வர்க்கம் நடத்தும் போராட்டம் தீவிரமடைந்து வருகிறது.

உள் நெருக்கடிகள் அதிகரித்தும், மேற்கில் ஸ்திரமின்மை பெருகியும் வரும் நிலையில் முதலாளித்துவ உலகின் பொருளாதாரத்தின் முன்னுலுள்ள சாத்தியப்பாடுகள் பற்றி எவராலும் கூற முடியாது. உத்தியோக பூர்வமான முன்னறிவுப்புகளிலும் எவ்வித நம்பிக்கையையும் ஒருவரால் காணமுடியவில்லை. இன்றைய கஷ்டங்கள் முதலாளித்துவப் அமைப்பின் கெடுதிகள், 20 ஆம் நூற்றுண்டின் கடைசிக் கால் பகுதியில் உலகம் முகம் கொடுத்த சமூக - பொருளாதார முன்னேற்றத்தின் தேவைகளுக்கு ஒரு விடையைக் காண்பதற்குமட்டுமல்ல இன்றைய வளர்சியின் கடமைகளுக்கு ஈடுகொடுக்கவும் முடியாத அதன் தன்மை குறித்து பூர்ஷ்வா பொருளியலாளர்களையே எதிரொலிக்கச் செய்துள்ளன.

சமூக வளர்ச்சியின் அடிப்படைப் பிரச்னைகளுக்கு சோஷலிஸ உலகம் விடையைத் தருகிறது. தனது திட்டமிட்ட பொருளாதாரத்தின் துரித வளர்ச்சியின் அடிப்படையில் அபிவிருத்திக்கான தெளிவான சாத்தியப்பாடுகள் சோஷலிஸ சமாஜத்திற்கு உள்ளது என்பதை அண்மையில் நடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோஷலிஸ நாடுகளினது சகோதரக் கட்சிகளின் காங்கிரஸ்களும், எமது லெனினிய கட்சியின் 25 வது காங்கிரசும், மற்றும் பல நாடுகளில் நடைபெற விருக்கும் காங்கிரஸ்களுக்கான தயாரிப்புகளும் வலுவுடன் எடுத்துக் காட்டுகின்றன. நாம் எமது நோக்கங்களையும், பல ஆண்டுகளுக்கான எமது ஆக்கபூர்வமான திட்டங்களையும் முன் காட்டியே முழு உலகுக்கும் தெரிவிக்கிறோம். ஏனெனில் எமது திட்டங்கள் அனைத்தும் உழைக்கும் மக்களின் பரந்த பகுதியினரின் நலன்களுக்கு, சமாதானத்தினதும்சமூக முன்னேற்றத்தினதும் நலன்களுக்கு முற்றிலும் ஏற்றவையாகும். நாம் எமது பிரச்னைகளை, அவற்றின் அளவு எத்தகை பிரமாண்டமானதாக இருந்த போதிலும் நாம் சமுதாயம் முழுமையினதும் நலனுக்கு உகந்த விதத்தில் தீர்த்துள்ளோம், தீர்த்து வருவோம். மாபெரும் கம்யூனிஸ இலட்சியத்தின் வெற்றியில் நாம் பூரண நம்பிக்கை கொண்டுள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II

# பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பிரதான சமூக, பொருளாதாரக் கடமைகள்

25 வது காங்கிரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள "1976 - 1980 இல் சோ. சோ. கு. ஒ. பொருளாதார அபிவிருத்திக்கான அடிப்படைத் திசை வழிகள்" என்ற நகல் தஸ்தாவேஜில் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடமைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

சமூக உற்பத்தியின் இயக்க வேகமும் சம நிலையுமான வளர்ச்சியினதும், அதன் திறனை வியாபிப்பதினதும், விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியைத் துரிதப்படுத்துவதினதும், உழைப்பு உற்பத்தி அதிகரிப்பதினதும், தேசியப் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் வேலையின் தரத்தை உயர்த்துவதினதும் அடிப்படையில் மக்களின் வாழ்க்கைத்தரத்தையும் கலாசாரத்தரத்தையும் உயர்த்தும் கட்சியின் மார்க்கத்தை உறுதியுடன் செயல்படுத்துவதே ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் ஜீவாதாரமான கடமையாகும்.

சமூக - பொருளாதார வளர்ச்சிக்கும், மலர்ந்து வரும் விஞ்ஞான - தொழில்நுட்பப் புரட்சியின் நிலைமைகளில் கம்யூனிஸத்திற்கான பொருளாயத, தொழில் நுட்ப அடித்தளத்தை நிர்மாணிப்பதற்குமான கட்சியின் நீண்டகாலத் திட்டத்தில் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் புதியதொரு கட்டத்தைக் குறிக்கிறது. சோஷலிஸ சமூக உறவுகளினதும், சோவியத் வாழ்க்கை முறையினதும் வளர்ச்சியில் இது ஒரு புதிய கட்டத்தைக் குறிக்கிறது. அதேபோல நமது நாட்டின் பந்தோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ்தை உத்தரவாதப்படுத்துவதிலும் இது ஒரு புதிய கட்டத்தைக் குறிக்கிறது.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட நோக்கங்களுக்கு அமைய எமது திட்டங்கள், கட்சியினதும் மக்களினதும் முயற்சிகள் பொருளாயதத்தில் பன்முக முன்னேற்றத்தைச் சாதிக்கவும், அதன் முழுமையான ஒத்திசைவான வளர்ச்சியை துரிதப்படுத்தவும், சோவியத் மக்களினது சேமநலனை விருத்தி செய்யவும் பயன்படுத்தப்படும்.

விஞ்ஞான - தொழில் நுட்பப் புரட்சியினதும் மிகக் கூடுதல் சிக்கனத்தினதும் அடிப்படையில் உற்பத்தியை மேலும் துரிதப்படுத்துவதிலேயே பொருளாதாரத் திட்டங்களின் அழுத்தம் விழும். கடந்த காலத்தில் பொருளாதார வளர்ச்சியில் தீவிரப்படுத்தும் கூறுகளின் பாத்திரத்தை வியாபிப்பதற்கு கட்சி மத்தியக் கமிட்டியும் அரசாங்கமும் பெரும் கவனம் செலுத்தின. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இதுவே கேந்திர முக்கியத்துவத்தைப் பெறும்.

விவசாய வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஐந்தாண்டு கால திடமான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ''இன்று விவசாயத்தினது பொருளாயத, தொழில் நுட்பத்தளம் விரிவாக்கப்பட்டுள்ளதுடன் இதன் திறனை வியாபிப்பதும் அனைத்து தரக் குறியீடுகளை விருத்தி செய்வதும் முழுமை முக்கியத்துவம் பெறுகின்றன'' என்று தோழர் லியோனிட் இலியச் பிரெஷ்னேவ் வலியுறுத்தியுள்ளார்.

ஐந்தாண்டுத் திட்ட கால இலக்குகளை அடைவதில் சர்வதேச பொருளாதார ஒத்துழைப்பு மேலும் பெரும் பாத்திரத்தை வகிக்கும். சோஷலிஸ பொருளாதார ஒருங்கிணைப்பு மேலும் ஆழமாகும் விதத்திலும் சர்வதேச உழைப்புப் பிரிவினையின் அனுகூலங்களை முழுமையாகப் பயன்படுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதத்திலும் பொருளாதாரத் திட்டங்களின் திசை வழி அமையும்.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் உள்ளுறை கட்சி தயாரித்தளித்த சுருக்கமான, ஆனால் அனைத்தையும் உள்ளடக்கிய சூத்திரத்தில் வெளிப்பாடு பெறுகிறது — இந்த ஐந்தாண்டுத் திட்ட காலம் பொருளாதார வளர்ச்சியினதும் மக்களின் சேம நல அபிவிருத்தியினதும் பேரில் தரத்தையும், உயர் திறனையும் வலியுறுத்துகிறது. தேசிய வருவாயை உயர்த்தவும், மக்களினதும் பொருளாதாரத்தினதும் தேவைகளை நிறைவு செய்ய நேரடியாகப் பயன்படுத்தப்படும் உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கவும் எமது நாடு உருவாக்கியுள்ள பிரமாண்டமான தொழில் நுட்ப - உற்பத்தி உள்ளாற்றலை மேலும் திறமையுடன் உபயோகிக்கும் திருப்பத்தை ஏற்படுத்துவதே இன்றுள்ள பிரதான பணியாகும்.

உருக்கு, எண்ணெய், சிமெந்து, உரங்கள், மற்றும் பொருட்களில் உயர்ந்த, தொடர்ச்சியாக அதிகரித்து வரும் உற்பத்திக் குறியீடுகளை நாம் ஈட்டியுள்ளோம். என்றாலும் உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதில் மூலப் பொருட்களையும் மற்றும் பொருட்களையும் பாவிப்பது இன்னமும் பல இடங்களில் போதியளவு திறமையற்றதாகவே உள்ளது. ஆகவே தான் மூலப் பொருட்களிலும் மற்றும் பொருட்களிலும் எரிபொருளிலும் குறைந்த கூறு விகித உபயோகம், உற்பத்தி ஆற்றல்களை முழுமையாகப் பயன்படுத்துதல், அனைத்து உற்பத்திகளினதும், உற்பத்திப் பொருட்களினதும் உயர்ந்த பாவனைத் தரம் ஆகிய தரக் குறியீடுகள் எமது பொருளாதாரத் திட்டங்களில் நிர்ணயமான முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன.

பிரமாண்டமான உற்பத்தியையும், விஞ்ஞான - தொழில்நுட்ப உள்ளாற்றலையும் கொண்ட எமது வளர்ச்சியுற்ற சோஷலிஸ சமுதாயத்தினது பொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாதாரம் சோஷலிஸ அமைப்பின் அனுகூலங்களை யும் சாத்தியப்பாடுகளையும் முன்னெப்போதையும் விட மிகப் பரவலாகப் பயன்படுத்தவும், குறிப்பாக அடிப்படை திசை வழி நகல் தஸ்தாவேஜில் சமூக வளர்ச்சிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் விரிவான திட்டத்தை முன்வைக் கவும் வழிவிட்டுள்ளது.

முன்னர் போலவே கட்சியின் வருவாய் நுகர் வுக் கொள்கை மக்களின் வருவாயை உயர்த்து வதற்கான பிரதான மார்க்கம் உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்குவது என்ற முறையையே அடிப் படையாகக் கொண்டுள்ளது. இது மொத்த வரு வாயில் நான்கில் மூன்று பங்காக உள்ளது. இத் தகைய கொள்கையின் நோக்கம் பொது நுகர்வை திட்டத்தின் அடிப்படையில் அதிகரிப்பது மட்டு மல்ல. சம்பளம், ஊதியம் ஆகியவற்றினதும் கூட் டுப் பண்ணை விவசாயிகளின் வருவாயினதும் உந்து தல் பாத்திரத்தை வியாபிப்பதும், இவற்றை பெறு பேறுகளிலும், உற்பத்தியின் உயர் திறனிலும் தங்கி யிருக்கச் செய்வதும் இதன் நோக்கமாகும்.

அடுத்த ஐந்தாண்டுகளில் தொழிலாளர்களி னதும் ஊழியர்களினதும் சராசரி சம்பளங்களும் ஊதியங்களும் 16 - 18 சதவீதமாக அதிகரிக்கும். 1980 இல் சராசரி சம்பளம் மாதத்திற்கு குறைந் தது 170 ரூபிள்களாக இருக்கும். சம்பளத்தினதும் ஊதியத்தினதும் உந்துதல் பாத்திரம் அட்டவணை அமைப்பை விருத்தி செய்வதன் மூலம் வியாபிக்கப் படும். குறைந்தபட்ச சம்பளமும் ஊதியமும் உயர்த் தப்படுவதும், உற்பத்தியற்ற துறைகளில் மத்திய வருவாய் பெறுபவர்களின் சம்பள உயர்வு விகி தத்தை நிர்ணயிப்பதும் பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பூரணப்படுத்தப்படும். தொழி லாளர்களினதும் ஊழியர்களினதும் குறைந்தபட்ச சம்பளத்தையும் ஊதியத்தையும், அதிகரிப்பு விகி தத்தையும் உயர்த்துவதில் புதிய ஒரு கட்டம் ஆரம் பிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரத்திற்கும் கிராமத்திற்குமிடையிலான அடிப்படை சமூக - பொருளாதார, கலாசார வேறுபாடுகளைத் துரிதமாக ஒழித்துக் கட்டுவது கட்சியின் கொள்கையாகும். எதிர்வரும் ஐந்தாண்டுகளில் சோஷலிஸ உற்பத்தியிலிருந்து கூட்டுப் பண்ணை விவசாயிகளுக்குக் கிடைக்கும் வருவாய் 24 - 27 சதவீதமாக அதிகரிக்கும். இது தொழிலாளர்களினதும் ஊழியர்களினதும் சராசரி சம்பள அதிகரிப்பிலும் பார்க்க கூடுதலாகும். உழைப்பு உற்பத்தி அதிகரிப்புக்கு ஏற்ப கூட்டுப் பண்ணைகளினதும் வருவாய் அதிகரிக்கும். கூட்டுப்பண்ணைகளிலும் அரசாங்க விவசாய நிறுவனங்களிலும் கஷ்டமான, கடினமான, தீவிரமான உழைப்புக்குச் சம சம்பளம் வழங்கப்படுவதன் மூலம் ஊதிய அமைப்பு விருத்தி செய்யப்படும்.

அடுத்த ஐந்தாண்டுகளில் சமூக பயனீட்டு நிதிகளிலிருந்து வழங்கப்படும் கொடுப்பனவுகளும் அனுகூலங்களும் 28 - 30 சதவீதமாக அதிகரிக்கும். 1980 இல் இது குறைந்தது 11500 கோடி ரூபிள்களாக இருக்கும். பல புதிய சமூக நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன. இவை இந்த நிதிகளிலிருந்தே மேற்கொள்ளப்படும். குழந்தைகள் ஒரு வயதாகும் வரை அவற்றைப் பராமரிக்கத் தாய்மார்களுக்கு ஓரளவு சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்குவது முக்கியமான இந்த நடவடிக்கைகளுள் ஒன்ருகும். தொழிலக - அலுவலகத் தொழிலாளர்களுக்கும் கூட்டுப்பண்ணை விவசாயிகளுக்கும் கூடுதல் குறைந்தபட்ச இளைப்பாற்றுச் சம்பளம் வழங்குவதும், கூட்டுப் பண்ணைகளின் முன்ஞள் உறுப்பினர்களுக்கு இளைப்பாற்றுச் சம்பளம் வழங்குவதும், இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் வலுவிழந்த கூட்டுப்பண்ணை விவசாயிகளின் முதல் குழுவினர்க்கு கூடுதல் மான்யம் வழங்குவதும் ஏனைய நடவடிக்கைகளுள் குறிப்பிடப்பட வேண்டியவை.

ஐந்தாண்டுத் திட்டம் வர்த்தகம் மேலும் துரித கதியில் வளர்ச்சியுறும் என எதிர்பார்க்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது 27 - 29 சதவீதமாக அதிகரிக்கும். உணவுப் பொருட்களுக்கும் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்குமான மக்களின் தேவை மேலும் முழுமையாக நிறைவு செய்யப்படும். இப்போதே நகரப்புற மக்களும் நாட்டுப்புற மக்களும் தொலைகாட்சிப் பெட்டிகளையும், குளிர்சாதனப் பெட்டிகளையும், மற்றும் வீட்டு உபகரணங்களையும் சாதனங்களையும் உபயோகிப்பது பெருமளவு அதிகரித்துள்ளது என்ற போதிலும் நீண்டகாலம் பாவிக்கக்கூடிய இத்தகைய பாவனைப் பொருட்களின் சப்ளை துரித வேகத்தில் அதிகரிக்கும்.

அடிப்படைப் பாவனைப் பொருட்களின் விலையை ஸ்திர நிலையில் வைத்திருப்பதன் மூலமும், தேவையான நிலைமைகள் உருவாக்கப்படுவதைப் பொறுத்தும் போதிய கையிருப்பு அதிகரிக்கப்படுவதைப் பொறுத்தும் சில வகைப் பாவனைப் பொருட்களின் விலைகளைக் குறைப்பதன் மூலமும் வருவாயின் உண்மையான பாதுகாப்பு உத்தரவாதப்படுத்தப் படுகிறது. இது எமது திட்டமிட்ட பொருளாதாரத்தின் சாதனைகளுள் ஒன்று. இது அனைத்து முதளித்துவ நாடுகளையும் ஆட்டிப்படைக்கும் பணவீக்கத்தின் தாக்கத்திலிருந்து பூரண பாதுகாப்பை அளித்துள்ளது.

புதிய ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நாட்டில் பிரமாண்டமான வீடமைப்பு நிர்மாணம் தொடர்ந்து நடைபெறும். மக்களின் சேம நலனை உயர்த்துவதில் தொழிலாளி வர்க்கத்தினதும், விவசாயிகளினதும், ஆய்வறிவாளிகளினதும் குடியிருப்பு நிலைமைகளை விருத்தி செய்வதை முக்கியமானதோர் அம்சமென கட்சி கருதுகிறது. இக்காலப் பகுதியில் குடியிருப்புக்காக 5450 - 5500 லட்சம் சதுர மீட்டர் குடியிருப்புகள் தயாராகி விடும். வீட்டு நிர்மாணத்தின் தரமும் உயர்த்தப்படும். வீடுகளின் திட்டமிடலும் வசதிகளும் விருத்தி செய்யப்படும். வீட்டு நிர்மாணத்திற்கும் மக்கள் சேவை நிலையங்களின் நிர்மாணத்திற்கும் மொத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் 10000 கோடி ரூபிள்கள் முதலீடு செய்யப்படும். முன்னர் போலவே குடியிருப்புகளில் பெரும் பகுதி அரசாங்கத்தாலேயே நிர்மாணிக்கப்படும். அதே நேரத்தில் சிறு நகரங்களிலும், தொழிலாளர் குடியிருப்பு நகர்களிலும், நாட்டுப்புறங்களிலும் கூட்டுறவு வீட்டுத் திட்டங்களுக்கும் தனிப்பட்ட வீட்டு நிர்மாணத்திற்கும் உற்சாகமளிக்கப்படும்.

வீட்டமைப்பு அபிவிருத்தி விரிவடைந்துவரும் வலைப்பின்னல் போன்ற கின்டர்கார்டன், சிறுர் மடுவங்களின் அதிகரிப்பில் உடனடியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சமூக உற்பத்தியில் பெண்கள் பெருவாரியாக ஈடுபட்டுள்ள பிரதேசங்கள், தொழில் கேந்திரங்கள், புதிய நகரங்கள் ஆகியவற்றிலேயே சிறுர் நிலையங்களின் நிர்மாணத்திற்கு முதலில் நிதி ஒதுக்கப்படும்.

ஐந்தாண்டுத் திட்டத்தை வகுக்கும்போது வீடமைப்பு நிர்மாணத்திற்கும் வெகுஜன சேவை நிலையங்களின் நிர்மாணத்திற்கு மிடையில் சரியான விகிதாசாரத்தைப் பேணுவதிலும், நீர் எரிவாய்வு குழாய்களை அமைப்பது, பொது போக்குவரத்து சேவைகளை ஆரம்பிப்பது, கடைகளை அமைப்பது போன்றவற்றில் தாமதங்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதிலும் சோ. சோ. கு. ஒ. அரசாங்க திட்டமிடல் கமிட்டியும், யூனியன் குடியரசுகளின் திட்டமிடல் கமிட்டிகளும், நிர்மாண அமைச்சுக்களும் விசேஷ கவனம் செலுத்த வேண்டும்.

எமது அமைப்பின், எமது சோஷலிஸ சமுதாயத்தின் மானிதம் சோவியத் மக்களின் உழைப்பு நிலைமைகள், சுகாதாரம், கல்வி, கலாசார தரங்கள் பால் எல்லாக் காலங்களிலும், மிக மிகக் கஷ்டமான காலங்களிலும் காட்டப்பட்ட அக்கறையில் வெளிப்பாடு பெற்றுள்ளது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் இத் துறைகளில் மாபெரும் சமூக நடவடிக்கைகள் எடுக்கப்படும். மிக உயர்ந்த உற்பத்தி உழைப்புக்கும், உழைக்கும் மக்களின் ஆக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றலை மிகப் பரந்தளவில் பயன்படுத்தவும் உற்பத்தி நிகழ்வுகளை மேலும் எந்திரமயமாக்கும் தன்னியக்க மயமாக்கும் பணியை நாம் மேலும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வோம் என்பதுடன், கடுமையான, கவர்ச்சியற்ற உடலுழைப்பை அகற்றவும் முடிந்ததனைத்தையும் செய்வோம்.

உற்பத்தியை வியாபிப்பதிலும் அதன் திறனை உயர்த்துவதிலும் சமூகக் காரணிகளின் பாத்திரம் புதிய ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும் பெருமளவுக்கு அதிகரிக்கும். ஆளணிகளின் தேர்ச்சி மட்டம், ஆக்கபூர்வமான செயலூக்கமான சூழல், உழைப்பாளர் மத்தியில் நல்ல சமூக - உளவியல் சூழ்நிலை, பணியாளர்களின் வாழ்க்கை நிலைமைகள் பாலான அக்கறை, தொழிலகங்களில் கலாசார நிலையங்களையும் விளையாட்டு வசதிகளையும் உருவாக்குதல் ஆகியன மக்களின் வாழ்வை மேலும் ஆர்வமுள்ளதாக்குவதுடன் அர்த்தமுமுள்ளதாக்குகிறது. இது உற்பத்திப் பெறுபேறுகளில் பயனுள்ள தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

மக்களின் ஆரோக்கியத் துறையில் வைத்திய சேவைகளின் தரத்தை உயர்த்துவதும், டாக்டர்களினதும் மற்றும் மத்தியதர வைத்திய ஊழியர்களின் வேலை அமைப்பை விருத்தி செய்வதும், வைத்திய நிலையங்களின் திறனை உயர்த்துவதும் ஆகியன புதிய ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் பிரதான கடமைகளாகும். இந்த நடவடிக்கைகளும், ஆஸ்பத்திரிகளும் பிணியகங்களும், ஆரோக்கிய உழைப்பு - விளையாட்டு நிலையங்களும், ஓய்வு விடுதிகளும், வைத்திய உதவிக்கான மக்களின் தேவைகளை முழுமையாக நிறைவு செய்யவும் விடுமுறைகால வசதிகளை விரிவுபடுத்தவும் உதவும்.

ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பொதுப் பாடசாலைகள் மேலும் அபிவிருத்தி செய்யப்படும். தொழில் நுட்பப் பாடசாலைகளில் மேலும் பெருந்தொகையான இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும். இவற்றில் தொழில் பயிற்சி பூரண நடுநிலைக் கல்வியுடன் இணைக்கப்பட்டுள்ளது. தேசியப் பொருளாதாரத்திற்குக் கூடுதல் பட்டதாரிகள் பயிற்றுவித்தளிக்கப்படுவர். குறிப்பாக விஞ்ஞானத்தினதும் தொழில் நுட்ப வியலினதும் புதுத் துறைகளில் இந்த எண்ணிக்கை கூடுதலாக இருக்கும். அனைத்து ரக கல்வி நிலையங்களிலும் பொருளாயத வளங்களும் கல்வி நிகழ்வுகளும்மேலும் விருத்தி செய்யப்படும். இதன்மூலம் வளரும் பரம்பரையினர்க்கு ஆழமான, நிலையான அறிவு புகட்டப்படுவதுடன், இவர்கள் கம்யூனிஸ பிரக்ஞையிலும் தார்மீக உணர்விலும்வளர்த்தெடுக்கப்படுவர்.

சோவியத் மக்களின் நானாவிதமான ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பாரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும் பெருந்தொகையான நூல்களும் மற்றும் வெளியீடுகளும் பிரசுரிக்கப்படும். தொலைகாட்சிச் சேவை புதிய பிரதேசங்களுக்கு விரிவுபடுத்தப்படும். அனைத்துரக கலை, இலக்கியங்கள் மேலும் அபிவிருத்தி செய்யப்படும். கலாசார நிலையங்களின் பொருளாயத வளம் மேலும் வலுப்படுத்தப்படவுள்ளது.

சோவியத் மக்களின் பொருளாயத, கலாசாரத் தேவைகளை முழுமையாகத் திருப்திப்படுத்துவதே கட்சியினது பொருளாதாரக் கொள்கையின் உன்னதமான லட்சியமாகும். இதுதான் எமது திட்டங்களின் நோக்கம். அதே நேரத்தில் உற்பத்தியையும் அதன் திறனையும் மேலும் வளர்க்கவும் இது உதவுகிறது.

தோழர்களே, 'அடிப்படைத் திசை வழிகள்' உற்பத்தி அளவு மேலும் வளர்ச்சி அடைவதற்கும் தேசியப் பொருளாதாரம் மேலும் சமநிலையாக அபிவிருத்தி யடைவதற்கும் வழி சமைக்கின்றன.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பின்வரும் பிரதான இலக்குகள் சோவியத் பொருளாதாரத்தின் முன்னர் வைக்கப்பட்டுள்ளன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | 1975 | 1980 1000 மில்லியன் ரூபிள்களில் (கணக்கிடப்பட்டுள்ளது) | 1976 - 1980 ல் அதிகரிப்பு | |
|---|---|---|---|---|
| | | | 1000 மில்லியன் ரூபிள்களில் | 1975 சதவீசம் |
| தேசிய வருவாய் (1973 விலைகளில்) | 362 | 449-462 | 87-100 | 24-28 |
| நுகர்வு | 266 | 337-344 | 71- 78 | 27-29 |
| திரட்டு | | 112-118 | 16- 22 | 17-23 |
| உட்பட | 96 | | | |
| தொழிலுற்பத்தி (1967 ஜுலை 1 விலைகளில்) | 523 | 710-729 | 187-206 | 35-39 |
| ஏ பிரிவு | 380 | 524-540 | 144-160 | 38-42 |
| பி பிரிவு | 143 | 186-189 | 43- 46 | 30-32 |
| உட்பட | | | | |
| விவசாய உற்பத்தி (1965 விலைகளில் ஐந்தாண்டுகளின் சராசரி) | 91 | 104-106 | 13-15 | 14-17 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தேசியப் பொருளாதாரத்தின் பிரதான துறைகளின் உற்பத்தி அதிகரிப்பு முந்திய ஐந்தாண்டுத் திட்ட காலத்திய அதிகரிப்பிலும் பார்க்கக் கூடுதலாக இருக்கும். அதிகரிக்கும் ஒவ்வொரு புள்ளியினதும் கனதியும் கூடுதலாக இருக்கும். உதாரணத்திற்கு தொழிலுற்பத்தியில் ஒருசதவீத அதிகரிப்பு பரிமாணத்தில் 500 கோடி ரூபிள்கள் பெறுமதியுள்ள அதிகரிப்பாக அமையும். இது ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திய அளவிலும் பார்க்க 40 சதவீதமும், எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திய அளவிலும் பார்க்க 110 சதவீதமும் கூடுதலாகும்.

நாட்டினது உற்பத்தி உள்ளாற்றலை அதிகரிப்பதிலும், சோவியத் ராஜ்யத்தின் பொருளாதார வலிமையை மேலும் வலுப்படுத்துவதிலும் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் பெரும் உந்துதலாக அமையும்.

சமூக உற்பத்தியின் தொழில்நுட்ப மட்டத்தை உயர்த்துவதற்கும், பொருளாதாரம் முழுமையினதும் இயக்க வேகமும் திறன்மிக்கதுமான வளர்ச்சியை உத்தரவாதப்படுத்தவும் உற்பத்திச் சாதனங்களினதும், உழைப்புக் கருவிகளினதும், ரசாயன உற்பத்திகளினதும், எரிபொருட்களினதும், உலோகங்களினதும் உற்பத்தியில் கணிசமான திரட்சியும், வேகமிக்க வளர்ச்சியும் அவசியமானதாகும். கனரகத் தொழிலின் உற்பத்தி 38-42 சதவீதமாக அதிகரிக்கும்.

டிசம்பர் முழுநிறைவுக் கூட்டத்தில் தோழர் லியோனிட் இலியச் பிரெஷ்னேவ் கூறியதைப் போல கனரக தொழிலின் முன்னுரிமை வளர்ச்சி நுகர்வுப் பொருட்களின் பன்முக வியாபிதத்தில் கவனம் குறைக்கப்படுகிறது என்பதைக் குறிக்கவில்லை. ஐந்தாண்டுகளில் தொழில்துறை நுகர்வுப் பொருட்களின் உற்பத்தியை 4300 - 4600 கோடி ரூபிள்களால் அதிகரிக்கும். ஒன்பதாவது ஐந்தாண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுத் திட்ட காலத்தில் இந்த அதிகரிப்பு 3900 கோடி ரூபிள்களே. தேசியப் பொருளாதாரத்தில் நடப்பு நுகர்வு நிதி திரட்டு நிதியிலும் பார்க்க வேகமாக அதிகரிக்கும். இது 1980 ல் 27 - 29 சதவீத அதிகரிப்பாக இருக்கும். இது 1975 ஆம் ஆண்டிலும் பார்க்க 7100 - 7800 கோடி ரூபிள்கள் அதிகரிப்பாகும்.

நுகர்வு நிதியினது பங்கின் அதிகரிப்பு சமூக உற்பத்தியினது முடிவான பெறுபேறுகளினதும், அதன் அதிகரித்துவரும் திறனினதும் குறிகாட்டியாகும். அதே நேரத்தில் அது எமது சோஷலிஸ ராஜ்யத்தினது சமாதானக் கொள்கையை வலுவாக ருஜுப்படுத்துகிது..

தேசியப் பொருளாதார வளர்ச்சியை தீவிரப் படுத்துவதன் மீது திசை அமைக்கும் போது தேசியப் பொருளாதாரமும் வெவ்வேறு பிரிவுகளின் அளவுகளும் சரியான நிலையில் பேணப்படுவது பற்றி கண்டிப்பாக இருப்பது அவசியம். இந்தப் பணிக்கு ஏற்றதாக இருப்பதற்கு விவசாயத்திற்குச் சார்பாக திரட்டு நிதிகள் புனர் பகிரப்படும் போக்கு தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படுவது அவசியமாகிறது. 1961 முதல் 1970 வரை உற்பத்தி வசதிகளை உருவாக்க விவசாயத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு 11000 கோடி ரூபிள்களாக இருந்தது. ஆனல் 1971 முதல் 1980 வரை இது 26000 கோடி ரூபிள்களை அடையும். தேசியப் பொருளாதாரத்தில் இவற்றின் பங்கு 18 சதவீதத்திலிருந்து 23 சதவீதமாக உயரும். விவசாயத்தை எந்திரமயமாக்குவதற்கும் ரசாயனமயமாக்குவதற்கும் எடுக்கப்படும் சிக்கலான நடவடிக்கைகள் பற்றியும், நில அபிவிருத்தி வேலைகள் விரிவாக்கப்படுவது குறித்தும்,விவசாயத்தில் நிபுணத்துவக் கவனக்குவிப்பும் ஆகியன பற்றியும் ஐந்தாண்டுத் திட்டம் திட்டவட்டமான வரையறுப்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியப் பொருளாதாரத்தின் சமநிலை வளர்ச்சி மூலதன முதலீடு பற்றிய அறிவுபூர்வமான கொள்கையாலும், நிர்மாணம் பற்றிய நடைமுறையை விருத்தி செய்வதாலும் உத்தரவாதப் படுத்தப்பட வேண்டும்.

புதிய நிர்மாணங்கள் புதிய தொழில் நுட்பவியல்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதை ஒரு விதியாகவே கொள்ள வேண்டும். மூலதன முதலீட்டின் அதிகரித்த பங்கு ஏற்கனவே உள்ள தொழிலகங்களை புதிய உபகரணங்களால் மாற்றியமைப்பதற்கும், இவற்றின் புனர் நிர்மாணத்திற்கும் போக வேண்டும். உபகரணங்களில் இடப்படும் பங்கை அதிகரிக்கவும், நிலையான செல்வாதாரங்களின் முனைப்பான பங்குபற்றுதலுக்கும், உற்பத்தி வசதிகளை துரிதப்படுத்தவும், ஏற்கனவே உள்ள தொழிலகங்களில் புதிய பொருட்களை உற்பத்தி செய்யவும் இது பெரிதும் உதவும்.

நடப்பு ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும், மேலும் நீண்ட காலப் பகுதியிலும் நாட்டின் நம்பகமான மூலப்பொருள் வளங்கள் சமநிலையான பொருளாதார வளர்ச்சியை உத்தரவாதப்படுத்துவதில் முக்கிய பாத்திரத்தை வகிக்கும். சோவியத் யூனியனிடம் மிகப் பாரிய பயன்மிக்க கனிஜ வளங்கள் நிறைந்துள்ளன. என்றுலும் தேசியப் பொருளாதாரத்தின் வீச்சுள்ள வளர்ச்சி பல்வேறு வகை கனிஜ மூலப் பொருட்களின் தேவைகள் துரித கதியில் அதிகரிப்பதை அவசியமாக்குகிறது. உற்பத்திக்குச் செல்லும் மூலப் பொருட்களின் சப்ளையை தேவையான மட்டத்தில் பேணுவதற்காக இவற்றின் அகழ்வுடன் ஒப்பிடுகையில் ஊர்ஜிதமான கனிஜ மூலவளங்களின் வளர்ச்சிக்கு எமது திட்டங்கள் முக்கியத்துவமளிக்கும். வலு, மூலப்பொருட்கள் ஆகியவற்றில் எதிர்காலத்தில் ஏதாவது கட்டுப்பாடு ஏற்படுவதிலிருந்து இது எமது தேசியப் பொருளாதாரத்தைப் பாதுகாப்பதுடன், எத்தகைய அளவுச் சமமின்மைகளிலிருந்தும் பாதுகாப்பளிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலப் பொருட்களின் உபயோகமும் அதே வேளை யில் விருத்தி செய்யப்படும்.

பத்தாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தி லும், அதை தொடர்ந்த காலங்களிலும் மனித சக்தி வளத்தினை அறிவுபூர்வமாக பயன்படுத்து வதே சோவியத் பொருளாதாரத்தின் விகிதாசார வளர்ச்சிக்கான பிரதான காரணிகளில் ஒன்றாகும். தேசிய பொருளாதாரம் எந்தளவுக்கு வீச்சு மிக்க தாயிருக்கின்றதோ அந்த அளவுக்கு அதனது பிரிவு, பிராந்திய கட்டுமானத்தில் ஏற்படும் மாற் றம் துரிதமானதாக இருக்கும்; பொருளாயத உற் பத்தி வளர்ச்சியையும் மனித சக்தி வளங்களின் இருப்பினையும் ஒருமுனைப்படுத்தும் பணியையும் விரைவுபடுத்தும், 1980ம் ஆண்டுகளில் மனிதசக்தி வள இயற்கையான வளர்ச்சியில் ஒரு வீழ்ச்சி ஏற் படும் என்பதை தாம் நினைவிற்கொள்ள வேண் டும்.

இதன் விளைவாக, நாட்டினதும் நடப்பு நீண்டகால அபிவிருத்தியினதும் நலன்களுக்காக, உற்பத்தி ஆற்றலையும், மக்களின் வாழ்க்கைத் தரங்களையும் உயர்த்துவதில் பிரதான காரணி கள் என்ற வகையில் உற்பத்தியினை பல வழிகளில் தீவிரப்படுத்துவதற்கும் விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தினைத் துரிதப்படுத்துவதற்கும் உழைப்பு உற்பத்தியினை அதிகரிப்பதற்குமான ஒரு அவசியம் உள்ளது, இங்கு முக்கியமான விட யம் என்னவெனில் பொருளாயத மனித சக்தி, நிதி வளங்களின் ஒவ்வொரு அலகிலிருந்தும் பெறப்படும் பயன்பாட்டினை அதிகரிப்பதுவேயா கும். இதனால்தான் இப்பிரச்னைகள் ஒவ்வொரு தொழிலகத்திலும் ஒவ்வொரு நிர்மாணத் தளத்தி லும் கூட்டு, அரசாங்கப் பண்ணைகளிலும் நன்கு அலசி ஆராயப்பட வேண்டும். இப்பிரச்னைகளுக் குத் தீர்வு காணப்படுவதானது பத்தாவது ஐந் தாண்டுத் திட்ட இலக்குகளின் வெற்றிகரமான நிறைவேற்றத்துக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய பொருளாதாரம் துரிதகதியில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமாயின் விஞ்ஞான—தொழில்நுட்பப் புரட்சியின் சாதனைகள் சோஷலிஸ பொருளாதார அமைப்பின் ஆதாயங்களுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட வேண்டும் என்ற உண்மையினையே கட்சியின் பொருளாதாரக் கொள்கை அடியாதாரமாகக் கொண்டுள்ளது. இப்பணியினை நிறைவேற்றுவதில் விஞ்ஞானம் ஆற்றவேண்டிய பாத்திரம் மிக முக்கியமானது.

சமூக உற்பத்தியின் தீவிரமான வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் பொருட்டு ஒரு காத்திரமான தொழில்நுட்பக் கொள்கை பிரயோகிக்கப்படுவதனை எமது திட்டமிட்ட பொருளாதார அமைப்பு சாத்தியமாக்குகின்றது. இது விஞ்ஞான, தொழில்துட்ப வளர்ச்சியின் எல்லா மார்க்கங்களையும் ஒன்றிணைப்பதற்கு உதவவேண்டும்.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சிறப்பான பாத்திரத்தினை வகிக்கவுள்ள விஞ்ஞான, தொழில்துட்ப முன்னேற்ற மார்க்கங்களில் பின்வருவனவற்றினை நாம் வலியுறுத்தியாக வேண்டும்.

உழைப்புச் சாதனங்களின் உற்பத்தியில்—எந்திரங்களினதும் எந்திரத் தொகுதிகளினதும் செயல் திறனை அதிகரிப்பது; தனித்தனி எந்திரங்களைப் பயன்படுத்துவதிலிருந்து முழு தொழில்நுட்ப நிகழ்வுப் போக்கினையும் தழுவி நிற்கக்கூடிய எந்திர அமைப்புகளைப் பயன்படுத்தும் கட்டத்துக்கு மாறிச் செல்லுவது; உழைப்பு தீவிரப்படுத்தல் மார்க்கங்களை எந்திரமயப்படுத்துவதும் தன்னியக்க மயப்படுத்துவதும்.

தொழில்நுட்ப முறைகளை மேம்படுத்திவதில்-குறைந்த அளவினதான இயக்கங்கள் கொண்ட (உதாரணமாக, உலையற்ற உலோகவியல், சரடுக்கட்டையற்ற நெசவு) நவீன தொழில்நுட்பவியலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் மூலப்பொருட்கள், இதர பொருட்கள், எரிபொருள் ஆகியவற்றிலிருந்து கூடுதல் பயன்பாட்டினைப் பெறவும் சுற்றுடலைப் பாதுகாக்கவும் துணைசெய்யக்கூடிய தொழில்நுட்பவியலையும் விருத்தி செய்வது.

சக்திவளவியற்துறையில் — அணுமின் சக்திவளவியலின் வளர்ச்சியினைத் தீவிரப்படுத்துவது: நீர்பாசன தேவைகளைக்கருத்திற் கொண்டு நீர்மின் சக்தி நிலையங்களையும் குறைந்த செலவுள்ள நிலக்கரியிலும் பாரிய வளியியக்க ஜனனிகளிலும் இயங்கக்கூடிய ஆற்றல் மிக்க அனல்மின் நிலையங்களையும் நிர்மாணிப்பது.

பொருட்களின் உற்பத்தித் துறையில் உயர்தர உருக்கினை வெற்றிட உருக்கல் முறைகளைப் பிரயோகித்து உற்பத்தி செய்வது; கட்டுமானப் பொருட்களின் மொத்த உற்பத்தியில் அலுமினியம், தித்தனியம், பொலிமர்கள் முதலானவற்றின் பங்கினை அதிகரிப்பது; முன்னறிந்த இயல்புகளைக் கொண்டிருக்கக்கூடிய செயற்கைப் பொருட்களை உற்பத்தி செய்வது.

ஏற்கனவே ஸ்தாபிதமாகியுள்ள தொழில் நுட்ப முறைகளை மேம்படுத்துவதுடன் பொருளாதாரத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கக் கூடிய பிரச்னைகளைப் பற்றிய ஆய்வு தீவிரப் படுத்தப்பட வேண்டும். உதாரணமாக, சக்திவளவியற்துறையில், வெப்ப, அணு சக்தியினை நேரடியாக மின் சக்தியாக மாற்றுகின்றதிலிருந்து எழக் கூடிய பிரச்னைகள் பற்றிய தொடர்ந்து ஆழமான ஆய்வுகளை மேற்கொள்ளுவதற்கான அவசியம் அதிகரித்துள்ளது. கட்டுப்பாடுக்குட்பட்ட அனல் அணு எதிரியக்கம், மிகைக் கடத்தலியக்கம் முதலான பிரச்னைகளுக்கான தீர்வினைத் துரிதப் படுத்தவும் எமது விஞ்ஞானிகள் துரித பணியற்ற வேண்டும்.

சமூக உற்பத்தி ஆற்றல் என்பது ஒரு விஞ்ஞான — தொழில்நுட்பப் பிரச்னையோ அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தி பொருளாதாரப் பிரச்னையோ மட்டுமல்ல; அது ஒரு பாரிய சமூகப் பிரச்னையாகும். ஒவ்வொரு 'பூட்' (16 இ. கிராம்) உலோகத்துக்கும், தானியத்துக்கும் உயர்ந்த உழைப்பு உற்பத்திக்குமான உழைக்கும் மக்களின் நாளாந்த கரிசனைமிக்க உழைப்புடனேயே கம்யூனிஸம் துவங்குகின்றது என்ற லெனினது கருத்து இன்றைய நிலைமைகளில் சிறப்பான முக்கியத்துவத்தினைப் பெறுகின்றது. காங்கிரஸுக்கான மத்தியக் கமிட்டியின் அறிக்கை இதனை இவ்வாறு குறிப்பிடுகின்றது: ''எமது சமுதாயத்தின் செல்வம் எவ்வளவு துரித கதியில் பெருகிவருகின்ற போதிலும், கட்டுப்பாடான பொருளாதாரமும், சிக்கனமுமே பொருளாதர வளர்ச்சிக்கும் மக்களினது வாழ்க்கைத்தர உயர்ச்சிக்குமான முக்கிய முன் நிபந்தனைகளாக இன்னும் இருக்கின்றன''

முக்கிய தேசிய பொருளாதார, சமூகப் பிரச்னைகளை மேலும் விரிவாக விளக்குவதில் சமூக விஞ்ஞானத் துறைகளிலீடுபட்டுள்ள விஞ்ஞானிகளிடமிருந்து மேலும் பெரும் பணி எதிர்பார்க்கப்படுகின்றது.

பத்தாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் பின்பற்றப்படவுள்ள தொழில்நுட்பத்துறை சார்ந்த கொள்கையான சொத்துக்களின் ரூபிள் விகித உற்பத்தியினை, அதாவது, உற்பத்தி—சொத்து விகிதாசார வளர்ச்சியினை அதிகரிப்பதற்கு அவசியமான சூழ்நிலைமைகளை உருவாக்கும். கடந்த ஐந்தாண்டுகளில் நிலையான சொத்துக்களிலிருந்து பெறப்படும் உற்பத்தியினை ஒரு சத வீதத்தினால் அதிகரித்ததன் மூலம் 20—25 லட்சம் குடும்பங்களுக்கு வீடமைப்பு வசதிகளை செய்து கொடுக்கச் செலவாகும் நிதிக்குச் சமமான மேலதிக வருவாய் பெறப்பட்டது. புதிய ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய பணி என்னவெனில் தற்போதுள்ள உற்பத்தி வசதிகளை மேம்படுத்துவதும், உபகரணங்களைப் பயன்படுத்துவதில் நேரம் விரயமாவதைக் குறைப்பதுமேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு தொழிற்துறையிலும் உற்பத்தியின் பொருளாயத செலவினைக் குறைக்கும் பொருட்டு பொருளாயத சேமிப்பினுக்கு வகை செய்யும் தொழில் நுணுக்க முறைசளையும், வடிவமைப்பு முறைகளையும் பின்பற்றும் நிலைக்கு மாறிச் செல்லுவது முக்கியம் என்பதை நாம் வலியுறுத்துகின்றோம். மூலப் பொருள் வளங்கள், இரும்பற்ற உலோகத் தாதுகள், மரம் ஆகியவற்றினைப் பதனிடுவது பற்றிய சிறந்த முறைகளைக் கண்டறிவதும் எரிபொருள், மூலப் பொருட்கள் ஆகியவற்றினை மீதப்படுத்தத்துணை செய்யும் வன்கலங்களின் உற்பத்திக்கு முதலிடம் அளிப்பதும் முக்கியமான பணிகளாகவுள்ளன.

உழைப்பு உற்பத்தியின் வளர்ச்சி குறித்தும் விசேஷ அக்கறை செலுத்தப்பட வேண்டும் என்பதும் வாஸ்தவமே. முன்னைய 1971-1975 ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 23சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுமிடத்து, உழைப்பு உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் புதிய ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் 27சதவீதத்தால் அதிகரித்தாக வேண்டும். 260 லட்சம் தொழிலாளர்களின் உழைப்புச் சக்தியை அறிவுபூர்வமாகப் பயன்படுத்துவதில் இது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இது ஒரு மிகவும் பாரிய பணியென்பதை நீங்கள் உணர்வீர்கள். இதனை நிறைவேற்றும் பொருட்டு, தொழிலாளர் விகித சொத்து மட்டத்தினைத் தொழிற்துறையில் 37சத விதத்திலும், விவசாயத் துறையில் 59சத வீதத்திலும் அதிகரிப்பதற்கு நாம் உத்தேசித்துள்ளோம். சமூக உழைப்பின் உயர் உற்பத்தி, தேசிய வருவாய் வளர்ச்சியில் 85—90சத வீதமாக இருத்தல் வேண்டும். உழைப்பு ஒழுங்கமைப்பினை மேம்படுத்துவதும் உழைப்பு நேரத்தில் விரயத்தினை இல்லாதொழிப்பதும், உற்பத்தி ஒழுங்கினை மேம்படுத்துவதும் இதேயளவு முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

''அடிப்படைத் திசைவழிகள்'' பற்றிய நகலானது திட்டமிடல், முகாமை ஆகியவற்றினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் முழுப் பொருளாதார எந்திரத்தினையும் மேலும் மேம்படுத்துவதற்கான வழிமார்க்கங்களை வகுத்துக் காட்டுகின்றது. இப்பிரச்னைகளில் சோ. க. க.வினது 24வது காங்கிரஸும் பெரும் கவனம் செலுத்தியது என்பதை நீங்கள் அறிவீர்கள். இதன் பின்னர், காங்கிரஸின் தீர்மானங்களை நிறைவேற்றும் பொருட்டு சில பணிகள் ஆற்றப்பட்டுள்ளன. ஆனால், எமது வளர்ச்சியின் புறநிலைத் தேவைகளுக்கு இணைய ஒழுங்கமைப்பினையும் முகாமையினையும் மேலும் மேம்படுத்துவதன் அத்தியாவசியமானது, இன்னும் முக்கியத்துவம் வாய்ந்த பணியாகவேயுள்ளது. தோழர் லியோனிட் இலியிச் பிரெஷ்னேவ் வலியுறுத்தியதுபோல, ''பொருளாதார முகாமையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தாம் பெரு முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருத வேண்டும். இந்த நடவடிக்கைகளானவை 10வது ஐந்தாண்டுத் திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவேற்றத் துணை செய்யும்.''

புதிய ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் திட்டமிடல் ஏஜன்ஸிகள், அமைச்சுக்கள், இலாகாக்கள் ஆகியவற்றின் பணிகளின் நோக்கமானது சமூக உற்பத்தி ஆற்றலை அதிகரிப்பதன் மூலம் திட்டத்தின் குணவியல்பு வழிப்பட்ட குறிகாட்டிகளின் பாத்திரத்தினை அதிகரிப்பதாகவே இருக்கும்.

பல பொருளாதாரப் பிரச்னைகள் இதுவரை நாம் கையாண்ட வடிவங்களிலன்றி புதிய வடிவங்களில் திட்டத்தில் பிரதிபலிக்கப்பட வேண்டியதையும், முன்வைக்கப்படுவதையும் குணவியல்பு வழிப்பட்ட குறிகாட்டிகள் அமைப்பு அவசியமாக்குகின்றது என்பதும் வாஸ்தவமே. உற்பத்திப் பொருட்களின் தரத்தினை உயர்த்துவதனை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகள் ஆழமானவையாக இருப்பதுடன் மூலப் பொருட்கள், தொழில்நுட்பவியல், இறுதி உற்பத்திப் பொருட்களை நுகர்வுக்காகத் தயார் செய்தல் ஆகியவற்றினையும் தழுவிக் கொள்ள வேண்டும். இவை யாவும் ஐந்தாண்டுப் பொருளாதார அபிவிருத்தித் திட்டத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சுக்கள், தொழிலகங்கள் முதலானவற்றின் திட்டங்களிலும் உள்ளடக்கப்படவும், வலியுறுத்தப்படவும் வேண்டும்.

திட்டத்தின் அனைத்துப் பிரிவுகளையும், பொருளாயத உற்பத்தியின் எல்லாக் கிளைகளையும் முன்னேற்றமடைந்த விஞ்ஞானத்தின் மூலம் நெருக்கமாக இணைப்பதானது முழுத் திட்டத்திற்குமூடாக ஒரு சீரான இழையாக ஓடவேண்டும், அடிப்படை ரீதியான ஆய்வுப் பணிகளிலும்விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றத்தினை நேரடியாகப் பாதிக்கக் கூடிய பிரச்னைகளின் தீர்விலும் முன்னேற்றங்கள் ஏற்பட திட்டம் வகை செய்யும். எமது முக்கிய பணிகளில் ஒன்று என்னவெனில் உற்பத்தித்துறையில் விஞ்ஞான, தொழில்நுட்ப சாதனைகளைத் துரித கதியில் புகுத்துவதேயாகும். இது மேற்கொள்ளப்படாத பட்சத்தில் குறைவியபு வழிப்பட்ட ரீதியில் பொருளாதாரம் மேலும் மேம்பாடு பெறுவது அசாத்தியம்.

முக்கிய விஞ்ஞான, தொழில்நுட்ப, பொருளாதார, சமூகப் பிரச்னைகள் குறித்த ஆக்கபூர்வமான வேலைத் திட்டங்களை வகுப்பதானது திட்டமிடலை மேம்படுத்துவதில் ஒரு முக்கிய மார்க்கமாக மாறவேண்டும். இவ்வகையான திட்டங்கள், முக்கிய பிரச்னைகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டும், வெவ்வேறு பிரிவுகளுக்கிடையில் எழக்கூடிய பிரச்னைகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டும் முழுத் தேசிய-பொருளாதாரத் திட்டத்தினது கட்டுக்கோப்பினுள் வளங்களை ஒருமுனைப்படுத்தத் துணை செய்யும். பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், தேசிய பொருளாதாரத் திட்டத்தின் பிரிவு, பிராந்திய அம்சங்களுக்கு இயைந்த விதத்தில் சோவியத் ராஜ்ய திட்டமிடல் கமிட்டி ஆக்கபூர்வமான வேலைத் திட்டங்களை வகுக்க வேண்டும். முதன்மை முக்கியத்துவம் பெறும் பணிகள் எவையெனில், அணுசக்தி வளவியலின் உற்பத்தி அடிப்படையினை விருத்தி செய்வதற்கான ஒரு வேலைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டம், கடுமையான மனித உழைப்பினை எந்திர மயமாக்குவதற்கான ஒரு வேலைத்திட்டம், பரந்த அளவிலான பிராந்திய உற்பத்திக் கூட்டுகளை அமைப்பதற்கான திட்டங்கள் ஆகியவற்றினை வகுப்பதாகும்.

புதிய ஐந்தாண்டுத் திட்டத்தினை வகுப்பதற்கான தயாரிப்பு வேலைகள் பலவற்றினை நாம் ஏற்கனவேயே மேற்கொண்டுள்ளோம். நகல் அடிப்படைத் திசைவழிகள்'' தேசிய பொருளாதார அபிவிருத்தி தொடர்பான பல பிரச்னைகளை முன்னரைக் காட்டிலும் மேலும் திட்டவட்டமான விதத்தில் முன்வைக்கின்றது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டான 1976க்கான திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 1977க்கான பொருளாதார அபிவிருத்தித் திட்டத்தினை வகுக்கும் அதே வேளையில், திட்டமிடல் ஏஜன்ஸிகள் ஐந்தாண்டுத் திட்டத்தினை வெகு விரைவாக வகுத்து முடித்தல் வேண்டும். இது ஒரு அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில், இது எமது திட்டமிடலில் ஏற்படும் பாரிய குறைபாடுகளில் ஒன்றினை நிவர்த்தி செய்ய உதவும். நீண்ட கால கட்டமொன்றினுக்கென தேசிய-பொருளாதார திட்டங்களை வகுக்கும்போது திட்டமிடல் ஏஜன்ஸிகளும், இவற்றின் பின்னர் யூனியன் குடியரசுகளின் அமைச்சரவைகள், அமைச்சுக்கள், இலாகாக்கள், நாட்டின் அனைத்து பொருளாதார முகாமை அமைப்புக்கள் ஆகியன திட்ட நிறைவேற்றத்தின் மீதான தமது கட்டுப்பாட்டினை தளர்த்தத் தலைப்படவுஞ் செய்கின்றன. இக் குறைபாடு தொடர்பான விஷயம் குறித்து சோ. க. க. மத்திய கமிட்டியின் அறிக்கை அனைவரினதும் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

''அடிப்படைத் திசைவழி''களின் நகலில் முன்வைக்கப்பட்ட புதிய பணிகளின் அடிப்படையில், சோவியத் ராஜ்ய திட்டமிடல் கமிட்டியானது தேசிய பொருளாதார வளர்ச்சியில் மூல விகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாசாரங்களை வகுப்பது, சமநிலையான திட்டமொன்றினைத் தயாரிப்பது, உற்பத்திச் சக்திகளை பொருளாதார ரீதியில் பல்வேறு பிரதேசங்களுக்கும் விநியோகிப்பது, சமூக உற்பத்தி ஆற்றலினை உயர்த்தும் வழிவகைகளை நிர்ணயிப்பது ஆகியன குறித்து தீவிர கவனஞ் செலுத்த வேண்டும். இப்பணியினை ஆழமாகவும், ஆக்கபூர்வமாகவும் கையாள வேண்டுமாயின், ராஜ்ய திட்டமிடல் கமிட்டியானது அதனது தற்போதைய மேலதிக பொறுப்புக்களிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். இப்பொறுப்புக்களை பொருளாயத, தொழில்நுட்ப வழங்கலுக்கான ராஜ்யக் கமிட்டி, அமைச்சுக்கள், இதர ஏஜன்ஸிகள் ஆகியன கவனித்துக் கொள்ள முடியும்.

பத்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் முகாமையின் அமைப்புக் கட்டுமானத்தை மேம்படுத்துவது தொடர்பாக கட்சி வகுத்த கொள்கை தொடர்ந்து பின்பற்றப்படும். சில தொழிற்துறைகளின் முகாமை தொடர்பான பொதுவான திட்டங்கள் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இத்தொழிற்துறைகளில் உற்பத்தி, தொழிற்துறை சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன; பிரதான நிர்வாகப் பிரிவுகள் இல்லாதொழிக்கப்பட்டு வருகின்றன; முகாமையிலுள்ள தரங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு வருகின்றது. 1976ன் ஆரம்பத்தில் 2300 உற்பத்தி, விஞ்ஞான-உற்பத்திச் சங்கங்கள் இருந்தன. தொழிற்துறை உற்பத்தியில் இவற்றின் பங்கு 24 சதவீதமாக இருந்தது. தொழிற்துறையில் உற்பத்திச் சங்கங்களை நிறுவும் பணி பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பூர்த்தி செய்யப்படவுள்ளது. இச்சங்கங்களானவை தொழிற்துறை உற்பத்தி முகாமையில் ஒரு புதிய குணவியல்பு வழிப்பட்ட தோற்றப்பாடாகும்.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலகட்டத்தில், மூலதன நிர்மாணத்தில் முகாமைக்கான பொதுத்திட்டங்கள் வகுக்கப்பட வேண்டியுள்ளன. இத் திட்டங்களானவை, நிர்மாண அமைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்கள் இடையறுது 2-3 தரங்கள் கொண்ட முகாமை அமைப்பினுக்கு மாறிக்கொள்ளுவதற்கும், பரந்தளவிலான நிர்மாண-தொகுப்பு சங்கங்களின் ஸ்தாபிதத்துக்கும் வகை செய்தல் வேண்டும், விவசாயத்துறையில் பண்ணைகளுக்கிடையிலான ஒத்துழைப்பும், விவசாய-தொழிற்துறை ஒருங்கிணைப்பும் மேலும் வளர்ச்சி பெறவுள்ளன. இதன் அடிப்படையில் பாரிய தொழிலகங்களும் நிறுவப்படும். இவற்றின் இயக்கத்தை நெறிப்படுத்துவதற்கான பிரமாணங்கள் வகுக்கப்பட்டு, நிறைவேற்றப்படவுள்ளன.

தொழிற்துறையில் உற்பத்திச் சங்கங்களினை அமைப்பது, விவசாயத்துறையில் பண்ணைகளுக்கிடையிலான ஒத்துழைப்பு, விவசாய-தொழிற்துறை ஒருங்கிணைப்பு ஆகியன பொருளாதார வளர்ச்சிப் போக்கினது இன்றைய கட்டத்தின் விசேஷ அம்சங்களுக்கு இயைந்தவையாக இருப்பதுடன், தேசிய பொருளாதாரத்தினதும், முகாமையினதும் ஸ்தாபன அமைப்புக் கட்டுமானத்தை மேம்படுத்தவும் துணை செய்கின்றன.

புதிய நிலைமை, புதிய பணிகள் ஆகியவற்றின் பின்னணியில், எமது பொருளாதார எந்திரத்தின் இதர அம்சங்களும் மேம்படுத்தப்படும். உற்பத்திச் சங்கங்களை அமைப்பதானது சொத்துக்களுக்கான இறுப்புகள், பட்ஜட்டினுல் ஏற்படும் இதர செல்மதிகள், லாப விநியோக விகிதங்கள் போன்ற ஸ்திரமான (ஐந்தாண்டு) பொருளாதார விகிதங்களினதும் தரங்களினதும் பாத்திரத்தை அதிகரிக்கவும் துணை செய்கின்றன.

கடந்த சில ஆண்டுகளில் தேசியப் பொருளாதாரக் கருவிகள் அல்லது சாதனங்களின் அதிகரித்த பாத்திரமானது தொழிலகங்களும், சங்கங்களும் உற்பத்தி வளங்களை மேலும் நல்ல முறையில் பயன்படுத்துவதையும், உயர் லாபம் பெறப்படுவதையும் குறிப்பிடத்தக்க விதத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டியுள்ளது. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், ஏறத்தாழ 50,000 கோடி ரூபிள்கள் லாபமாகப் பெறப்பட்டன. இது எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஈட்டப்பெற்ற லாபத்தினைக் காட்டிலும் 50 சதவீதம் அதிகமானதாகும். இது சோவியத் ராஜ்ய பட்ஜட்டின் வருமான ஊற்றுவாய்களை அதிகப்படுத்தவும் உறுதிப்படுத்தவும், இவற்றின் கட்டுமானத்தை மேம்படுத்தவும் துணை செய்துள்ளது. லாபத்திலிருந்தும் தொழிலாக்கங்கள், சங்கங்கள் ஆகியவற்றின் இதர ஊற்றுவாய்களிலிருந்தும் பெறப்பட்ட 10,000 கோடிக்கும் மேலான ரூபிள்கள் பொருளாதர உந்துதல் நிதியில் சேர்க்கப்பட்டன. இவை உற்பத்தியினை தொழில்நுட்ப ரீதியில் புனரமைப்பது, போனஸ், சன்மானம் முதலானவற்றை வழங்குவது, உழைக்கும் மக்களின் சமூக நாளாந்த சௌகரியங்களை மேம்படுத்துவது ஆகியவற்றுக்காகப் பயன்படுத்தப்பட்டன.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், இத் தேவைகளுக்காக மேலும் பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. இந்நிதிகள் மிகவும் காத்திரமான முறையில் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதையும், ஒவ்வொரு தொழிலகத்திலும் இந்நிதிகளின் அளவினை உற்பத்தியை அதிகரிப்பதிலும், உழைப்பு ஆற்றலை உயர்த்துவதில்லும், தொழில்நுட்ப முன்னேற்றத்தினைத் துரிதப்படுத்துவதிலும் இத் தொழிலகங்கள் ஈட்டியுள்ள சாதனைகளே நிர்ணயிக்க வேண்டும் என்பதையும் கவனிப்பதே இங்குள்ள முக்கிய பணியாகும். பிறிதொரு முக்கிய அம்சம் என்னவெனில், தொழிலகங்களிலும் சங்கங்களிலும் எந்தத் தேவைகளுக்காக இந்த நிதிகள் ஒதுக்கப்பட்டனவோ அத் தேவைகளுக்காகவே இவை பயன்படுத்தப்பட வேண்டும் என்பது தான்.

பொருளாதாரத்தில் லாபகர குறிகாட்டிகள் ஒட்டுமொத்தமான விதத்தில் மேம்பாடடைந்துள்ள போதிலும், பல தொழிலகங்கள் இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஷ்டத்திலேயே இயங்கி வருவதனை நாம் அறிவோம். 1975ல் தொழில்துறைத் தொழிலகங்களில் 18 சதவீதமானவை தமது லாபத் திட்டங்களை நிவறவேற்றத் தவறிவிட்டன.

பொருளாதார இயக்கத்தின் ஆற்றலை அதிகரிப்பதில் ஊதிய, போனஸ் அமைப்பு முன்னெப்போதையும் விட கூடுதலான பாத்திரத்தினை வகிக்க வேண்டும். பொருளாதார உந்துதல்களின் முற்போக்கு வடிவங்கள் மேலும் விஸ்தாரமாக எதிர்வரும் காலத்தில் பிரயோகிக்கப்படவுள்ளன. உழைப்பு உற்பத்தியை அதிகரிப்பது, உற்பத்தி வசதிகளை முடிந்த விரைவில் செய்து முடிப்பது, தற்போதுள்ள உபகரணங்களின் பாவனையை மேம்படுத்துவது, ஆகியவற்றினை போனஸ் அமைப்பு தற்போதையக் காட்டிலும் மேலும் ஊக்குவிக்க வேண்டும்.

பொருளாதாரக் கணக்கிடல் அமைப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு நிதி-கடன் எந்திரத்தினை மேலும் ஆற்றல் மிக்கதாக்க வேண்டிய அவசியமும் இருக்கின்றது. தொழிற்துறையிலும், விவசாயத் துறையிலும், வர்த்தகத் துறையிலும், இதர கிளைகளிலும் கடன் வகிக்கும் பங்கு அதிகரித்து வருகின்றது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலுள்ள முக்கிய பணி என்னவெனில், உற்பத்தி வளங்களை அறிவுபூர்வமாகப் பயன்படுத்துவதிலும், உழைப்பு உற்பத்தி வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதிலும், செலவுகளைக் குறைப்பதிலும் கடன்களின் பாத்திரத்தையும், செயல்திறனையும் அதிகரிப்பதேயாகும், நிர்மாணத் துறையில், குறிப்பாக வாடிக்கையாளர்களுக்கான நீண்டகாலக் கடன்களை அதிகரிப்பதன் மூலம் கடன் உறவுகள் விசாலிக்கப்பட வேண்டும், இது தற்போதுள்ள தொழிலகங்களின் புனர் நிர்மாணத்துக்குத் துணை செய்யும்.

பொருளாதார எந்திரத்தினை மேம்படுத்துவதில், கட்சி எப்போதுமே பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளணி மத்தியில் முன்முயற்சியையும், சோஷலிஸ உழைப்பூக்கத்தையும் வளர்ப்பதற்குப் பெரு முக்கியத்துவம் அளித்து வந்துள்ளது. நவீன சோவியத் பொருளாதார உயர் அலுவலர் கரிசனை கொள்ள வேண்டிய விஷயம் என்னவெனில், புதிய விஞ்ஞான-தொழில்நுட்ப அணுகுதல்களையும் உழைப்பு, முகாமை ஆகியவற்றினை ஸ்தாபனப் படுத்துவதில் நவீன முறைகளையும் தீவிரமாகப் பயன்படுத்துவதேயாகும். இவருக்கு புதியவற்றினைச் சிருஷ்டிக்கும் ஆர்வ உணர்வு இருத்தல் வேண்டும். இவர் தனது தீர்மானங்களை ஒரு கட்சி வழிப்பட்ட அணுகுதலுடன் எடுத்துக் கொள்ள வேண்டும். இவருக்கு தனது துறை குறித்து நல்ல அறிவு இருத்தல் வேண்டும். இவர் கூட்டமைப்பில் ஓர் ஆசிரியராகவும், உற்பத்தித் துறையில் அமைப்பாளராகவும் இயங்க வேண்டும்.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நாட்டின் முன்னே கட்சி முன்வைத்திருக்கும் புனிதமான பணிகள் எமது சமுதாய வாழ்வில் பல புதிய தோற்றப்பாடுகள் உருவாக வகைசெய்கின்றன. இந்த வகையில் வெகுஜன ரீதியான சோஷலிஸ உழைப்பியக்கம் உழைப்பின் பால் ஒரு கம்யூனிஸ வழிப்பட்ட மனோநிலையை வளர்ப்பதற்கான இயக்கம் ஆகியவற்றினைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். பொருளாதார இயக்கத்தில் ஒவ்வொரு அம்சத்தின் மீதும் செல்வாக்குச் செலுத்துவதற்கு இவற்றினைக் காத்திரமான முறைகளாக உழைக்கும் வர்க்கமும், கூட்டுப் பண்ணை விவசாயிகளும், அறிவுத் துறையினரும் பயன்படுத்துகின்றனர். காங்கிரஸின் முன்னர், தொழிற்துறை, நிர்மாணத் துறை, போக்குவரத்துத்துறை. விவசாயத்துறை ஆகியவற்றினையும் பொருளாதாரத்தின் இதர துறைகளையும் சார்ந்த தொழிலாளர்கள் பொருளாதாரத்தையும்மக்களதுசேமநலத்தையும்மேலும் நெருக்கமாக்கும் பொருட்டு உற்பத்தி ஆற்றல், தரமான தொழிற்திறன் ஆகியவற்றை உயர்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்காக பரவலான உழைப்பியக்கம் ஒன்றினை ஆரம்பித்தனர்.

ஐந்தாண்டுத் திட்டப் பணிகளை நிறைவேற்று வதற்கான முக்கியமான முன் தேவை என்ன வெனில், மூலப் பொருட்களை வழங்கும் தொழிலகங்களுக்கும் இறுதிப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலகங்களுக்குமிடையிலான உழைப்புறவுகள் மேலும் விஸ்தரிக்கப்பட வேண்டியதே ஆகும். இது பொருளாதாரக் கடமைகளின் பூரணமான நிறைவேற்றத்தின் மீதான உழைப் பியக்கத்தின் ஒட்டுமொத்தமான தாக்கத்தினை அதிகரிப்பதுடன், அனைத்துக் கட்டங்களிலும் உற்பத்தியின் தரத்தினை மேம்படுத்தவும் செய்கின்றது.

தேசிய ரீதியிலான சோஷலிஸ உழைப்பியக்கம் பற்றிய தமது தீர்மானங்களை இயற்றும் போது, கட்சி மத்திய கமிட்டி, சோவியத் அமைச்சரவை, அகில-யூனியன் தொழிற்சங்க மத்திய கவுன்சில், இளம் கம்யூனிஸ்ட் லீக் மத்திய கமிட்டி ஆகியன சோஷலிஸக் கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அவசியமான நிலைமைகளை உருவாக்குவதனை ஒரு முக்கிய பணியாகக் கருதின.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய அம்சம் என்னவெனில் சர்வதேச தொழிற் பகுப்பில் எமது தேசியப் பொருளாதாரத்தினை மேலும் ஆழமாக ஈடுபடுத்துவதும், வெளிநாட்டு பொருளாதார ஒத்துழைப்பினை ஒரு நீண்ட கால அடிப்படையில் மேலும் விரிவுபடுத்துவதுமாகும். வெளிநாட்டு பொருளாதார உறவுகளின் பயனுறு இயல்பினை அதிகரிப்பதும் எமது முக்கிய கடமை களில் ஒன்றாக மாறியுள்ளது. இந்தப் பணியினை ஆற்றும் பொருட்டு நாட்டின் ஏற்றுமதிச் சக்தியைப் படிப்படியாக அதிகரிப்பதற்கு நாம் உத்தேசித்துள்ளோம் இத்துறையில் சோவியத் பொருளாதாரத்தின் வசம்மிகப்பாரிய சக்திவளம் உண்டு. இந்த முக்கிய பணியினை அமுல்படுத்தவும், உற்பத்தியை அதிகரிப்பதனை நோக்காகக் கொண்ட நட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிக்கைகளை கிரமானுகூலப்படி மேற் கொள்ளவும், எமது ஏற்றுமதிப் பொருட்களின் தரத்தை மேம்படுத்தவும் அமைச்சுக்கள், அரசாங்க இலாகாக்கள் ஆகியன உரியவற்றை செய்ய வேண்டும் வெளிநாட்டு வர்த்தகம் தேசிய பொருளாதாரத்தின் ஒரு முக்கிய கிளையாக மாறியுள்ள நிலையில், வெளிநாட்டுச் சந்தைகளின் விசேஷ தேவைகளுக்கு அமைய ஏற்றுமதி—மார்க்க தொழிற்துறைகள் பலவற்றினை ஆரம்பிக்கும் பிரச்னை எழுகின்றது.

இறக்குமதித் துறையில் முக்கிய விஷயமாக இருப்பதென்னவெனில், இறக்குமதிகளின் பெருக்கமானது தொழில்நுட்ப முன்னேற்றத்தை முடிந்தளவு துரிதப்படுத்தத் துணை செய்ய வேண்டும், பல்வேறுவகைப் பொருட்களுக்கான சோவியத் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணிக்கு உதவ வேண்டும், ராஜ்யத் திட்டத்தில் இடம் பெற்றுள்ள பொருளாதாரக் கொள்கைப் போக்கினுக்கு இயைந்ததாக இருக்க வேண்டும். இவ்விஷயத்தில் மத்திய திட்டமிடல் அயல்துறை வர்த்தக அமைப்புகள் மட்டுமன்றி, இதர அமைச்சுகள், இலாகாக்கள் அனைத்துமே இடயறுது கவனஞ் செலுத்த வேண்டும்.

எல்லா நாடுகளுடனுமான வெளிநாட்டுப்பொருளாதார உறவுகளை வியாபிப்பது சர்வதேச விவகாரங்களைப் பொறுத்த எமது கட்சியினது கொள்கைக்கு இசைவானதாகும்.

சோஷலிஸ நாடுகளுடனான ஒத்துழைப்பினை வளர்ப்பதற்கும் வலுப்படுத்துவதற்கும் நாம் தொடர்ந்து பெரு முக்கியத்துவம் அளித்து வருவோம். 1975 கோடை பருவத்தில் நடைபெற்ற ப.பொ.உ.க. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பலதரப்பு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்கான ஒருமுனைப்படுத்தப்பட்ட திட்டம், சோஷலிஸ பொருளாதார ஒருங்கிணைப்புக்கான 20 ஆண்டு வேலைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டம் ஆகியன எமது ஒத்துழைப்புக்கு மேலும் மேலும் முக்கியத்துவம் பெற்றதாக மாறி வருகின்றன. ஒத்துழைப்புக்கான நீண்ட கால சிறப்பு வேலைத் திட்டங்களின் அடிப்படையில் பொதுவானதும் கூட்டானதுமான பிரயத்தனங்களின் மூலம் சில முக்கிய பிரச்னைகளுக்குத் தீர்வு காணப் பட வேண்டும். மேற்படி நீண்டகாலத் திட்டங்கள் மிக அண்மையான எதிர்காலத்தில் சோஷலிஸ நாடுகளால் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளன. தொழிற் துறையில் ஒத்துழைப்பு, நிபுணத்துவ உறவு ஆகியன வியாபிக்கப்படுவதானது ஒரு முக்கிய பணியாகும். இதில் அமைச்சுக்களும், அரசாங்க இலாகாக்களும் கூடுதல் கவனஞ் செலுத்த வேண்டும்.

சகோதர சோஷலிஸ நாடுகளுடனான எமது வர்த்தகமானது ஒரு சிறப்பான இயல்பினைக் கொண்டிருப்பதுடன், சோஷலிஸ நிர்மாணத்தின் போது ஸ்தாபிதமாகிய நிலையான பொருளாதார தொடர்புகளையும் பிரதிபலிக்கின்றது. சோஷலிஸ சமாஜத்தைச் சார்ந்த நாடுகளின் நட்புறவினாலும், அரசியல் ஐக்கியத்தினாலும் நம்பகமானவை என்று உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள இத் தொடர்புகள் எல்லா சகோதர நாடுகளினது பொருளாதாரங்களின் துரிதமானதும் நிதானமானதுமான வளர்ச்சிக்கு அவசியமான விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவினதும், மூலப் பொருட்களினதும் ஊற்றுவாய்களாகத் திகழ்கின்றன.

வளரும் நாடுகளுடனான தனது ஒத்துழைப்பானது ஒரு ஸ்திரமானதும், பரஸ்பரம் பயனுள்ள தொழிற் பகுப்பினைக் கொண்டதாய் அமைய வேண்டுமென சோவியத் யூனியன் விரும்புகின்றது. அண்மை ஆண்டுகளில் பல ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுடன் சோவியத் யூனியன் செய்து கொண்ட நீண்ட கால பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கைகள் இந்த இலக்கினுக்குத் துணை செய்வதாய் அமைந்துள்ளன. ஜனநாயக, சமத்துவ கோட்பாடுகளின் அடிப்படையில் வளரும் நாடுகளுடனான எமது ஒத்துழைப்பினை நாம் விரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துவதுடன், இந் நாடுகள் தமது பொருளாதார சுயாதீனத்தை வலுப்படுத்தவும் உதவுவோம்.

முடிவமைதிப் போக்கு வலுப்பெற்று வரும் நிலையில், தொழிற்துறை ரீதியில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளுடனுன எமது பொருளாதார உறவுகள் குணுவியல்பு ரீதியில் புதியதான அம்சங்களைப் பெற்று வருகின்றன. ஐரோப்பிய பந்தோபஸ்து - ஒத்துழைப்பு மகாநாட்டினது இறுதி உடன்படிக்கையில் இடம் பெற்றுள்ள கோட்பாடுகளின் அடிப்படையில் இந்த உறவுகளை வெற்றிகரமாக விருத்தி செய்ய முடியும். எமது நாட்டில் தொழிற்துறை அபிவிருத்தித் திட்டங்களை நிர்மாணிப்பது, மேற்கத்தைய நாடுகளில் தொழிலகங்களை நிர்மாணிப்பதில் சோவியத் ஸ்தாபனங்கள் பங்கெடுப்பது ஆகியன தொடர்பான நீண்டகால ஒத்துழைப்பு உடன்படிக்கைகளைச் செய்யும் நடைமுறையினை நாம் தொடர்ந்து பின்பற்றி வருவோம். நஷ்ட ஈடு உடன்படிக்கைகள், கூட்டு ஆராய்ச்சி முதலானவை ஒத்துழைப்புக்கான சிறந்த வடிவங்களாகும்.

ஒத்துழைப்பின் பாலும், இந்த ஒத்துழைப்பின் வளர்ச்சிக்கான நல்ல சூழலை உத்தரவாதப்படுத்துவதற்கான கரிசனையின் பாலும் நிஜமான விழைவினைக் கொண்ட நாடுகளுடன் எமது வர்த்தக, பொருளாதார உறவுகள் வெகு துரிதமாக வளர்ந்தோங்கும் என்பதை இங்கு கூறத் தேவையில்லை. அப்போது தான், நிஜத்தில் பரந்ததும், ஸ்திரமானதுமான பொருளாதார உறவுகளைப் பேணுவது சாத்தியமாகும்.

தோழர்களே, ''1976 - 1980 ல் சோவியத் பொருளாதார அபிவிருத்திக்கான அடிப்படைத் திசைவழிக'' ளின் நகலில் முன்வைக்கப்பட்டுள்ள சமூக, பொருளாதாரக் கடமைகளானவை கம்யூனிஸ நிர்மாணத்தின் இன்றைய கட்டத்தில் கட்சியினது கொள்கைக்கு முற்றிலும் இயைபானவையாகும். மக்களின் வாழ்க்கைத் தரங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் உயர்த்துவது, உற்பத்தியைத் தீவிரப் படுத்துவது, உழைப்பின் தரத்தினை மேம்படுத்து வது ஆகியன நீண்ட காலப் பணிகளாகவுள்ளன. இவை பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தினது எல்லைகளையும் தொடர்ந்து மேவிச் செல்லும். வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியன பொதுப் பிரச்னை களுக்கு முகம் கொடுப்பதனைப் போலவே சமுதாயம் மேற்படி பிரச்னைகளையும் எப்போதும் தொடர்ந்து எதிர்கொண்டவாறிருக்கும். பத்தாவது ஐந்தாண் டுத் திட்ட காலத்தினைப் பொறுத்தளவில், இதனது பிரத்தியேகஅம்சம்என்னவெனில், இந்தஆண்டுகளி லேயே சமூக உற்பத்தியினது வளர்ச்சிக்கான குணு வியல்பு வழிப்பட்ட காரணிகளை எமது பொருளா தாரத்தில் பயன்படுத்தும் நிலைக்கு முழுமையாக மாறிச் செல்லும் போக்கினைப் பூர்த்தியாக்குவதற்கு எம்மாலானதனைத்தையுஞ்செய்தாக வேண்டும் என் பது தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# III

## ஆற்றலையும் தரத்தையும் அதிகரிப்பதன் மூலம் பொருளாயத உற்பத்தியை விருத்தி செய்தல்

ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சமூக - பொருளாதாரப் பணிகளுக்கு அமைந்த விதத்தில் ''அடிப்படைத் திசைவழிக'' ளின் நகலானது பொருளாயத உற்பத்தியை மேலும் விருத்தி செய்வது, இதனது கட்டுமானத்தை மேம்படுத்துவது, உற்பத்திப் பொருட்களின் உயர்ந்த தரத்தையும் தொழில்நுட்ப மட்டத்தையும் எய்துவது ஆகியவற்றுக்கான ஒரு வேலைத் திட்டத்தைக் கொண்டுள்ளது. சமூக உற்பத்தியின் மொத்த வளர்ச்சி அளவினைப் பொறுத்தளவில் அது பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் முன்னைய ஐந்தாண்டு திட்ட காலத்தைக் காட்டிலும் பெருமளவு அதிகரிக்கும்.

அடுத்த ஐந்தாண்டு காலத்தின் தொழிற்துறை உற்பத்தி 35-39 சதவீதத்தால் அதிகரிக்கவுள்ளது. கனரக தொழிற்துறையானது அதனது மூல முக்கியத்துவத்தை தொடர்ந்து, குறிப்பாக விஞ்ஞான - தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துவதில் பெற்றுவரும். 'குழு - ஏ' யைச் சார்ந்த தொழிற்துறைகளின் உற்பத்தி 38-42 சதவீதத்தால் அதிகரிக்கவுள்ளது. முக்கிய கனரக தொழிற்துறைகளின் உற்பத்திப் பெருக்கம் பற்றிய சில விவரங்கள் இவை:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | உற்பத்தி | | பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அதிகரிப்பு | |
|---|---|---|---|---|
| | 1975 | 1980-நகல் அடிப்படை திசையமைவுகளில் இடம் பெற்றவாறு | முழுமையான அதிகரிப்பு | 1975 ன் அதிகரிப்பு சதவீதம் |
| மின் சக்தி '100 மில்லியன் கி வா-மணிகள் | 1,038 | 1,340-1,380 | 302-342 | 29- 33 |
| நிலக்கரி—மில்லியன் தொன்கள் | 701 | 790-810 | 89-109 | 13-16 |
| எண்ணெய், எரிவாயு—மில்லியன் தொன் | 491 | 620-640 | 129-149 | 26- 30 |
| எரிவாயு, '100 மில்லியன் கன மீட்டர் | 289 | 400-435 | 111-146 | 38- 50 |
| உருக்கு—மில்லியன் தொன்கள் | 141 | 160-170 | 19- 29 | 13- 20 |
| உருட்டப்பட்ட இரும்பு உலோகங்கள்—மில்லியன் தொன்கள் | 98,6 | 115-120 | 16- 21 | 17- 22 |
| உலோக—அறுவை கருவிகள்— | 1,492 | 2,245 | 753 | 50 |
| ஆயிரம் துண்டுகள் | 232 | 245 | 13 | 6 |
| உலைக்களம், அழுத்தப் பொறி | 397 | 680 | 283 | 71 |
| ரூபிள்கள் | 50.5 | 58 | 7 | 15 |
| கனிஜப் பசளைகள்—மில்லியன் தொன் | 90 | 143 | 53 | 59 |
| செயற்கை பிசின்கள், பிளாஸ்டிக் ஆ.தொ | 2,840 | 5,396-5,964 | 2,556-3,124 | 90-110 |
| இரசாயன இழைகள், நூல்கள்-ஆ.தொ. | 955 | 1,450-1,500 | 495-545 | 52- 57 |
| செலியூலோஸ்—ஆயிரம் தொன்கள் | 6,840 | 9,230 | 2,390 | 35 |
| சீமெந்து—மில்லியன் தொன்கள் | 121* | 143-146 | 22,1-25,1 | 18- 21 |

* சர்வ - கூட்டுப் பண்ணைத் தொழிலகங்களின் உற்பத்தி நீங்கலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்துறையின் ஒவ்வொரு கிளைக்குமென முக்கிய பணிகள் முன்வைக்கப்பட்டுள்ளன. திட்டமிடப்பட்டுள்ள பணிகள் எத்துணை தீவிரமானவையோ, அத்துணை எதார்த்தபூர்வமானவை; தேர்ந்த முகாமையின் கீழ் நிறைவேற்றப்படக் கூடியவை.

அடுத்த ஐந்தாண்டு காலத்தில் கனரக பொறியியற் தொழிற்துறையின் உற்பத்தி 60 சதவீதத்தால் அதிகரிக்கவுள்ளது. பொருளாயத உற்பத்தியின் அனைத்துக் கிளைகளினது தொழில்நுட்ப மட்டத்தினை உயர்த்துவதிலும், குணவியல்பு வழிப்பட்ட குறிகாட்டிகளை மேம்படுத்துவதிலும் கனரக பொறியியற் தொழிற்துறை முக்கிய பாத்திரத்தினை வகிக்கின்றது. அணு, உலோக, இரசாயன பொறியல் தொழிற்துறைகளினதும் மின்பொறியியற் துறையின் சில கிளைகள், வானொலி எலத்திரோணிக் இயல், எந்திர - கருவி உற்பத்தி தொழிற்துறைகளினதும் வளர்ச்சிக்கு முதன்மை முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தேசிய பொருளாதாரத்தின் எல்லாக் கிளைகளினதும் வளர்ச்சியில் அடிப்படை பூர்வமானதும், தர வழிப்பட்டதுமான மாற்றங்கள் ஏற்படுவதற்கான அத்திவாரம் இடப்பட்டுள்ளது.

ஒரு ஒருமையான தொழில்நுட்பக் கொள்கையானது கனரக பொறியியற் தொழிற்துறையினைப் பொறுத்தளவில் பலவற்றினை அத்தியாவசியமாக்குகின்றது. இவை பற்றி ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. மனித உழைப்பினை துரிதமாகக் குறைக்க வல்லதும், எல்லாத் தொழிற் துறைகளிலும் உழைப்பு உற்பத்தியினை அதிகரிக்க வல்லதுமான எந்திரங்களை உற்பத்தி செய்வதற்கான விசேஷ பணிகளுக்கென ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்பதனை இங்கு நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.

இப் பணிகள் மிகவும் கஷ்டமானவை: ஆனல் இவற்றினுக்கு ஈடு கொடுக்கும் நிலையில் நாம் உள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளோம். எமது பொறியியற் தொழிற் துறையில் பயன்படுத்தப்பட்ட எந்திர உபகரணங்களில் கணிச மான அளவினதானவை புதுப்பிக்கப்பட்டுள்ளன. அண்மை ஆண்டுகளுக்கான புள்ளிவிபரங்களின் படி, பத்தாண்டு காலத்துக்குப் பயன்படுத்தப் பட்ட எந்திர உபகரணங்களின் அளவு மொத்தத் தில் 57 சதவீதமாகவே இருந்தது. இந்த விகிதம் தொழிற்துறை ரீதியில் அபிவிருத்தி யடைந்த மேற் கத்தைய நாடுகளினைக் காட்டிலும் அதிகமானதா கும். பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தன்னியக்கமயப்படுத்தப்பட்ட வார்ப்பட சாத னங்கள், ஒட்டு எந்திரங்கள் முதலானவற்றின் உற்பத்தி துரித கதியில் அதிகரிக்கும். பல்வேறு அளவுகளைக் கொண்ட பொருட்களின் உற்பத்திக் கென விரைவில் புனர்மாற்றஞ் செய்யப்படக் கூடிய தன்னியக்கமான உற்பத்தி இணைப்புகள் பல உற்பத்தித் தொழிற் துறைகளுக்கென ஆக்கப்பட வுள்ளன. இதன் பயனாக, எதிர்காலத்தில் புதிய மோஸ்தர்களிலான கார்கள், டிராக்டர்கள், மற் றும் எந்திர உபகரணங்கள் முதலானவற்றின் உற் பத்தியை தேர்ந்த முறையில் பக்குவப்படுத்துவது சாத்தியமாகும்.

எமது கனரக பொறியியற் தொழிற் துறை எதிர்கொண்டுள்ள சில முக்கிய பணிகளைப் பற்றி நான் இங்கு சுருக்கமாகக் கூறுகின்றேன்.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் எமது மின் எந்திர - நிர்மாண தொழிற்துறையில், அணுச் சக்தி நிலையங்களுக்கான கிளை உற்பத்தி எந்திரங் களை உருவாக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டது. அணு எந்திர - நிர்மாணம் எதிர்வரும் ஆண்டுகளில் துரித கதியில் வளரவுள்ளது. 1,000 மெகா வாட் எதிரியக்கிகளை உற்பத்தி செய்வதோடு, 1,500 மெகா வாட் எதிரியக்கிகளுடன் கூடிய அணு சக்தி அலகு உபகரணங்களின் பூரண தொகுதிகளின் உற்பத்தியும் மேற்கொள்ளப்படவுள்ளது. மின் எந்திர - நிர்மாணத் தொழிற் துறையானது 500, 800, 1,000 - 1,200 மெகா வாட்டுகள் செயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனுள்ள ஜனனிகளையும், 'டேர்பைன்' களையும், 250 மெகா வாட்டுகள் செயல்திறனுள்ள நீராவி - எரிபொருள் இணைப்புக்களையும் உற்பத்தி செய்ய வுள்ளது.

அடுத்த ஐந்து ஆண்டுகளில், பண்ணை எந்திரத் தொழிற்துறை கடந்த 5 ஆண்டுகளைக் காட்டிலும் ஏறத்தாழ 50 சதவீதம் அதிகமான எந்திரங்களை உற்பத்தி செய்யும். விவசாயத் துறைக்கென ஆற்றல்மிக்க 300, 150 குதிரை விசை டிராக்டர்களை இது உற்பத்தி செய்யும். கோலோஸ், நீவா, ஸிபிர் யாக் முதலான சுய - இயக்க தானிய அறுவடை எந்திரங்களின் உற்பத்தியும் கணிசமான அளவு அதிகரிக்கப்படவுள்ளது. எந்திரங்களின் நம்பகமான தன்மையையும், நீண்டகால பாவனையையும், இவற்றின் இயக்கச் சிறப்புக்களின் மேம்பாட்டினையும் உத்தரவாதப்படுத்தக் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவும் வகை செய்யப்பட்டுள்ளது.

உலோகவியற் தொழிற்துறைக்கான உபகரணங்களின் உற்பத்தியும் அதிகரிக்கப்படவுள்ளது. இதன் பொருட்டு கடந்த ஐந்தாண்டு காலத்தில் 140 சதவீதம் அதிகமான நிதிகளை ஒதுக்கியிருந்தோம். உருட்டல் உபகரணங்கள், தொடர்ந்து உருக்கினை வார்க்கும் இணைப்புகள், 400 தொன்கள் கொள்ளளவுள்ள பிராணவாயு மாற்றிகள், புதிய தன்னியக்க குழாய் - ஒட்டல் கருவிகள், குழாய் - உருட்டல் கருவிகள் ஆகியவற்றின் உற்பத்தி கணிசமான அளவு அதிகரிக்கப்படவுள்ளது. கனரக பொறியியற் தொழிற்துறையின் வளர்ச்சியானது இதர நாடுகளுக்கு உலோகத் தொழிற்துறை உபகரணங்களை ஏற்றுமதி செய்வது தொடர்பான எமது கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கும், உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் உதவும். தாது அகழ்வு உபகரணங்கள், கிணறு தோண்டல் உபகரணங்கள், எண்ணெய் - எரிவாயு பரிமாற்ற சாதனங்கள் ஆகியவற்றின் உற்பத்தியும் அதிகரிக்கப்பட்டாதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்துறைக்கு நவீன உபகரணங்களை வழங்குவதற்கும், புதிய தொழில் நுணுக்கங்களை பரந்த அளவில் அறிமுகப்படுத்துவதற்கும், தரக் கண்காணிப்பு அமைப்புகளைப் பயன்படுத்துவதற்கும் நவீன அதி - வேக கம்பியூட்டர்கள், வானொலி - எலத்திரோனிக் கருவிகள், லாஸர் மற்றும் நவீன உபகரணங்கள் ஆகியவற்றின் உற்பத்தியினை அதிகரிப்பதும் அவசியமாகின்றது. இது, வானொலி - பொறியியல், எலத்திரோனிக் இயல் உபகரண - உற்பத்தி இயல், கண்டிதமான எந்திர தொழிற்துறை ஆகியவற்றின் முன்னே முக்கியமான பணிகளை முன்வைக்கின்றது. அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில் உபகரணங்களினதும், தன்னியக்க சாதனங்களினதும் உற்பத்தி 60 - 70 வீதத்தில் அதிகரிக்கவுள்ளது.

இரசாயன, எண்ணெய் எந்திரத் தொழிற்துறைகளில், இரசாயன, எண்ணெய், எரிவாயு, கடதாசி தொழிற்துறைகளில் புதிய தொழில் நுணுக்கங்களைப் புகுத்துவதற்கான நவீன உபகரணங்களினதும் கருவிகளினதும் உற்பத்தியை மேலும் பக்குவப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. மூல வகை உபகரணங்களின் உற்பத்தி 50 - 60 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

மென்ரக, உணவுத் தொழிற் துறைகளுக்கான உபகரணங்களின் புதிய வகைகள் உற்பத்தி செய்யப் படவுள்ளன. உணவுத் தொழிற்துறையின் தன்னியக்கத் தொழிலகங்களுக்கான தன்னியக்க இணைப்புகளின் உற்பத்தி விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளது.

எரிபொருள், சக்திவளத்துறை: தனது பொருளாதார வளர்ச்சிக்காகத் தனது சொந்த எரிபொருளிலும், சக்திவளத்திலும் தங்கியிருக்கும் உலகின் ஒரே ஒரு பாரிய தொழிற்துறை நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத் யூனியனே ஆகும். இது எமது பொரு ளாதாரத்துக்கான நல்வாய்ப்பு என்பதுடன், இது எமது பொருளாதாரத்தின் நிதானமான வளர்ச் சிக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றுகவுள்ளது. ஆனல், இந்த ஆதாயத்தினை முழுமையாகப் பயன் படுத்துவதற்கு எமது வளங்கள் அறிவுபூர்வமாக வும், சிக்கனமாகவும் பயன்படுத்தப்படுவதனை உத் தரவாதப்படுத்துவது அவசியமானதாகும். அடுத்த ஐந்தாண்டுகளில், ஜல சக்தி, அணு எரிபொருள், நிலக்கரி ஆகியவற்றின் அடிப்படையில் எமது சக்தி வளம் விருத்தி செய்யப்படுவதற்கான அத்திவாரம் இடப்படும். எண்ணெய், எரிவாயு ஆகியவற்றைப் பொறுத்தளவில், இவற்றின் மேலதிக உற்பத்தி தொழில் நுட்பத் தேவைகளுக்காகப் பயன்படுத் தப்படும்.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போது. எகிபாஸ்துஸ், கான்ஸ்க - ஆசின்ஸ்க் நிலக்கரியினை மின்சக்தி உற்பத்திக்காகப் பயன்படுத்துவது கணிச மான அளவு அதிகரிக்கின்ற அதே வேளையில், யூரல் ஸிலும் வொல்காவிலுமுள்ள பாரிய அனல் மின் நிலையங்களில் சில எரிபொருளுக்குப் பதிலாக நிலக் கரியினைப் பயன்படுத்த ஆரம்பிக்கும். இதற்காக நிலக்கரி உற்பத்தியை எகிபாஸ்துஸ், கான்ஸ்க - ஆசின்ஸ்க், குஸ்டென்ஸ்க், தென் யகுடியா படுக் கைகளில் மேலும் அதிகரிப்பதற்கு நாம் திட்டமிடு கின்றோம். நாட்டின் மொத்த நிலக்கரி உற்பத்தி அதிகரிப்பின் 60 சதவீதம் மிகவுஞ் சிக்கனமான முறையாகிய திறந்த - வார்ப்பு முறை மூலமே உற்பத்தி செய்யப்படுகின்றது. ஒன்பதாவது ஐந் தாண்டுத் திட்ட காலத்துடன் ஒப்பிடும் போது, எரிவாயு உற்பத்தி ஏறத்தாழ 50 சதவீதத்தால் அதிகரிக்கும். அதே வேளையில், தொழில் நுட்பத் தேவைகளுக்கான இதன் நுகர்வு 100 சதவீதத்தால் அதிகரிக்கும். எண்ணெய்ப் பதனிடல் 25-30 சத வீதத்தால் அதிகரிக்கும்.

எரிவாயுவின் பிரதான ஊற்றுவாய்கள் எரி வாயு நுகர்வுக் கேந்திரங்களிலிருந்து தொலைவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதும் எரிவாயு எண்ணெய்க் குழாய் வரிசை அமைக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களில் கடுமையான சீதோஷ்ண நிலை நிலவுவதும் மாரிகாலத்தில் நிலத்தின் கீழ் எரிவாயுவினைச் சேமித்து வைப்பதற்கான பெருங் கொள்ளளவுள்ள களஞ்சியங்களை உருவாக்குவதனை அவசியமாக்குகின்றது. இதன் பொருட்டு, நிலத்தின் கீழான பழைய எரிவாயு சேமிப்புக் களஞ்சியங்கள் விஸ்தரிக்கப்படுவதற்கும், புதிய களஞ்சியங்கள் மாஸ்கோ, லெனின்கிராட் பிரதேசங்களிலும், உக்ரேனிலும், சோவியத் பால்டிக் குடியரசுகளிலும், திரான்ஸ்கோகேஸியாவிலும் அமைக்கப்படுவதற்கும் திட்டங்கள் வகை செய்யப்பட வேண்டும்.

சோவியத் யூனியனின் ஐரோப்பியப் பகுதியினதும், யூரல்ஸினதும் எரிபொருள் மின்சக்திப் பிரச்னைக்கு ஒரு காத்திரமான தீர்வினைக் காணுவது விசேஷ முக்கியத்துவம் பெறுகின்ற ஒன்றாகும். இப் பிரதேசத்தில் அதிகரித்து வரும் எரிபொருள், மின் சக்தி தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, **130-150** லட்சம் கிலோவாட் உற்பத்தித் திறனுள்ள அணு சக்தி நிலையங்களை நிர்மாணிக்கும் திட்டமொன்றினை அமுல்படுத்துவதும், சைபீரியா, கஸாக்ஸ்தான் ஆகிய நிலக்கரி வளஞ் செறிந்த பிரதேசங்களில் பாரிய அனல் மின் நிலையங்களின் நிர்மாணத்தைத் துரிதப்படுத்துவதும் அவசியமானதாகும். இது இப்பிரதேசங்களிலிருந்து சோவியத் யூனியனின் ஐரோப்பிய பிரதேசத்துக்கு மின்சக்தி அனுப்பப்படுவதற்கு வகை செய்யும்.

எரிபொருள் மின்சக்தி அமைப்பின் கட்டுமானத்தை அபிவிருத்தி செய்வதையும் எரிபொருள் மின்சக்தியின் அனைத்து ரகங்களையும் மிகவும் அறிவு சீராகப் பயன்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகள் செயல்படுத்தப்படுவதன்மூலம் **1980**ல் நடைமுறையிலுள்ள எரிபொருட்களை **15** கோடி தொன்களுக்குமதிகமாக சேமிப்பில் வைத்திருக்க வேண்டும். இந்த நடவடிக்கைகள் நாட்டிற்கு சகஜமான மின்சக்தி வினியோகத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும், தேசிய வருமானத்தின் சகல துறைகளில் திடமான வளர்ச்சி நிலைகளை உருவாக்குவதற்கும் உத்தரவாதமளிப்பதை சாத்தியமாக்குகின்றன.

இரும்பு, இரும்பு கலப்பற்ற உலோகவியல், ரசாயன தொழில் துறைகள் போன்ற பிரிவுகளில் பொருளாதாரத்தை முனைப்படுத்துவதும் அதன் செயலாற்றலை மேம்படுத்துவதும் உயர் தேவைகளாம். புதிய ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய பிரதான பணிகள் இவை.

இரும்பு, இரும்புக்கலப்பற்ற உலோகத் தொழிலில் மிகச் சிக்கனமான ரகங்களைக் கொண்ட உருக்குப் பொருட்களின் உற்பத்தி 50 - 100 சதவீதத்தினால் உயர்த்தப்படவுள்ளது. உயர் ரக உருக்கின் உற்பத்தியிலும் வளர்ச்சி காணப்படும். இத் தொழில் துறைகள், ஆக்ஸிஜன், மின்சக்தி கன் வேட்டர்களைக் கொண்ட உலோகங்களை உருக்கும் நவீன சாதனங்களை அறிமுகப்படுத்துவது, 400 தொன்கள் கொள்திறனுள்ள பெரும் கன்வேட்டர்கள், உயர்செயல் திறன்மிக்க தானியங்கி உருட்டு எந்திரங்கள், பெரும் கொள்திறன் கொண்ட இதர யூனிட்டுகள் ஆகியவற்றைக் கொண்ட 5000 கன மீட்டர்கள் பரிமாணமுள்ள ஊது உலை ஒன்றை நிர்மாணிப்பது என்பவற்றின் மூலமாக தொழில் நுணுக்கரீதியில் புனரமைக்கப்படவுள்ளது. ஊது உலை தொழில் கிரியைகளின்றி இரும்பிலிருந்து நேரடியாகவே உருக்கை உற்பத்தி செய்யக்கூடிய தான ஒல்கொல்எலெக்ட்ரோ-மெட்ரோ லோஜிகல் தொழிலகம் இயங்க வைக்கப்படும்.

இரும்புக் கலப்பற்ற உலோகத்தொழிலில்அலுமினியம் தாமிரம், நிக்கல், துத்தநாகம் மற்றும் இதர முக்கிய பொருட்களின் உற்பத்தியில் தொடர்ந்து வளர்ச்சி காண்பதற்கான வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இத் தொழிலின் மூலப் பொருட்களின் வினியோகத்திலுள்ள பின்னடை வைத் தாண்டுவதற்குப் பெருந் தொகையான நிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒதுக்கப்பட்டுள்ளது. இன்னும் தொட்டறியா உற்பத்திவளங்களை, குறிப்பாக, மூலப் பொருட்களிலிருந்து பயன்மிக்க ஆக்கக் கூறுகளைச் சம்பூர்ணமாகப் பிரித்தெடுப்பது, இப்பொருட்களை விரிவாகத் தொழில்படுத்துவது என்பவற்றினூடாகப் பூரணமாகப் பயன்படுத்தல் வேண்டும்.

ரசாயனத் தொழிலில் அதிபிரதானமான பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன. 1980ல் தாது உரவகைகளின் உற்பத்தி 143 தொன்களாக அல்லது 1975ல் இருந்ததைக் காட்டிலும் 60 சதவீதம் அதிகமாக இருக்கும். நவீன ரகங்களைக் கொண்ட பொலிமர் பொருட்களின் உற்பத்தி இரண்டுமடங்கிலும் அதிகமாக உயரும். செயற்கை ரப்பரினதும், இழைகளினதும் உற்பத்தி துரித கதியில் வளரும். ரசாயன தொழிலின் இந்த அபிவிருத்தியானது, இருதுறைகளுக்கிடையிலான ஏற்றத்தாழ்வைக் கணிசமான அளவு அகற்றுகிறது. மிகப்பெரிய கொள்திறனையுடைய சாதனங்களைப் பொருத்துவது, புதிய தொழில் நுட்பக் கிரியைகளை அறிமுகப்படுத்துவது ஆகியவற்றின் வழியே தொழிற்சாலைகளின் தொழில் நுட்பரீதியிலான மறுசாதன ஏற்பாட்டை உறுதிப்படுத்துகிறது.

வெட்டுமரம், தச்சுத் தொழில், மற்றும் மரக்கூழ், கடதாசித் தொழிலில் மரம் வெட்டலின் எந்திரரீக மட்டத்தை உயர்த்துவதும் வெட்டுமரத்தின் பயன்பாட்டை அபிவிருத்தி செய்வதும் பிரதான பணிகளாம். பொருளாதார வளர்ச்சித் திட்டம் அவசிய நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது. மரம் வெட்டலில் 2 சதவீதம் மட்டும் அதிகரித்தாலே மர - ஃபைபர் போட்டுகளின் உற்பத்தி 60 - 85 சதவீதமாகவும் மரக்கூழ் உற்பத்தி 35 சதவீதமாகவும், வீட்டுத் தளபாடங்களின் உற்பத்தி 40 - 50 சதவீதமாகவும் உயரும். செய்தித்தாள் அச்சகக் கடதாசிகளின் உற்பத்தியினதும் தர அபிவிருத்தியினதும் மேலும் வளர்ச்சிக்கான வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடப் பொருட்கள், நிர்மாணத்துறைச் சாதனங்கள் தொழிலில் கட்டிட இணைப்புச் சாதனங்களினதும் மிகப் பரந்த அளவில் கட்டடங்களையும் கட்டுமானங்களையும் முழுக்க முழுக்க யந்திர ரீதியாகப் பொருத்தும் நிர்மாண வேலைகளைத் துரிதப்படுத்த அவசியமான கட்டிட இணைப்புப் பாகங்களினதும் மற்றும் அவசியமான யூனிட்டுகளினதும் உற்பத்தியை உயர்த்துவதே முதலும் முக்கியமானதுமான பணி.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் சிக்கன நடவடிக்கையின் அளவும், தொழில் துறையில் குறிப்பாக உலோகவியல், ரசாயனத் தொழில் துறைகளில் பயன்படுத்தப்படும் நவீன தொழில் நுட்பக் கிரியைகளின் சிறப்புக்களும் சுற்றுச் சூழல் பாதுகாப்பில் விசேஷ நடவடிக்கைகளை எதிர்பார்க்கின்றன. இந்த நோக்கத்துக்காகப் பெரும்பாலான தொழில் துறையில் பெருந்தொகை நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நச்சுத் தன்மைமிக்க கழிவுப் பொருட்கள் சூழலைச் சென்றடையாமல் கட்டுப்படுத்த புதிய முறைகளும் சாதனங்களும் பயன்படுத்தப்ப வுள்ளன. நீரையும் காட்டின் வளங்களையும் விரிவாகவும் அறிவுபூர்வமாகவும் பயன்படுத்துவதற்கும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புறம்போக்கு நீரைத் திரும்பவும் பயன்படுத்தும் முறை தொழில் துறைகளிலும் புகுத்தப்படவுள்ளது. உதாரணத்துக்கு ரசாயனத் தொழில் துறை பெரும் உற்பத்தி வளர்ச்சியை கொண்டிருக்கின்ற போதிலும் அதன் கழிவு நீர் நதிகளையும், குளங்களையும் சென்றடைவதும் நச்சுத் தன்மை வாய்ந்த கழிவுப் பொருட்கள் சூழலைச் சென்றடைவதும் குறைக்கப்படும். அதே வேளையில் 1980 ம் ஆண்டில் தொழில் துறை நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் சுத்தமான நீரின் அளவு 1975 ன் மட்டத்தையே கொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருக்கும். விலைமதிப்பற்ற இயற்கை வளமான தண்ணீரை அறிவு சீராகப் பயன்படுத்துவதானது பிரதான பொருளாதாரப் பிரச்சினை ஒன்றாகும். நமது நாடு பிரமாண்டமான நீர்வளங்களைக் கொண்டிருந்த போதிலும் அவை சீரற்ற வகையில் அமைந்துள்ளன. தண்ணீரின் தேவை மிக விரைவாக அதிகரித்து வருகிறது. ஆனால் ஒரு பிராந்தியத்திலிருந்து இன்னொரு பிராந்தியத்திற்குத் தண்ணீரைக் கொண்டுவரும் திட்டங்களுக்குப் பெருந்தொகையான முதலீடுகள் மட்டுமல்ல நீண்ட காலமும் தேவை. இந்தக் காரணத்துக்காகத் தண்ணீரின் பாவனையைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்ட நடவடிக்கைகளுக்கு கூடுதலான கவனம் கொடுக்கப் படல் வேண்டும். விவசாயத் துறையில் நீர்வளங் களைச் சேகரிக்க வேண்டிய பெரும் ஆற்றல் வளங் கள் உள்ளன. இத் துறையில் நீர்ப்பாசனத்துக் காகப் பெருமளவிலான தண்ணீர் பயன்படுத்தப் படுகிறது. இந்த ஆற்றல் வளங்கள் யாவும் பயன் படுத்தப்படல் வேண்டும். அதே வேளையில் பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வடக்கு, சைபீரியன் நதிகளில் உள்ள வடிகால் அமைப்புக்களை வொல்கா படுகை, கஸாக்ஸ்தான், மத்திய ஆசியா பகுதிகளுக்குத் திசை மாற்றுவது போன்ற பிரதான பிரச்சினைகள் குறித்து ஆராய நாம் தொடங்க வேண்டும்.

''அடிப்படைத் திசைவழிகள்'' நகலில் வளர்ச்சிக்குத் தலையாய இடம் கொடுக்கப்பட்டுள்ள ''ஏ'' பிரிவு தொழில் துறைகள், விவசாயத்திற்குத் தொழில் அடிப்படை ஒன்றைக் கொடுப்பதற்காக அதைப் புனரமைக்கவும் பயனீட்டுப் பொருட்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தியைத் தொடர்ந்து அதிகரிக்கவும் கட்சி வகுத்த பணிகளுடன் நேரடியாகவே இணைந்துள்ளன.

விவசாயம் மத்திய கமிட்டியின் அறிக்கையில் விவசாயம் ஒரு விசேஷ இடத்தைக் கொண்டுள்ளது. 1965 மார்ச் மாதத்தில் நடைபெற்ற சோ. க. க. மத்திய கமிட்டியின் முழு நிறைவான கூட்டத்தில் மத்திய கமிட்டி திட்டமிட்ட கட்சியின் விவசாயக் கொள்கையை இடையறுதும் நிலையுறுதியுடனும் செயல்படுத்தப்படுவதானது அடுத்த ஐந்தாண்டுகளில் நாம் மேற்கொள்ளவிருக்கும் முழு வேலைகளின் பிரதான திசையமைவுகளில் ஒன்றாகும். நமது விவசாயக் கொள்கையின் நோக்கம் இந்தக் காங்கிரஸில் தோழர் லியோனிட் பிரெஷ்நேவ் வெளியிட்ட அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. விவசாயத்தை, உயர்ந்த செயல் திறன்மிக்க உயர்ந்த உற்பத்திப் பிரிவாக மாற்றுவதும், பண்ணைப் பொருட்களில் நாட்டின் வினியோகம் தங்கியிருப்பதைக் கணிசமான அளவு மேம்படுத்துவதும், அவற்றின் தரத்தை அபிவிருத்தி செய்வதும், தேசிய பொருளாதாரத்தின் இந்த முக்கிய பிரிவு காலநிலையில் தங்கியிருப்பதைக் குறைப்பதும், நகர்ப்புற, நாட்டுப்புற வாழ்க்கை நிலைமைகளை மேலும் சமமாக்குவதில் கணிசமாக முன்போவதும் ஆகியவையே கட்சியின் விவசாயக் கொள்கையின் நோக்கமாகும்.

1976 - 1980ல் பண்ணைப் பொருட்களின் சராசரி ஆண்டொன்றின் உற்பத்தியில் திட்டமிடப்பட்டுள்ள அதிகரிப்பு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | சராசரி ஆண்டு உற்பத்தி 1976-1980 | 10 வது ஐந்தாண்டுத் திட்டப் பகுதியில் சராசரி ஆண்டு அதிகரிப்பு | |
|---|---|---|---|
| | | பூரணமான | % % |
| மொத்த விவசாய உற்பத்தி ஆயிரம் மில்லியன் ரூபிள்களில் | 104-106 | 13-15 | 14-17 |
| முக்கிய பொருட்கள்: தானியம் மில்லியன் தொன்கள் | 215 - 220 | 33.5-38.5 | 18-21 |
| சூரியகாந்தி விதை மில்லியன் தொன்கள் | 7.6 | 1.6 | 27 |
| கரும்பு (துப்பரவு செய்ய வேண்டியது) மில்லியன் தொன்கள் | 95-98 | 19-22 | 25-29 |
| பருத்தி மில்லியன் தொன்கள் | 8.5 | 0.8 | 11 |
| இறைச்சி (வெட்டப்பட்ட எடை) மில்லியன் தொன்கள் | 15.0-15.6 | 0.9-1.5 | 7-11 |
| பால் மில்லியன் தொன்கள் | 94-96 | 6.5-8.5 | 7-10 |
| முட்டை ஆயிரம் மில்லியன் | 58-61 | 6.5-9.5 | 13-18 |

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 17170 கோடி ரூபிள்களை அல்லது மொத்த முதலீடுகளில் நாலில் ஒன்றுக்கும் அதிகமான பங்கை விவசாயத்துறை பெறவுள்ளது. அத்துடன் விவசாயத் துறைக்குத் தேவையான எந்திரங்கள், உரவகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், இதர பொருட்கள், மற்றும் தொழில் நுட்ப வளங்களை விநியோகிப்பதற்காக பெருந்தொகையான நிதி தொழில்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

கூட்டுப் பண்ணைகளும் அரசாங்கப் பண்ணைகளும் புதிய எந்திரங்களையும் போக்குவரத்துச் சாதனங்களையும் பெருந்தொகையில் பெறவுள்ளன.

| | விநியோகங்கள் 1971-1975 | -1976 1980 | 10 வது ஐந்தாண்டுத் திட்டப் பகுதியில் அதிகரிப்பு % % |
|---|---|---|---|
| விவசாய இயந்திரங்கள் ஆயிரம் மில்லியன் ரூபிள்களில் | 15.8 | 23 | 46 |
| கால்நடைப் பண்ணை, தீவன உற்பத்திக்கான இயந்திரங்கள் ஆயிரம் மில்லியன் ரூபிள்களில் | 6.7 | 10.3 | 54 |
| தானிய அறுவடை இயந்திரங்கள் (ஆயிரங்களில்) | 449 | 538 | 20 |
| உழவு இயந்திரங்கள் (ஆயிரங்களில்) | 1,700 | 1,900 | 12 |
| (மில்லியன்) | 119.5 | 158.7 | 33 |
| ட்ரக்குகள் மற்றும் விசேஷ வாகனங்கள் (ஆயிரங்களில்) | 1,102 | 1,350 | 23 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணைக் கருவிகளின் முழுத் தொகுதியையும் கொண்டதும் விரைவானதும் மிக சக்தியுடையதுமான உழவு யந்திரங்களின் உற்பத்தியை நமது தொழில்துறை அதிகரிக்கும். இதன் விளைவாக 1975 17 குதிரைச் சக்தியாக விருந்த ஒரு விவசாயியின் ஆற்றல் 1980 ல் 28 குதிரைச் சக்தியாக அதிகரிக்கும். இது தானிய பொருளாதாரத்தையும் கரும்பு வளர்ப்பையும் விரிவான எந்திர ரீதியாக்குவது இதர பயிர்ச் செய்கையினதும் அறுவடையினதும் கால்நடை வளர்ப்பு, தீவன உற்பத்தியினதும் எந்திர ரீதியான மட்டத்தைப் பெருமளவு உயர்த்துவது ஆகிய பணிகளைப் பூர்த்தி செய்வதை அருகில் கொண்டுவரும் சாத்தியத்தை அளிக்கிறது.

கால்நடை வளர்ப்புக்கான தீவன ஆதாரங்களை விரிவாக்குவதற்கு ஏராளமானவை செய்யப்படவுள்ளன. 1975ல் 4 1/2 கோடி தொன்னாக விருந்த கலப்புத் தீவனங்களின் உற்பத்தியை ஏறத்தாழ 1980 ல் 8 க் கோடியாக அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. தீவன உற்பத்திக்கான வழிவகையானது, அபிவிருத்தி செய்யப்பட்ட நிலத்தைப் பெருந் தொகையாகப் பயன்படுத்துவதும் புரதச் சத்து வளமுடைய பயிர்களுக்கான விதை நிலங்களை விரிவாக்குவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டது. இயற்கை உலர் புற்களங்களின் உற்பத்தி சக்தியை மேம்படுத்த அக்கறை செலுத்தப்படல் வேண்டும். இவற்றை சிறிய தொகைச் செலவுடன் இரண்டு மடங்கு அல்லது மூன்று மடங்காக்க முடியும். கால்நடை வளர்ப்பை மேம்படுத்துவதிலான இன்னொரு பிரதான திசையமைவு என்னவெனில் அதைப் புதிய தொழில்நுட்ப அடிப்படைக்கு மாற்றுவதும் கால்நடை - வளர்ப்புப் பொருட்களின் உற்பத்திக்கு புதிய தொழில்களிலும் இப்போதுள்ள கால்நடை வளர்ப்புப் பண்ணைகளைப் புனர்நிர்மாணிப்பதன் மூலமும் தொழில்துறை தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் என்பதே.

அதிபோஷாக்குச் சத்துள்ள உணவுப் பொருட்களான இறைச்சி, பால் போன்றவற்றிலான பய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னீடு நமது நாட்டில் தொடர்ந்து அதிகரிக்கும். இது, ஐந்தாண்டுத் திட்ட காலத்துக்கும் நீண்ட கால வாய்ப்புக்காகவும் கட்சி வகுத்த பணியாகும். இதை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதற்கு சோஷலிஸ முறையிலான கால்நடை வளர்ப்பின் உற்பத்திச் சக்தியை அதிகரிப்பது மிக அவசியமாகும். இக் காரணத்துக்காகவே ஐந்தாண்டுத் திட்டக் காலப் பகுதியில் கால்நடைகளின் தொகையிலும் தீவன ஆதாரங்களிலும் சமத்துவமான வளர்ச்சியைக் காணும் வகையிலும், மோசமான கால நிலைகளில் பயன்படுத்துவதற்கு அவசியமான தீவனங்களைச் சேமித்து வைக்கும் வகையிலும் ஒவ்வொரு மாகாண, பிராந்திய, குடியரசுகளிலுமுள்ள ஒவ்வொரு கூட்டுப்பண்ணையினது ஓராண்டுத் திட்டங்களும் ஐந்தாண்டுத் திட்டங்களும் வகுக்கப்படல் வேண்டும். இது மிகவும் பிரதானமான பணிகளில் ஒன்ருகும்.

விவசாயத்தை ரசாயனமயப்படுத்துவதன் மூலமாகவும் பரந்த அளவில் விளைச்சலை அதிகரிக்க முடியும். அடுத்த ஐந்தாண்டுகளில் பண்ணைத் தொழில் 46 கோடி 70 லட்சம் தொன்கள் தாது உரத்தை அல்லது 1971 - 1975 பகுதியைக் காட்டிலும் 50 சதவீதம் அதிகமான தாது உரத்தைப் பெறவுள்ளது. அத்துடன் பூண்டுக்கொல்லி, பூச்சுபுழுக் கொல்லிகளின் உற்பத்தியும் அதிகரிக்கப்படவுள்ளது.

ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளினூடாக சராசரி வருடாந்த விவசாய விளைவளவு 14 - 17 சதவீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது. 1976 - 1980 ம் ஆண்டுப் பகுதியில் சராசரி வருடாந்த தானிய விளைச்சல் 18 - 21 சதவீதமாக வருடாந்தம் 215 - 220 மில்லியன் தொன்களாக உயர வேண்டும். திட்டமிட்ட இலக்குகள் மிகச் சிறியவை. எனினும் காலநிலை சாதகமாக இருப்பின், விவசாயத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள பொருளாயத, தொழில் நுட்ப வளங்களுடனேயே உயர் விளைச்சலைப் பெறமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தியில் அதிகரிப்பானது, அனைத்துக்கும் முதலாக சகல பண்ணைப் பயிர்களின் விளைச்சல்களினதும் கால்நடை உற்பத்தித் திறனினதும் உயர்வினால் உத்தரவாதம் செய்யப்படல் வேண்டும் என்பது வலியுறுத்தப்படல் அவசியம். கடந்த ஐந்தாண்டுகளில் அடிப்படைத் தானிய தர சில பயிர்களின் விளைச்சலில் உயர்வு காணப்பட்ட போதிலும், உருளைக்கிழங்கு, சூரியகாந்தி - விதை ஆகியவற்றின் விளைச்சலில் வளர்ச்சியில்லை, கரும்பு, கூலவகைகளின் விளைச்சல் இறங்குமுகமாகவே இருந்தது. இதற்கான காரணத்தில் ஒரு பகுதியைக் கால நிலை மீது சுமத்தலாம். ஆனால் எல்லாவற்றிற்காகவும் காலநிலை மீது குற்றம் சுமத்த முடியாது. பயிர் விளைச்சலின் தரத்தை அதிகரிக்க வேண்டிய பணிக்கு நாம் முகம் கொடுத்துள்ளோம். இதில் பெரும் பகுதி விஞ்ஞானத்தைச் சார்ந்துள்ளது. அது, அதிக விளைச்சலைத் தரும் விதைகளையும் உற்பத்தியை முனைப்படுத்துவதற்குத் தேவையாகவுள்ள இனங்களையும் கூட்டுப்பண்ணை அரசாங்கப் பண்ணைகளுக்கு அறிமுகப்படுத்தி விளைச்சலை ஏற்படுத்த வேண்டும். விஞ்ஞான கழகங்களினதும் விவசாய அமைப்புக்களினதும் இத் துறையிலான பணிகள் நமது செயல் முறைகளுக்கு அளவானதாகவில்லை என்பதை ஒத்துக் கொண்டே ஆகவேண்டும். கூட்டுப்பண்ணைகளிலும், அரசாங்கப் பண்ணைகளிலும் யந்திரத்தின் பயன்பாட்டை அபிவிருத்தி செய்யவும், தாது உரவகைகள் வீணாவதைத் தடுக்கவும் தொழில் நுட்ப விவசாய ரசாயன சேவையின் தரத்தை உயர்த்தவும் பிரதான நடவடிக்கைகள் இந்தப் பத்தாவது ஐந்தாண்டுக் காலத்தில் எடுக்கப்படல் வேண்டும்.

உற்பத்தியின் தரத்தை உயர்த்துவதென்பது விவசாயத்தை எதிர்நோக்கியுள்ள மிகக் கடுமையான பிரச்சினையாகும். அரசாங்கத்துக்கு வினியோகிக்கப்படும் பெருந்தொகையான தானியங்கள் இன்னமும் தரக் குறைவானதாகவேயுள்ளன. அண்மை ஆண்டுகளில் பல பகுதிகளில் கிழங்கிலுள்ள சீனிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்து குறைந்துள்ளது. யூனியன் குடியரசுகளின் அமைச்சரவை, சோவியத் விவசாய அமைச்சு, சோவியத் அரசாங்கக் கொள்வனவு அமைச்சு ஆகியன ஐந்தாண்டுத்திட்ட நகலில் இது சம்பந்தமான செயலூக்கமிக்க நடவடிக்கைகளை அளிக்க வேண்டும்.

பண்ணைகளுக்கிடையிலான ஒத்துழைப்பு விவசாய - தொழில்துறை ஒன்றிணைப்பு என்பதன் அடிப்படையில் பண்ணைத் தொழிலை தனிச் சிறப்புடையதாக்கவும் ஒருமுகப்படுத்தவும் பெரும் கவனம் செலுத்தப்படும். இது, லியோனிட் இலியச் பிரெஷ்நேவ் சுட்டிக் காட்டியது போல் நமது விவசாய வளர்ச்சிப் போக்கில் பிரதான பாதையாகும். உழைப்பு உற்பத்தித் திறன் உட்பட சகல பொருளாதாரக் குறையீடுகள் அனைத்தும் தேர்ச்சி பெற்ற பண்ணைகளில் வழக்கமாகவே உயர்ச்சி பெற்றுள்ளன. இத் துறையில் ஏராளமான பணிகள் செய்ய வேண்டும். பண்ணைப் பொருட்களைக் கொள்முதல் செய்யும் கோரிக்கையின் சரியான அமைப்பின் மூலம் அதன் வெற்றி பல வழிகளிலும் அனுகூலப் படுத்தப்படும். விவசாய உற்பத்தியை தொழில் துறை அடித்தளத்துக்கு மாற்றுவதானது விவசாயத்தில் வளர்ச்சி பெற்ற எந்திரங்களையும் தொழில் நுட்பங்களையும் அறிமுகப்படுத்துவதற்கான நல்ல வாய்ப்புக்களை மட்டும் உருவாக்க வில்லை. கிராமப் புறத்தை மேலும் சோஷலிஸ முறையில் புனருத்தாரணம் செய்வதில் பெரும் ஆதாயத்தை அளிக்கிறது.

விவசாயத்துறையுடன் மென்தொழில் உணவுத் தொழில்துறைகள் நெருக்கமாகப் பிணைந்துள்ளமையால் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அவற்றின் உற்பத்தி 26 - 28 சதவீதமாக அதிகரிக்கும். மொத்தத்தில் பயனீட்டுத் தொழில்துறையின் விளைவளவு 30 - 32 சதவீதத்தால் அதிகரிக்கும்.

திட்டமிடப்பட்ட உற்பத்தி அதிகரிப்பு பின்வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | 1975 | உற்பத்தி 1980 அடிப்படைத் திசையமைவுகள் நகலில் வகுக்கப்பட்டுள்ளபடி | 10 வது ஐந்தாண்டுத்திட்டத்தின் முழுமையான வளர்சி | 1975ல் உயர்சி |
|---|---|---|---|---|
| மென் தொழில் துறை-ஆயிரம் மில்லியன் ரூபிள்களில் | 79 | 99—101 | 20—22 | 26—28 |
| கலாசார, வீட்டுச் சாமான்கள்-ஆயிரம் மில்லியன் ரூபிள்களில் | 22 | 35 | 13 | 57 |
| உணவுத் தொழில் ஆயிரம் மில்லியன் ரூபிள்களில் | 46 | 58—59 | 12—13 | 26—28 |
| இறைச்சி, பால் பண்ணைப் பொருட்கள்-ஆயிரம் மில்லியன் ரூபிள்களில் | 39 | 47—48 | 8—9 | 20—22 |
| கடற் பொருட்கள் (தகரத்திலடைக்கப்பட்ட மீன் உட்பட)-ஆயிரம் மில்யன் ரூபிள்களில் | 3.8 | 5.0—5.1 | 1.15-1.23 | 30—32 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9 வது ஐந்தாண்டுத் திட்டத்தில் மென் தொழில் மற்றும் பயனீட்டுப் பண்டங்களைச் செய்யும் தொழில்களின் வளர்ச்சிக்காகப் பெருந்தொகையான பணம் ஒதுக்கப்பட்டது. இதன் பயனாக அண்மைக்காலம் வரை பற்றாக்குறையாகவிருந்த ஏராளமான பண்டங்கள் தற்போது போதுமான அளவில் கிடைக்கின்றன. பண்டங்களின் தரத்தை உயர்த்துவதிலும் சில முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ளன. ஆனால் சோவியத் மக்களது நல்வாழ்வு உயர்ந்து வருவதற்கு ஏற்ப நமது தொழிற்சாலைகள் மக்களுக்காக உற்பத்தி செய்யவேண்டிய தேவை சாதாரணமானதல்ல. அத்துடன் அதிகரித்துவரும் பயனீட்டுத் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்யக்கூடிய உயர்தரப் பொருட்களுக்கும் என்றுமில்லாத தேவை ஏற்பட்டுள்ளது.

தரம், வசதி, புதுமைமிக்க பொருட்கள் சம்பந்தமாக அதிகரித்துள்ள தேவைகள் ஒரு குறிப்பிட்ட பாவனையாளர் குழுவிடமிருந்து எழவில்லை, மாருக அனைத்து நகர, கிராம மக்களிடமிருந்தே எழுந்துள்ளன. மென்தொழில் மற்றும் பயனீட்டுப் பொருட்கள் பெருமளவில் தங்கியிருக்கும் இதர தொழில்துறைப் பிரிவுகளின் உற்பத்தி ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தேவையைப் பூர்த்தி செய்வதாக இருக்கவில்லை. புதிய ஐந்தாண்டுத் திட்டத்தில் இது சம்பந்தமான பெரும் மாற்றங்களை உத்தரவாதப்படுத்த, மென்தொழில் துறைக்கு அடிப்படைப் பொருட்களையும் இதர பொருட்களையும் உபகரணங்களையும் வழங்கும் துணைத் தொழில் துறைகளில் மிகவும் கடுமையான முயற்சிகள் செயல்படுத்தப்படல் வேண்டும். நடைமுறையில் பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையும் பயனீட்டுப் பொருட்களின் உற்பத்தியில் ஒரு பகுதிதான். அதனால் தான், உயர்ரக சாயம் பல்வேறு பொலிமர் பொருட்கள், ரசாயனத் துறையைப் பொறுத்த வரை செயற்கை, சிந்தட்டிக் இழைகள் ஆகியவற்றைச் செய்வது, அதிகமான பண்டங்களை மட்டுமல்ல உயர்தரமான பண்டங்களையும் கூட உற்பத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் நவீன யந்திரங்களின் வினியோகத்தை உயர்த்தும் பொறியியலில் சில உறுதியான நோக்கங்களை வரையறுப்பது ஆகியவை குறித்து ஐந்தாண்டுத் திட்டத்தில் முழுமையான விரிவான கவனம் செலுத்த வேண்டிய அவசியமுமுள்ளது.

மக்களது உணவுத் தொழில் உற்பத்தியை உயர்த்துவதற்கு, தொழில்நுட்ப நோக்கங்களுக்காக, ஜீவாதாரமிக்க விவசாய மூலப் பொருட்களைப் பயன்படுத்துவதைக் குறைப்பதானது தொடாட்டறியா ஆற்றல் வளங்களில் ஒன்றாகும். 1975 ல் மரக்கறி எண்ணெய் தொழில் உற்பத்தியில் 42 சதவீதம் தொழில்நுட்ப பாவனைக்காகச் சென்றுள்ளது. சவர்க்கார உற்பத்தி, பெயிண்ட், மஞ்சள் மெருகெண்ணெய் அழுக்குப்போக்கிகள் ஆகியவற்றின் உற்பத்திக்கு சிந்தட்டிக்குகளை இடம் பெறச் செய்வதும் பொறியியல் துறைக்குத் தேவையான துணிக்கு பருத்தி, சிந்தட்டிக்குகளை இடம் பெறச் செய்வதும் பயனீட்டுத் தேவைகளுக்காக பண்ணைப் பொருட்களும் மூலப்பொருட்களும் பெருமளவு பயன்படுத்தப்படுவதைக் குறைக்கும்.

சேவைகள் தொழிலை விருத்தி செய்ய குறிப்பாக சில்லறை விற்பனை வசதிகளை நாடு முழுவதும் விரிவுபடுத்த 24 வது காங்கிரஸின் தாக்கீதுகளின் வழியே கடந்த ஐந்தாண்டுகளில் ஏராளமாகச் சாதிக்கப்பட்டுள்ளன. ஏராளமான புதிய கடைகள் நகரங்களிலும் கிராமப்புறங்களிலும் திறக்கப்பட்டுள்ளன. சில்லறை விற்பனையின் தரமும் அதிகரித்துள்ளது. இருந்தும் நமது வர்த்தகம் அதிகரித்து வரும் மக்களது தேவையைப் பூர்த்தி செய்கிறது என்று கூறமுடியாமலிருக்கிறது. இது சம்பந்தமாக ஏராளமான புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. புதிய ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இப்போதிருந்துவரும் குறைபாடுகளைத் தாண்டவும், தமது சேவையைக் கணிசமான அளவு அபிவிருத்தி செய்யவும், இத் துறையுடன் சம்பந்தப்பட்ட தொழிலுடனும் விவசாயத்துடனும் உள்ள தொடர்புகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுப்படுத்தவும் வினியோக ஊழியர்கள் மேலதிக உழைப்பை மேற்கொள்ள வேண்டும். பயனீட்டுப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழிலகங்களும் உற்பத்திக் கழகங்களும் தமது பங்கில், மக்களது தேவையையும் வர்த்தக நிலையங்களையும் மிக நெருக்கமாகப் படிக்க வேண்டும். இதற்காக அவை தமது சொந்த சில்லறை விற்பனை நிலையங்களைத் திறக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளதுடன் நிலைமையை அபிவிருத்தி செய்யும் முகமாக இச் சலுகைகளைப் பரவலாகப் பயன்படுத்துவது அவற்றின் கடமையாகும்.

இந்த அதிமுக்கிய பகுதியில் மிக நெருங்கிய அக்கறை செலுத்த வேண்டிய தேவை காங்கிரஸில் வெளியிடப்பட்ட மத்திய கமிட்டியின் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. பயனீட்டுத் தொழில் துறையுடனும் சேவைகள் பிரிவிடனும் சம்பந்தப்பட்டுள்ள அனைவரும் இதிலிருந்து அவசியமான முடிவுகளை உறுதியாக எடுத்துக்கொள்ள வேண்டும். பயனீட்டுப் பொருள் உற்பத்தியையும் சேவைகளையும் விஸ்தரிக்கும் விஷயத்தில் உழைக்கும் மக்கள் பிரதிநிதிகளின் ஸ்தல சோவியத்துக்களினுலும் ஏராளமான பணிகள் செய்ய முடியும். வர்த்தக, பொதுச் சேவை மற்றும் இதர சேவைகளின் தரம், அவற்றின் முனைப்புக்களிலும் அவை தமது சிறப்புரிமையை எவ்வாறு பயன்படுத்துகின்றன என்பதிலுமே பெரிதும் தங்கியுள்ளது.

போக்குவரத்து செய்தித் தொடர்பு. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சகல விதமான சாமான் போக்குவரத்து 30 சதவீதத்தாலும் பிரயாணிகள் போக்குவரத்து 23 சதவீதத்தாலும் உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நோக்கங்கள் சமூக உற்பத்தியின் திட்டமிட்ட வளர்ச்சியையும் நாடெங்குமுள்ள உற்பத்தி சக்திகளின் இட அமைவில் மாற்றங்களையும் உற்பத்தியில் அதிகரித்து வரும் ஒத்துழைப்பையும் போக்குவரத்தில் மிக அறிவு சீரான நிர்வாகத்தையும் தூண்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றிச் செல்லல், போக்குவரத்துக் கொள் திறனை விஸ்தரிக்கவும், சாமான் வண்டிகளை அதிகரிக்கவும், தொழில்நுட்பத் தரங்களை உயர்த்தவும் புகையிரதச் சேவை பிரதான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது. 3000 கிலோமீட்டர்கள் நீளமுள்ள புதிய புகையிரதப் பாதையை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பெய்கால் - அமுர் புகையிரதத் திட்டம் விரிவான வேலைகளைக் கொண்டுள்ளது என்பது நீங்கள் அறிந்ததே. இந்தக் காலகட்டத்தில் இதன் சில பகுதிகள் தொழிற்பட ஆரம்பமாகும். நாம் இத் திட்டத்தின்பால் விசேஷ அக்கறை செலுத்துகிறோம். ஏனென்றால் இது நமது தூர கிழக்குப் பகுதிகளின் பொருளாதார வளர்ச்சிக்கான சக்திமிக்க நெம்புகோலாகத் திட்டமிடப்பட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்துத் தொழில்துறை புதிய வகையான கமாஸ், ஸில், பெலாஸ் ட்ரக்குகளை பல நூறாயிரக் கணக்கில் பெறவுள்ளது. அடுத்த ஐந்தாண்டு காலத்தில் 62,000 - 65,000 கிலோமீட்டர்கள் நீளமுடைய கடின தரையுடைய மோட்டார் பாதை நிர்மாணிக்கப்படும் அல்லது புனரமைக்கப்படும்.

விமானப் போக்குவரத்துத் தொழில்துறையானது, புதிய என்ஜின்களுடன் கூடிய நவ நவீனமான விமானங்களைப் பிரயாணச் சேவையில் விடுவதற்கான விரிவான திட்டத்தைச் செயல்படுத்தவுள்ளது. சரக்குகள் ஏற்றிச் செல்வது பெருமளவில் அதிகரிக்கப்படும்.

கப்பல் போக்குவரத்தின் பொருளாயத, தொழில்நுட்ப ஆற்றல்களின் வளர்ச்சிக்காக, துறைமுக வசதிகளை விஸ்தரிக்கவும் சரக்கை ஏற்றி இறக்கும் வசதிகளை நிர்மாணிக்கவும் நாம் திட்டமிட்டுள்ளோம். நமது கப்பல் சேவை அதிக தொன்கள் எடைகொண்ட விசேஷ தன்மைமிக்க கப்பல்களைப் பெறவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றுக்கப்பல் தொகுதியின் சாமான் போக்குவரத்தும் தொழில் நுட்ப உபகரணங்களும் அதிகரிக்கும். உயர் கொள்திறன் கொண்ட கப்பற் தொகுதியையும் கடலிலும் நதியிலும் ஓடும் கப்பல்களையும் இது பெறும்.

குழாய்ப் போக்குவரத்து அபிவிருத்தி துரித கெதியில் நடைபெறும்.

சகல விதமான செய்திப் பரிவர்த்தனையின் வளர்ச்சியில் புதிய பாய்ச்சல்கள் மேற்கொள்ளப் படவுள்ளன. தொலைபேசி கேபிள்களின் நீளம் 60 சதவீதத்தால் அதிகரிக்கும். நகர்ப் புறங்களிலும் நாட்டுப் புறங்களிலுமுள்ள தொலைபேசிகளின் தொகை 40 சதவீதத்தால் அதிகரிக்கும். டெலிவிஷன் காண்பிக்கப்படும் பகுதிகள் கணிசமான அளவு விஸ்தரிக்கப்படவுள்ளன.

சகல தொழில்துறைகள், விவசாயம், போக்குவரத்து ஆகியவற்றில் வகுக்கப்பட்டுள்ள பணிகளைப் பூர்த்தி செய்வது என்பது மூலதன நிர்மாணத்தின் அமைப்பு முறையில் பெரிதும் தங்கியுள்ளது. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இத்துறைகளுக்கு 630,000 கோடி ரூபிள்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இது 25 சதவீத அதிகரிப்பே. 1971 - 1975 ல் இது 42 சதவீத அதிகரிப்பாகவிருந்தது. எனவே முதலீடுகளின் செயல்திறனை உயர்த்துவதை வலியுறுத்த வேண்டும். புதிய ஐந்தாண்டுத் திட்டத்தை வரையும் போது சோவியத் ராஜ்ய நிர்மாணக் கமிட்டி, சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் இலாகாக்கள் இந்த ஐந்தாண்டுக் காலத்திலும் அடிப்படை உற்பத்திச் சொத்துக்கள் மூலதன செலவின் வளர்ச்சியினைத் தாண்டிச் செல்ல வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்வது அவசியம். 1980 வரை முடிவடையா நிர்மாணத் திட்டங்களில் அரசாங்க முதலீடுகளின் வருடாந்த தொகையை 65 சதவீதமாகக் குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இது கடந்த ஐந்தாண்டுகளில் 76 சதவீதமாகவிருந்தது. இது அர்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்படுத்துவது என்னவெனில் நிர்மாணத்தைத் துரிதப்படுத்துவதன்மூலமும்முடிவடையவுள்ள திட்டங்களில் முதலீடுகளை ஒருமுகப்படுத்துவதன் மூலமும் நாம் 1300 கோடி ரூபிள்களை கூடுதலான அடிப்படைச் சொத்துக்களாகப் பெறுவோம்.

அடுத்த ஐந்தாண்டுகளில் மூலதன நிர்மாணமானது நமது நிதி, பொருளாயத வளங்களுக்குத் தூண்டுதல் அளிப்பதாக இருக்க வேண்டும்.

இது மத்திய கமிட்டி அங்கீகரித்த ''அடிப்படைத் திசைவழிகள்'' நகலில் முழுமையான அணுகு முறையாகக் காட்டப்பட்டுள்ளது. எனவே அமைச்சர்களும் இலாகாக்களும் முதலீடுகளில் மேலதிக நிதிகளை எதிர்பார்க்காது. தலையாய பணிகளின் திட்டமிடப்பட்ட தொகுதியைப் பூரணப்படுத்துவதையும், குறிப்பிட்ட காலத்துக்குள் திட்டத்தின் பிரகாரம் புதிய உற்பத்திக் கொள்திறன்களைச் செயல்பட வைப்பதையுமே தமது பணியாகக் கொள்ளல் வேண்டும்.

இன்றைய நிர்மாணத்தின் வீச்சுடன் திட்டமிடுதலுக்கு ஓராண்டு போதாது என்ற பிரச்சினையை சில தோழர்கள் காங்கிரஸில் பேசும்போது சரியாகத் தெரிவித்தார்கள். பத்தாவது ஐந்தாண்டுத் திட்டமானது வருடாந்த அடிப்படையில் அல்லாது 2 அல்லது 3 ஆண்டுகளின் திட்டவட்டமான புள்ளி விபரங்களுடன் கூடிய ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையில் நமது வீட்டு நிர்மாணத்தை அமைக்க உசிதமான நிலைகளைக் கொண்டுள்ளது.

நாம் முதலில் இத்தகைய திட்டமிடுதலை அறிமுகப்டுேத்தும் சாத்தியங்கள் குறித்து ஆராய்ந்தோம். ஆனால் அடுத்த ஆண்டில் ஒழுங்கமைக்கப்பட்ட திட்டங்கள் ஏராளமானவை முறையாயச் செயல்படுத்த வேண்டியுள்ளதால் இதைச் செய்ய முடியவில்லை. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜ்ய திட்டக் கமிட்டி, ராஜ்ய கட்டடக் கமிட்டி, பொருளாயத தொழில்நுட்ப வினியோகத்திற்கான ராஜ்ய கமிட்டி, இவற்றுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் யாவும் கட்டட நிர்மாண அமைச்சுடன் ஒருங்கிணைந்து இத்தகைய மூலதன முதலீட்டுத் திட்டத்திற்கான திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். இதன் நிர்மாணத்துக்கும், அவை இயங்குவதற்குமான சகல அவசியமான பொருளாயத வளங்களும் அளிக்கப்படல் வேண்டும். இத் திட்டம் எதார்த்த பூர்வமானதாக அமைய வேண்டும் (கரகோஷம்)

கட்டட நிர்மாணச் செலவினைக் குறைப்பதற்கு ஆகக் கூடுதலான கவனம் செலுத்தப்படும். பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இவை 3-5 சதவீதத்தால் குறையும். இதர நடவடிக்கைகளுடன் இது உற்பத்தி வளர்ச்சிக்கான மூலதனங்களின் வீதத்தை 5 சதவீதத்தால் குறைப்பதைச் சாத்தியமாக்கும். எனவே தொழில் துறையில் மேலதிகமாக ஏறத்தாள 12,000 கோடி ரூபிள்களைச் சேமிக்க முடியும்.

வேளை வரும்போது, தற்சமயம் இயங்கிக் கொண்டிருக்கும் தொழிலகங்களை தொழில்நுட்ப ரீதியில் மறுசாதன ஏற்பாட்டிற்குள்ளாக்கவும் புனர் நிர்மாணம் செய்யவும் நடவடிக்கை எடுப்போம். இது குறைந்த செலவில் உற்பத்தியை அதிகரிக்கும் வாய்ப்பை அளிக்கிறது. இது ''அடிப்படைத் திசையமைவுகள்'' நகலில் துல்லியமாகக் காட்டப்பட்டுள்ளது.

கட்டடங்களைப் பொருத்துவதிலும் பெரும் கட்டுமானப் பாகங்கள், யூனிட்டுக்களை இணைப்பதிலும் விரிவான அளவில் எந்திரங்களைப் பயன்படுத்துவதைப் பெருமளவில் விஸ்தரிப்பதற்கான நிர்மாணம் துரிதப்படுத்தப்படும். பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் மொத்த கட்டடங்களின் அமைப்பில் பாகங்களைக் கொண்டு இணைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் நிர்மாணத்தை 45 சதவீதத்தால் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஐந்தாண்டுத் திட்டமானது, உற்பத்தி செய்யப்பட்ட கட்டட இணைப்பு சாதனங்களின் கணிசமான அளவை விஸ்தரிக்கக் கூடியதான கட்டடப் பொருள் தொழில் துறைக்குப் பொருந்தக்கூடிய குறியிலக்குகளைக் கொண்டுள்ளது.

கட்டடத் தொழில் துறையில் பெருமளவு விசேஷத்துவமிக்க அமைப்புக்களாக நமது நிர்மாணத் துறைத் தொழிலகங்கள் மாறிக் கொண்டிருக்கின்றன. இதனால் தான் உயர் உழைப்பு உற்பத்தித் திறனின் வழியே கட்டட இணைப்புத் தொகுதியின் சகல வளர்ச்சியையும் உத்தரவாதம் செய்ய பொருளாதாரத்தில் வழிவகைகள் செய்ய முடிகிறது.

உற்பத்திச் சக்திகளின் இட அமைவு. பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நமது நாட்டின் யூனியன் குடியரசுகளுக்கும் பிராந்தியங்களுக்கும் இடையிலான பொருளாதாரப் பிணைப்புக்கள் சோவியத் யூனியனின் ஒற்றைப் பொருளாதாரக் கட்டுக்கோப்புக்குள் இன்னும் நெருக்கமாக வளரும். பிரதேச உழைப்புப் பிரிவு மேலும் செயலூக்கமிக்கதாக இருக்கும். அனைத்து யூனியன்களின் நோக்கங்களை அடைவதற்கு ஒவ்வொரு குடியரசும், பிராந்தியமும் செய்யும் பங்களிப்பு அதிகரிக்கும். கட்சியின் லெனினிய தேசிய இனக் கொள்கையின் வழியில் சகல யூனியன் தன்னுதிக்கக் குடியரசுகளினதும், பொருளாதாரப் பகுதிகளினதும் சுயாட்சிப் பிராந்தியங்களினதும் தேசியப் பகுதிகளினதும் கணிசமான பொருளாதார முன்னேற்றம் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது.

நமது திட்டமிடப்பட்ட ஒற்றைச் சோஷலிஸ்ட் பொருளாதாரத்தினதும் குடியரசுகளின் பரந்த முன்முயற்சிகளினதும் அடிப்படையில் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வளர்ச்சி மட்டங்கள் தொடர்ந்து சமமாக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது நமது யூனியன் குடியரசுகள் சகலதும் உயர் வளர்ச்சி பெற்ற தொழில் துறைகளையும் பெரிய அளவிலான யந்திரமயமாக்கப்பட்ட பண்ணைகளையும் கொண்டிருக்கின்றன. அழிக்க வொண்ணு நட்புறவு, சகோதரத்துவப் பிணைப்புக்களினுல் ஐக்கிமுற்றுள்ள அவை, பொருளாயத உற்பத்தி, விஞ்ஞானம், கலாசாரத்தின் சகல பகுதிகளிலும் மேலும் வளர்ச்சி காண்பதற்குத் தேவையான சகலதையும் கொண்டுள்ளன.

யூனியன் குடியரசுகளின் பொருளாதார வளர்ச்சிக்கான சகல உறுதியான அம்சங்களும் ''1976 - 1980 ம் ஆண்டுகளில் சோவியத் யூனியனின் பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படைத் திசையமைவுகள்'' நகலில் போதுமான விளக்கத்துடன் வகுக்கப்பட்டுள்ளன. அவை அண்மையில் நடைபெற்ற யூனியன் குடியரசுகளது கம்யூனிஸ்ட் கட்சிகளது மகாநாட்டிலும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. எனவே அவற்றைத் தொடர்ந்து நான் ஆராயப் போவதில்லை.

தொழில்துறை உற்பத்தி ஏறத்தாள 50 சதவீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டிய கிழக்குப் பகுதிகளின் குறிப்பாக சைபீரியாவின் வளர்ச்சி முதலிடத்தைக் கொண்டிருக்கும். சக்தி - முனைப்புத் தொழிலகங்களும், எரிபொருள் தொழில், விவசாயம் அத்தோடு ஏக காலத்தில் வீடமைப்பு, பயனுடமை, கலாசார, சமூக ஸ்தாபனங்கள், நகர்ப்புறப் போக்குவரத்து ஆகியவை உள்ளிட்ட முழு சமூக உள்கட்டமைப்பு ஆகியவை சைபீரியாவிலும் சோவியத் தூர கிழக்கிலும் உயர்வீதத்தில் விஸ்தரிக்கப்படும். உழைப்பு - முனைப்புடைய உற்பத்தி சாதகமான மனித சக்தி சமபாட்டுடன் இப் பகுதிகளில் அமைக்கப்படவுள்ளது. சோவியத் யூனியனின் ஐரோப்பிய பகுதியிலும் யூரல்ஸிலும் தொழில் துறை வளர்ச்சியானது இயங்கும் தொழிலகங்களைத் தொழில் நுட்ப ரீதியில் மறு - சாதன ஏற்பாட்டிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள்ளாக்குவது, புனர் நிர்மாணம் செய்வது என்ற பாதையை வெகுவாகப் பின்பற்றும்.

நாட்டின் தனிப் பிராந்தியங்களின் அமைப்புக்கள் பிரதான பொருளாதார வேலைத் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலமாகவும் பிராந்திய உற்பத்தித் தொழிலகங்களை ஸ்தாபிப்பதன் வாயிலாகவும் மேன்மேலும் உறுதிப்படுத்தப்படும். இங்கு ரஷ்ய சம்மேளனத்தின் கறுப்பு மண்ணற்ற பிராந்தியங்களின் விவசாய வளர்ச்சிக்காக ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட வேலைத் திட்டங்களை இங்கு நாம் குறிப்பிடலாம் அவை, குர்ஸ்கிலுள்ள தொழில் - விவசாய வலயம், மேற்கு சைபீரிய பிரதேச — தொழில் நிறுவனம், அங்காரா — யெனிசெய் நிறுவன அமைப்பு, தென்தாஜிக் நிறுவனம் மற்றும் பல. தற்போது நிர்மாணத்திலுள்ள பெய்கால் - அமுர் புகையிரதப் பாதையை மையமாகக் கொண்டு ஏராளமான தொழில்கள் அமைக்கப்படவுள்ளன. அவற்றுள் கனிஜ மூலப் பொருட்களைக் கொண்ட சுல்மன் - அல்டன் தொழில் கூட்டும் மற்றும் பல தொழில்களும் அடங்குகின்றன. இத்தகைய தொழில்களை உருவாக்குவதற்கு அமைச்சுக்கள், வினியோக அமைப்புக்கள், இலாகாக்கள், அபிவிருத்தி - கட்டட தொழில் நிறுவனங்கள், வினியோகத் தொழிற்சாலைகள் மற்றும் பல சம்பந்தப்பட்ட தொழில்களின் கண்டிப்பான ஒருங்கிணைவு வேண்டும். காங்கிரஸில் சமர்ப்பிக்கப்பட்ட மத்திய கமிட்டி அறிக்கை இதில் கவனம் செலுத்தியுள்ளது. உடனடியாக, பாரிய அளவிலான வேலைத் திட்டங்களையும் தொழில்களையும் செயல்படுத்தவும் அபிவிருத்தி செய்யவும் ஒருங்கிணையும் பொருத்தமான நிறுவன அமைப்புக்காக நாம் உழைக்க வேண்டும்.

ஸ்தல சோவியத்துக்கள், அரசாங்க ஏஜன்ஸிகள், யூனியன் குடியரசுகளின் அமைச்சரவைகள் ஆகியவை பிரதேச உற்பத்தித் தொழில்களை ஸ்தாபிப்பதில் உறுதியான, ஆக்கபூர்வமான பாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரத்தை வகிப்பது மிகப் பிரதானமானது. தொழில் துறை நிறுவனங்கள், வீடமைப்பு, கட்டடப் பயன் பாடுகள், கலாசார வசதிகள், பள்ளிக்கூடங்கள், மருத்துவ விடுதிகள் ஆகியவற்றின் நிர்மாணத்தின் மிது செயலூாக்கமிக்க கட்டுப்பாடும், குறித்த காலத்தில் செயல்துறைப்படுத்தல், வெகுஜன வர்த்தகத் துறையில் தராதரம் பெற்ற தேர்ச்சியாளரைப் பயன்படுத்தல் இவை யனைத்தும் ஸ்தல அரசாங்க ஏஜன்ஸிகள், சோவியத்துக்களின் நடவடிக்கையில் பல வழிகளிலும் சம்பந்தப்பட்டுள்ளன.

நமது நாட்டின் பரந்த பிரதேசத்துக்கூடாக உற்பத்திச் சக்திகளை அறிவுசீராக இடம் அமைத்தல் என்பதானது ஒரு பிரதான, பொறுப்பான நோக்கமாகும். இதைச் சாதித்து முடிப்பது, நமது முழுப் பொருளாதாரத்தினைத் திறம்பட நிர்வகிப்பதை அனுகூலமாக்கும்.

தோழர்களே!

அரை நூற்றாண்டுக் காலமாக சோவியத் யூனியனின் பொருளாதார வளர்ச்சியானது ஐந்தாண்டுத் திட்டங்களினால் உறுதிப்படுத்தப்பட்டு வந்துள்ளது. சோவியத் மக்களது பல தலைமுறையினருக்கு, ஐந்தாண்டுத் திட்டங்கள், கம்யூனிஸ கல்வியின் அற்புதமானதோர் பள்ளிக்கூடமாகத் திகழ்ந்து வருகின்றன. ஐந்தாண்டுத் திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கும், அதன் நோக்கங்களை மேலதிகமாகப் பூர்த்தி செய்வதற்குமான பரந்துபட்ட சோஷலிஸ எழுச்சி இயக்கம் உழைக்கும் வர்க்கத்தின், விவசாயிகளின், ஆய்வறிவாளர்களது பரந்த படைப்பாற்றல் வளத்தை வெளிப்படுத்தியுள்ளது. அவர்கள் கட்சியின் கூர்நோக்கையும் திட்டங்களையும் நமது காலத்தில் எதார்த்தங்களாக மாற்றும் தங்கள் ஆற்றலை உலகுக்குக் காட்டியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டமானது, செயல் திறனினதும் தரத்தினதும் கால கட்டம் என்று நாம் முன்னர் வர்ணித்தோம். உள்தரமிக்க பயனீட்டுப் பொருட்களில் மக்களுக்குள்ள தேவைகளைத் திருப்தி செய்யும் காலகட்டத்துக்கு சோவியத் பொருளாதாரம் வந்துள்ளது. நவீன தொழில் நுட்பத்தையும், உற்பத்தியில் உத்தி முறைகளையும் பயன்படுத்துவதானது மேலும் முன்னேறுவதற்கான நிலையாக மாறியுள்ளது.

நமது பணி அனைத்தினதும் உயர்தரமானது நமது சமுதாயத்தின் செல்வாதாரத்தை உணர்வு பூர்வமாக சிக்கனமான முறையில் பயன்படுத்துவதற்கு உறுதி செய்கின்றது. கம்யூனிஸ்டுகள் எப்போதும் மக்களைச் செயற்கையாகக் கட்டுப்படுத்துவதை ஆதரிப்பவர்களல்லர். மாருக மனிதனது வினைத்திறன், மனிதனது ஆக்கும் சக்திகள் அனைத்தையும் முழுமையாகவும் சுதந்திரமாகவும் அபிவிருத்தி செய்வதென்பது கம்யூனிஸ சமூகத்தின் உள்ளடக்கமாகும். இது வாழ்க்கைக்கு அனுகூலமான பொருளாயத நிலைபாடுகளை ஆக்குவதை முன்னூக்கி விடுகிறது. ஆனல் நமது சோஷலிஸ வாழ்க்கைப் பணியானது முதலாளித்துவ உலகில் காணப்படும் ஊதாரித்தனத்தை, பொருளாயதப் பெறுமதிகளையும் உழைப்பு, சக்தி ஆகியவற்றையும் அறிவுக் கொவ்வாத வகையில் வீணுக்குதலை அறவே ஒதுக்கித் தள்ளுகிறது.

செயல் திறனையும், தரத்தையும் உயர்த்துவதென்பது தொழில் நுட்ப பிரச்சினையோ அன்றிப் பொருளாதாரப் பிரச்சினையோ அல்ல. இது ஒரு சமூக, சித்தாந்தப் பிரச்சினையாகும். இது சோவியத் சமூகத்தின் மேலும் வளர்ச்சிப் போக்கில் தொடர்ந்து செயல் படுத்தப்படும். அது தனது பங்கின் சோஷலிஸ சமூக உறவுகளையும் கம்யூனிஸ்ட் சமுதாய வாழ்வின் விதிகளையும் உறுதிப்படுத்தவும் அபிவிருத்தி செய்யவும் பங்காற்றுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய ஐந்தாண்டுத் திட்டத்தின் - பரந்த பொருளாதார, விஞ்ஞான, தொழில் நுட்ப, கலாசார வளத்தின் பணிகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதற்கவசியமான சகலதையும் நமது புகழார்ந்த லெனினிய கட்சியினால் வழிநடாத்தப் படும் சோவியத் மக்களது ஆக்கும் சக்தியையும் கொண்டுள்ளோம். ஐந்தாண்டுத் திட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதென்பது முழுக்க முழுக்க நம்மிடத்திலும் சகல சோவியத் மக்களிடத்திலும் தங்கியுள்ளது.

சோவியத் மக்கள், கட்சி மீது ஆழமான நம்பிக்கை கொண்டுள்ளார்கள். கட்சி முன்வைத்த நோக்கங்கள் நிச்சயம் அடையப் பெறும் என்பதில் அவர்களுக்கு நம்பிக்கையுண்டு. இதை பெரும் பாய்ச்சல்மிக்க உழைப்பு எழுச்சியும் நாடுபூராவினதும் அரசியல் நடவடிக்கையும் நமது தொழிலாள வர்க்கம், கூட்டுப்பண்ணை விவசாயிகள், ஆய்வறிவாளர்கள் ஆகியோரின் புதிய வெற்றிகளும் சாதனைகளும் உறுதி செய்துள்ளன.

உழைக்கும் மக்களது ஆக்க முனைப்புக்களது எழுச்சியும் கட்சி வித்த பொது லட்சியத்தின் பாலான பொறுப்புணர்வும் புதிய ஐந்தாண்டுத் திட்டத்தின் வெற்றிகளினது, கம்யூனிஸத்துக்கான போராட்டத்தின் சகல வெற்றிகளினது தீர்க்கமான காரணியாக அமைகின்றன. சகல உழைக்கும் மக்களுக்கும் கம்யூனிஸத்தின் சகல நிர்மாணிகளுக்கு

மான பத்தாவது ஐந்தாண்டுத் திட்டமானது, நமது பொருளாதார வளர்ச்சியிலும் சோவியத் மக்களது வாழ்க்கையிலும் ஒரு புதிய, உயர் மட்டத்தைக் காண்பதற்கான உறுதியான செயல்முறை வேலைத் திட்டமாகும்.

சோவியத் ஐந்தாண்டுத் திட்டங்கள், உலகின் முதலாவது உழைக்கும் மக்களது நாட்டின் சீரான சமூக, பொருளாதார முன்னேற்றத்தின் ஒரு முனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பான சின்னமாக, சமாதானத்தின்பால் அது கொண்டிருக்கும் அபிலாஷைகளின் சின்னமாக உலகெங்கும் திகழ்கிறது. சோஷலிஸ சமாஜத்தின் எழுச்சியுடன் ''ஐந்தாண்டுத் திட்டம்'' என்ற கருத்துருவமும் ஒரு புதிய சர்வதேச அர்த்தப்பாட்டைப் பெற்றுள்ளது: புதிய வாழ்வைக் கட்டியெழுப்புவதில் சோஷலிஸ உலகப் பொருளாதார அமைப்புக்கு வடிவம் கொடுப்பதிலும் உறுதிப்படுத்துவதிலும் சகோதர நாடுகளின் சமுதாய நோக்கங்களைத் தன்பால் ஈர்த்துள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சியின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையின் ஐக்கியத்தை 25 வது காங்கிரஸ் உறுதியுடன் வெளியிட்டுள்ளது. இந்த ஐக்கியமானது, கட்சியின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கை மிக உன்னதமான, மனிதநேய லட்சியத்துக்கு - கம்யூனிஸ சமூகத்தை நிர்மாணிப்பதற்கு சேவையாற்றுகிறது என்ற உண்மையினுல் அமையப் பெற்றது, உறுதிப்படுத்தப்பட்டது. இந்த நோக்கத்தை அடைவதற்காக நமது பிரதான சக்திகள் அனைத்தும், வளங்கள் அனைத்தும் சமாதான நிர்மாணத்துக்கும் மக்களது நல்வாழ்வை உயர்த்துவதற்குமாகத் திருப்பிவிடப்பட்டுள்ளது. இதற்காக நாம் நமது ஆற்றல்களனைத்தையும் சகல மக்களதும் சமாதானத்துக்கும் பந்தோபஸ்துக்குமான ஆதாரக் கால்களை உறுதிப்படுத்துவதற்காக சர்வதேச அரங்கில் பயன்படுத்துகிறோம்.

சோவியத் மக்களது அமைதி பூர்வமான உழைப்புக்கான நமது பந்தோபஸ்தானது, சமூக அமைப்பால் வேறுபட்ட நாடுகளுக்கிடையிலான உறவுகளுக்கு அடித்தளமாக விருக்கும் சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டை உதறித் தள்ளுகின்ற, முடிவமைதிப் போக்கை நாசப்படுத்தும் சக்திகள் உலகிலுள்ளவரை ஆழமாக உத்தரவாதப்படுத்தப் படவும் பாதுகாக்கப்படவும் வேண்டும். அதனுல் தான் நாம் முன்னரைப் போலவே நமது புகழ் பூத்த ஆயுதப்படைகள் பால் சோவியத் மக்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மையின்பால் பெரும் அக்கறை செலுத்து கிறோம். அவைதான் புரட்சிகர லட்சியத்தின், சோஷலிஸத்தின், மக்களது சமாதானத்தின் பாது காவலர்கள். உலகில் வேறெந்த இராணுவமாவது இத்தகைய மனிதநேய வீரார்ந்த நோக்கங்களுக்குக் கருத்துக்களுக்கு சேவை செய்யவில்லை. இதுதான் நமது சோவியத், ராணுவ, கடற்படை, முன்னணித் துருப்புகளுக்கு உள்ள மதிப்புக்கும் நாடுதழுவிய கௌரவத்துக்கும் காரணமாகும்.

புதிய ஐந்தாண்டுத் திட்டமானது தனது இயல் பினாலும் தனது முழுப் போக்கினாலும் சமாதானத் துக்கும் சர்வதேச முடிவமைதியை மேலும் காண் பதற்குமான ஒரு வேலைத் திட்டமாகத் திகழ்கிறது. அது சமாதான நிர்மாணத்தின்பால் சோவியத் மக்கள் கொண்டுள்ள மேலான அர்ப்பணிப்பை, கம்யூனிஸ்ட் கட்சியினதும் சோவியத் நாட்டினதும் சமாதானக் கொள்கையை மனிதகுலம் முழுமைக் கும் மீண்டும் காட்டியுள்ளது.

தோழர்களே! கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகளது பிரதிநிதிகளும் புரட்சிகர ஜனநாயக சக்திகளின் பிரதிநிதிகளும் கூட நமது காங்கிரஸ் பிரசன்னமாகியிருக்கிறார்கள். காங்கிரஸில் அவர் கள் உரையாற்றும் போது பொருளாதார கலாசார வளர்ச்சியில் நாம் ஈட்டிய சாதனைகளின்பால், உலக சமாதானத்தை, சோஷலிஸ அமைப்பின் வளர்ச் சியை, சர்வதேச கம்யூனிஸ, உழைக்கும் வர்க்க இயக்கத்தை தேசிய விமோசன இயக்கத்தை உத்தர வாதப்படுத்துவதற்கான போராட்டத்தில் சோ. க. க. வும் சோவியத் நாடும் மேற்கொண்ட உழைப்புக்களின்பால் தமது மரியாதையைச் செலுத்தியுள்ளனர்.

நமது பொருளாதார வெற்றிகள் உலக சோஷ லிஸத்தின் லட்சியத்துக்கு சமுதாய முன்னேற்றத் தின் மார்க்கத்துக்குச் சேவை செய்கின்றன. பத்தா வது ஐந்தாண்டுத் திட்டத்தினைச் செயற்படுத்தும் போது, நமது கட்சியும் சோவியத் மக்கள் அனை வரும் முன்னரைப் போலவே சமாதானம், தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை, சோஷலிஸம் என்ற உன்னத லட்சியத்துக்காக சகல புரட்சிகர, முற்போக்கு சக்திகளுடனும் தோளோடு தோள் நின்று போராடுவார்கள் என்பதை ஏகாதிபத்தியத்துக்கு எதிரான நமது பொதுப் போராட்டத்தில் எம்முடன் நிற்கும் எமது வெளிநாட்டு நண்பர்களுக்கும் தோழர்களுக்கும் மீண்டும் உறுதிப்படுத்த விரும்புகிறோம்.

உலக வளர்ச்சியிலான முன்னேற்றமிக்க போக்குகள், இன்னும் பெரிய அளவில் வெற்றிபெறும், அது சமாதானம், ஜனநாயகம், சோஷலிஸ சக்திகளது நலன்களுடன் முழுக்க முழுக்க இசைவிணக்கமுள்ளது என்ற நம்பிக்கையுடன் நாம் இந்த நூற்றாண்டின் இறுதிக் காலாண்டிற்குள் அடியெடுத்து வைத்துள்ளோம். இது, சோ. க. க. மத்திய கமிட்டியின் பொதுச் செயலாளர் லியோனிட் இலியெச் பிரெஷ்நேவ் காங்கிரஸில் வெளியிட்ட மத்திய கமிட்டியின் அறிக்கையில் ஆழமாக ஆராயப்பட்டுள்ளது. நமது லெனினிய கட்சியும் சோவியத் மக்கள் அனைவரும் கடந்த ஆறு தஸாப்தங்களாகத் தமது மாபெரும் நாட்டின் புதிய வாழ்வைக் கட்டியெழுப்பியதற்காக மட்டுமல்ல, உலக வரலாற்றின் முழுப் போக்கிலும் மகத்தான, பயன்மிக்க செல்வாக்கைச் செலுத்தியதற்காகவும் விரும்பப்படுகிறார்கள்.

நமது நாட்டின் கம்யூனிஸ சமூகத்தை நோக்கிய புதிய ஐந்தாண்டு பாதை ஒன்று நமக்கு முன்னால் விரிந்து கிடக்கிறது. இந்தக் கால கட்டத்தில் நமது கட்சியின் சோவியத் மக்கள் அனைவரின் ஆக்கபூர்வமான, நிர்மாண பூர்வமிக்க நடவடிக்கைகள் 25 வது காங்கிரஸின் பணிகளை செயல்படுத்துவதில் ஒரு முனைப்படுத்தப்படும். நமது காங்கிரஸினால் நிறைவேற்றப்பட்ட பணியானது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வீரமிக்க தொழிலாள வர்க்கத்தினால் மிகச் சிறந்த கூட்டுப்பண்ணை விவசாயிகளினால் மக்களது ஆய்வறிவாளர்களினால் நமது மாபெரும் லெனினிய கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்துக்களது வெற்றியின் பேரால் புதிய வீர சாதனைகள் காணப்படும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையைத் தருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவுரை

*1976 மார்ச் 3*

பிரதிநிதித் தோழர்களே,

இரண்டரை மாதங்களுக்கு மேலாக உண்மையிலேயே தேசிய வியாபகமாக நடைபெற்ற 1976-1980 தேசியப் பொருளாதார அபிவிருத்தித் திட்டத்திற்கானநகல்வழிகாட்டிகள் பற்றியவிவாதத்தின் பெறுபேறுகளை இன்று காங்கிரஸ் தொகுத்தளிக்கும். இந்த தஸ்தாவேஜு பற்றி காங்கிரஸ் எடுக்கும் முடிவுகள் எமது சமுதாயத்திற்கு பிரமாண்டமான முக்கியத்துவம் மிக்கதாகும். இவை சமூக, பொருளாதாரக் கொள்கைகளுக்கும், அடுத்த ஐந்தாண்டுகளில் கம்யூனிஸத்திற்கான பொருளாயத-தொழில்நுட்ப அடித்தளத்தை நிர்மாணிக்கும் கட்சியினதும் மக்களினதும் நடவடிக்கைகள் அனைத்திற்கும் உருவகம் கொடுக்கும்.

காங்கிரசின் ஆலோசனைக்காக மத்தியக் கமிட்டி சமர்ப்பித்துள்ள நகல் வழிகாட்டியை காங்கிரசில் உரை நிகழ்த்தியவர்கள் ஏகமனதாக ஆதரித்துள்ளனர். காங்கிரஸ் கமிஷனால் அங்கீகரிக்கப்பட்ட திருத்தங்களுடனை நகல் தஸ்தாவேஜு பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. நகல் வழிகாட்டிகள் மீதான தேசிய வியாபகமான விவாதம் ஆரம்பித்த பின்னர் சோ, க. க. மத்தியக் கமிட்டி ஆற்றிய பிரமாண்டமான பணிகளை இந்த தஸ்தாவேஜு பொதுமைப்படுத்திக் கூறுகிறது. மத்தியக் கமிட்டியின் வழிகாட்டிகள் குறித்து யூனியன் குடியரசுகளினது காங்கிரஸ்களிலும், கட்சி மாநாடுகளிலும், பத்திரிகைகளிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் அனுப்பும் கடிதங்களிலும் முன்வைக்கப் பட்ட ஆலோசனைகளை ஆராய்வதற்கு காங்கிர சுக்கு முன்னர் அரசியல் குழுவின் ஒரு விசேஷ கமிஷன் அமைக்கப்பட்டது. 25வது காங்கிரசில் பிரதிநிதிகள் முன்வைத்த ஆலோசனைகளுடன் மத்தியக் கமிட்டியின் நகல் வழிகாட்டிக்கான திருத்தங்கள் காங்கிரஸ் கமிஷனிடம் சமர்ப்பிக்கப்பட்டு அதால் விலாதிக்கப்பட்ட பின்னர் உங்களின் அங்கீகாரத்திற்காக இப்போது சமர்ப்பிக்கப்படுகிறது.

பிரதிநிதிகளுக்குத் தரப்பட்டுள்ள தஸ்தாவேஜில் சேர்த்துக் கொள்ளப்படாத பல ஆலோசனைகளும் சிபார்சுகளும் உரிய மத்திய, மாவட்ட அமைப்புகளால் கவனத்திற் கெடுத்துக்கொள்ளப் படும் என்பதுடன் முடிந்தளவு நடைமுறைப் பணிகளில் சேர்த்துக் கொள்ளப்படும்.

எமது கட்சியினது மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் தோழர் லியோனிட் பிரெஷ்னேவ் சமர்ப்பித்த அறிக்கையினதும், காங்கிரசால் அங்கீகரிக்கப்படவேண்டிய நகல் வழிகாட்டியினதும் திசைவழியில் அடுத்த சில மாதங்களில் ஐந்தாண்டுத் திட்டம் வரையறுக்கப்படுவதைப் பூரணப்படுத்துவதும், சோ. க. க. மத்தியக் கமிட்டியினது முழு நிறைவுக் கூட்டத்தினதும் சோ, சோ. கு. ஒ. சுப்ரீம் சோவியத் தொடர் கூட்டத்தினதும் ஆலோசனைக்காகச் சமர்ப்பிப்பதும் அவசியம்.

புதிய ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் எமது பொருளாதார நடவடிக்கைகள் பாரியதாக இருக்க வேண்டியுள்ளதாலும், காத்திரத் தன்மையையும் தரத்தையும் உயர்த்தவேண்டிய விசேஷ தேவைகளைக் கவனத்திற் கொண்டும் நகல் திட்டத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் வரையறுப்பதற்கு பிரமாண்டமான, சிக்கலான பணிகளைச் செய்து முடிக்க வேண்டும். தேசியப் பொருளாதாரத்தினது அனைத்துத் துறைகளிலும் திறமையும் செயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்கு ஆக்க உத்சாகத்தை அளிக்கும் எல்லையற்ற ஊற்றுக்கண்ணுக இவற்றை ஆக்கிக்கொள்ள வேண்டும்.

பத்தாவது ஐந்தாண்டுத்திட்டப் பொறுப்புக் களை வெற்றிகரமாக நிறைவேற்ற ஒவ்வொரு உழைப்புக் குழுவும் தன்னுலான தனைத்து முயற்சி களையும் மேற்கொள்ளும் என்பதையும், தமக்கு முன்னர் வைக்கப்பட்டுள்ள புதிய பணிகளை நிறைவேற்ற கட்சியால் வளர்த்தெடுக்கப்பட் டுள்ள பொருளாதார நிர்வாகிகளும்' என்ஜினியர் களும், தொழில்நுட்ப வல்லுனர்களும், முகாமை யாளர்களும் முடிந்ததனைத்தையும் செய்வார்கள் என்பதையும், எமது தாயகத்தின் விஞ்ஞான, தொழில்நுட்ப, சமூக முன்னேற்றத்தை மேலும் துரிதப்படுத்த எமது சோவியத் விஞ்ஞானிகள் புதிய வாய்ப்புகளை உருவாக்குவார்கள் என்பதை யும் சோவியத் மக்களின் அரசியல் ஒற்றுமையும், உழைக்கும் வர்க்கத்தினதும் கூட்டுப்பண்ணை விவ சாயிகளினதும் ஆய்வறிவாளிகளினதும் நலன்களி னதும் நோக்கங்களினதும் ஒருமைப்பாடும் உத்தர வாதம் செய்கின்றன, ஐந்தாண்டுத் திட்டத்தின் வெற்றி திறமையான அமைப்புப் பணிகளிலும், எவ்வித விதிவிலக்குமின்றி எமது பொருளாதார நடவடிக்கைகளின் அனைத்துப் பிரிவுகளிலும் உழைப்புப் பற்றிய பொறுப்புணர்ச்சியுள்ள மனுே பாவத்திலும், அரசாங்க, உழைப்பு ஒழுங்குகள் கருராகக் கடைப்பிடிக்கப்படுவதிலும், சோஷலிஸ உழைப்புப் போட்டியின் அளவிலும் உழைப்புப் பற்றிய கம்யூனிஸ மனுேபாவத்திலுமே தங்கியுள் ளது.

தோழர்களே,

காங்கிரசின் முடிவுகளும் 10வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நாம் நமக்கு முன்னுல் முன்வைத் துள்ள பாரிய கடமைகளும் மாபெரும் ஆற்றலை யும் உத்ஸாகத்தையும் கட்டவிழ்த்துவிடும். எனவே தான் காங்கிரசில் கட்சி முன்வைக்கும் நோக்கங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீச்சுமுள்ள நடவடிக்கைகளை உத்தரவாதப்படுத்த இது முக்கியமான முன்தேவைகளுள் ஒன்ருகும்.

ஐந்தாண்டுத் திட்டத்தின் பாரிய இலக்குகளை ஈட்டத்தக்க வகையில் பணிகளை அமைத்துக்கொள்ள பத்தாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் எமது நாட்டின் அனைத்து உழைக்கும் மக்கள் நிறைவேற்றப்படும் என்பது எமக்குத் தெரியும். மார்க்ஸிய-லெனினிய போதனைகளால் ஆயுதபாணிகளாக்கப்பட்டுள்ள, பாரிய அரசியல் அமைப்பு அனுபவச் செழுமை மிக்க எமது கம்யூனிஸ்ட்கட்சி கம்யூனிஸத்திற்கானபாதைக்குஒளியூட்டுகிறது. நிர்மாணத்தில் ஈடுபட்டுள்ள, புதியதொரு வாழ்வை நிர்மாணிப்பதில் ஈடுபட்டுள்ள பல தேசிய இன சோவியத் மக்களை கம்யூனிஸத்திற்குத் தலைமை தாங்கிச் செல்கிறது. (ஆரவாரமான, நீண்ட ஆனந்த கரகோஷம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்

# 1976 - 1980 சோ. சோ. கு. ஒ. பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படைத் திசை வழிகள்

I. சோ. சோ. கு. ஒ. பொருளாதார அபிவிருத்தியின் பெறுபேறுகள் — 11

II. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பிரதான சமூக, பொருளாதாரக் கடமைகள் — 25

III. ஆற்றலையும் தரத்தையும் அதிகரிப்பதன் மூலம் பொருளாயத உற்பத்தியை விருத்தி செய்தல் — 56

முடிவுரை — 92



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org